VOLUME : 3 ISSUE - 9

# வைகறை வெளிச்சம்

₹ 15

செப்டம்பர் – அக்டோபர் 2010 – ரம்ஜான் 1431



## பாபரி மஸ்ஜித் தீர்ப்பு

### இந்து ராஷ்டிராவை நோக்கி...

## கம்யூனிசத்தின் வீழ்ச்சி!

## உணவு பெறும் உரிமைச் சட்டம்

### ஓர் இஸ்லாமிய பார்வை

بسم الله الرحمن الرحيم

# அன்பகம்

17, மூன்றாவது குறுக்குத் தெரு, ஸ்ரீநகர் காலனி, கும்பகோணம், தஞ்சைமாவட்டம் - 612 001

குடும்பத்தோடு இஸ்லாத்தை ஏற்றுக் கொள்பவர்களுக்கு ஓர் கல்வியகம் வேண்டும் என்ற குரல் இஸ்லாத்தை ஏற்றிடும் மக்களிடமிருந்து வந்தது. இந்த ஏக்கம் போக்கிடவே அன்பகம். இதற்கு முன் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் ஆண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளும் பெண்களுக்கென ஒரு கல்வியகத்தையும் பெண்கள் காப்பகத்தையும் உருவாக்கி நடத்தியவரை தலைவராகக் கொண்டு இயங்குகின்றது இந்தக் கல்வியகம் அல்ஹம்துலில்லாஹ்.



**12.09.2007 முதல் கும்பகோணத்தில் ஓர் வாடகைக் கட்டிடத்தில் இயங்கிவருகின்றது (அல்ஹம்துலில்லாஹ்)**

குடும்பத்திலுள்ள நபர் ஒருவருக்கு ஆகும் செலவு ரூபாய் 6000/- மருத்துவ வசதிகள் உள்பட அனைத்தும் இலவசம்.

அன்பிற்கினிய சமுதாயப் பெருமக்களே!

இந்த பணிகளில் உங்களுடைய ஆலோசனைகளையும் உதவிகளையும் தாராளமாக வழங்குங்கள். இவை நமது பணிகள். இன்ஷா அல்லாஹ் நாம் அனைவரும் இணைந்து இந்த பணிகளை விரிவாக்குவோம், நிலைநிறுத்துவோம்.

செக்/டி.டி. அனுப்புபவர்கள் :

## DARUL ISLAM FOUNDATION TRUST

என்ற பெயருக்கு எடுத்து, பின் வரும் முகவரிக்கு அனுப்பவும்

52/1, மண்ணடி தெரு, 4வது மாடி, அறை எண்.7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909, கைபேசி : 9444239594

இணையதள முகவரி : www.darulislam.in, மின்அஞ்சல் : darultrust@yahoo.com

Please draw your cheques / DD in favour of **DARUL ISLAM FOUNDATION TRUST**

Canara Bank A/C 1287101017301 - Branch St. Mary's Road, R.A. Puram, Chennai.

and Send to : 52/1 Mannadi Street, 4th Floor, Room No.7, Mannadi, Chennai - 600 001.

Phone : 044-45566909 Mobile : 9444239594

E-mail : darultrust@yahoo.com Website : www.darulislam.in

இவண்

மு. குலாம் முஹம்மது *M.A. Journsalim*
மேனேஜிங் டிரஸ்டி

மௌலவி மு. முஜீபுர் ரஹ்மான் உமரி
செயலாளர்

மௌலவி கே.எம். இல்யாஸ் ரியாஜி
பொருளாளர்

(அல்லாஹ்வின் பள்ளிவாசல்களில் அவனின் திருப்பெயர் துதிக்கப்படுவதைத் தடுத்து அதைப் அழித்திட நினைப்பவனை விட மிகப் பெரிய அநியாயக்காரன் வேறுயார்? பயந்தவர்களாகவே தவிர அதில் நுழைந்திட அவர்களுக்கு தகுதியில்லை. அவர்களுக்கு இவ் உலகில் இழிவும் மறுஉலகில் கடும் தண்டனையும் உண்டு.

**(அல்குர் ஆன் 2 : 114)**


# வைகறை வெளிச்சம்

செப்டம்பர் - அக்டோபர் 2010

ரமழான் 1431

**Volume : 3 Issue : 9**



ஆசிரியர்

**மு. குலாம்முஹம்மது,** M.A.

(Journalism & Mass Communication)

துணை ஆசிரியர்

**கே.எம். இல்யாஸ் ரியாஜி**

இணை ஆசிரியர்

**எம். முஜிபுர்ரஹ்மான் உமரி**



தனி இதழ் ரூ. 10/-

**ஆண்டுச் சந்தா**

உள்நாடு ரூ.140/-

வெளிநாடு ரூ. 1000/-

பணவிடை மூலம் சந்தா செலுத்துவோர்

**வைகறை வெளிச்சம்**

என்ற பெயரிலேயே அனுப்ப வேண்டுகிறோம்.

விளம்பரங்களுக்கு : 9444239594



**VAIGARAI VELICHAM**

52/1, Mannadi Street, 4th Floor, Room-7,
Mannadi, Chennai - 600 001.

**Phone: 044-45566909 Mob: 9444239594**

E-mail: darultrust@yahoo.com

Website : www.darulislam.in



All disputes arising out of any publication in this monthly will come under the jurisdication of Chennai courts. Private circulation to promote the Original Issue.


**கவர்ஸ்டோரி**




**பக்கம் 58**


| | | |
|---|---|---|
| 1. | தரீக்குல் குர்ஆன் | 4 |
| 2. | நபிமொழி விளக்கம் | 8 |
| 3. | நாம் பிரிந்துவிட வேண்டாம் | 10 |
| 4. | 60 வயதுக்கு பிறகு. . . | 15 |
| 5. | என்கவுன்டர்கள் இதோ வெளிவருகிறதுபெரும் சதி! | 18 |
| 6. | கம்யூனிஸத்தின் வீழ்ச்சி! | 27 |
| 7. | ஈரானுக்கு எதிரான போர் தொடங்கப்பட்டுவிட்டது | 37 |
| 8. | டெல்லி ஜும்மா மஸ்ஜித் குண்டு வெடிப்பு? - குற்றவாளிகள் யார்? | 41 |
| 9. | கர்கரேயை கொலை செய்தது யார்? | 46 |
| 10. | பாபரி மஸ்ஜித் தீர்ப்பு இந்து ராஷ்டிராவை நோக்கி. . . | 52 |
| 11. | அப்துல் நாசர் மதானி கைது ஏன்? | 70 |
| 12. | கம்யூட்டர் கல்வி | 73 |
| 13. | பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை | 77 |

# தலையங்கம்

## உள்ளுவோர் உள்ளமெல்லாம் கொள்ளை போகும் உள்ளடக்கம் உள்ளது குர்ஆன்

9/11அமெரிக்காவின் இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட நாள்.

ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் 2001-ஆம் ஆண்டு நடந்த இந்த தகர்ப்புச் சம்பவத்தைத் தொலைக்காட்சியில் கண்டு உலகமே அதிர்ந்து நின்றது.

இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் அழித்தொழித்திடும் நீண்ட சதித் திட்டத்தின் ஒரு பகுதியாகவே இந்த ஈனச் செயல் நடந்தது.

ஆம்! அமெரிக்கா தன்னைத் தானே தாக்கிக் கொண்டது. பழியை முஸ்லிம்கள் மீது போட்டது. சில முஸ்லிம் பெயர்களைக் காட்டியது. இவர்கள் தாம் குற்றவாளிகள் என்றது.

இந்த நபர்கள் சில முஸ்லிம் நாடுகளில் பதுங்கியிருக்கிறார்கள் என்று முஸ்லிம் நாடுகளின் பெயர்களையும் காட்டியது.

அந்த நபர்களைத் தேட வேண்டும். பிடிக்க வேண்டும். தண்டிக்க வேண்டும் என்றது அமெரிக்கா.

அதற்கான ஆதாரங்களைக் காட்டுங்கள் என்று கேட்ட நாடுகளை மிரட்டியது. ஆதாரங்களைக் காட்டவில்லை.

அன்றே நாம் சொன்னோம். நாம் மட்டுமல்ல. நீதியில் நாட்டமுள்ள நல்லோர்களும் சொன்னார்கள். "அமெரிக்காவால் ஆதாரங்களைக் காட்டிட இயலாது. ஏனென்றால் அமெரிக்கா தன்னைத் தானே தாக்கிக் கொண்டது" என்று.

இதை நிரூபிக்கும் சான்றுகள் அடுக்கடுக்காய் வந்தன. எனினும் இலைச் சோற்றில் மலையை மறைத்திட முயன்றது அமெரிக்கா.

"இரட்டைக் கோபுரங்களைத் தகர்த்தவர்கள் முஸ்லிம்களல்ல. அமெரிக்கா தன்னைத் தானே தாக்கிக் கொண்டது" என்ற கருத்து அறிவுஜீவிகள் மனித உரிமைப் போராளிகள் வட்டாரத்தையும் தாண்டி வெகு ஜனக் கருத்தாகவும் மாறிவிட்டது. இந்தச் சூழ்நிலையில் 9/11 சம்பவம் நடந்து ஒன்பது ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்காவிலிருந்து விபரீதக் கூச்சல் ஒன்று வெளிவந்திருக்கிறது.

கிறிஸ்தவ மத போதகர்களில் ஒருவரான டெர்ரி ஜோன்ஸ் என்பவர் தனது ஆதரவாளர்கள் ஐம்பது பேருடன், நியூயார்க்கில் உலக வர்த்தக மையம் என்ற கட்டடம் இருந்த இடத்தில் செப்டம்பர் 11- 2010ல் திரண்டு உலகப் பொதுமறையாம் திருக்குர்ஆனை தீயிட்டுக் கொளுத்தப் போவதாக அறிவித்தார்.

இந்த விபரீத அறிவிப்பின் வழியாக ஒரு கருத்தைப் பதிவு செய்திட அவர் விரும்பினார். "இரட்டைக் கோபுரத் தகர்ப்பு என்ற ஈனச் செயலை முஸ்லிம்களே செய்தார்கள். அவர்களைஅவ்வாறுசெய்யத் தூண்டியது இந்தக் குர்ஆன்தான். எனவே இதன் போதனைகள் எதிர்க்கவும் எரிக்கவும்படவேண்டியவை" என்பதே அது.

சர்வதேச எதிர்ப்பின் காரணமாக அவரால் இறை வேதமாம் திருக்குர்ஆனை எரிக்கவும் முடியவில்லை. அந்தப் பொய்யைப் பதிக்கவும் இயலவில்லை.

டெர்ரி ஜோன்ஸ் என்பவரைப் போல திருக்குர்ஆனை எரித்திட வேண்டும் என்று எண்ணுவோரின் எண்ணிக்கைக்கு இங்கே ஒன்றும் குறைவில்லை.

அப்படிச் செய்து முஸ்லிம்களை வெறுப்படைய வைத்திடலாம். அதன் மூலம் எதையேனும் சாதித்துவிடலாம் என்று ஆசைப்படுவோர் திருக்குர் ஆனைப் பற்றித் தெரிந்து கொள்வது நல்லது.

அஃதோர் இறைவேதம். மனிதக் கரங்கள் எழுதிக்கொண்டவை அல்ல. மனிதத் தேவைகளை நிறைவு செய்திட இறைவன் வழங்கிய வான் மறை.

அரவமற்ற ஒரு மலையில் ஆளில்லாத குகையில் ஒரு தனி மனிதர் மீது இறக்கியருளப்பட்ட இவ்வேதம் இன்று பூமிப்பந்தில் ஆளிருக்கும் இடமெல்லாம் வாழ்கிறது. மனித மனங்களை ஆள்கிறது. ஓதியறியாத ‘உம்மீ’யின் வழியாக வல்லவன் அல்லாஹ் வழங்கிய இவ்வேதம் இன்று உலகமெல்லாம் ஓதப்படுகிது.

இதற்குக் காரணம் இது தொட்டுப் பேசாத துறைகள் இல்லை. இது விளக்கிக் கூறாத விபரங்களே இல்லை.

அல்லாஹ் கூறுகிறான் : . . . . . மனிதர்களுக்கு (முழுமையான) வழி காட்டியாகவும் நேர்வழியின் தெளிவான அறிவுரைகளைக் கொண்டதும், சத்தியத்தையும் அசத்தியத்தையும் பிரித்துக் காட்டக் கூடியதுமான குர்ஆன் இறக்கியருளப்பட்டது (2:185)

இம் மாமறையை விரித்துரைக்க முற்பட்டால் ஏடுகள் கொள்ளாது. தலைமுறைகள் போதாது.

அல்லாஹ் கூறுகிறான் : நிச்சயமாக இப்பூமியிலுள்ள மரங்கள்யாவும் எழுது கோல்களாகவும் கடல் (நீர் முழுக்க) அதனுடன் இன்னும் ஏழு கடல்களும் அதிகமாக்கப்பட்டு (அவற்றை மையமாக்கி எழுதினாலும்) அல்லாஹ்வின் வார்த்தைகள் (முடிவுறாது) வற்றிப்போகாது. நிச்சயமாக அல்லாஹ் மிகைத்தவன். ஞானம் மிக்கவன் (31:27)

பேரறிஞர் ஜலாலுத்தீன் அஸ்சுயூத்தி(ரஹ்) தனது அல்இத்கான் எனும் நூலில் “திருக்குர்ஆனில் 74,750 வகையான கல்விகள் இருக்கின்றன” என்கிறார்.

“இவ் வேதத்தை விரித்துரைத்திட வந்த ‘தப்சீர்’ எனும் விரிவுரைகள் உலகிலுள்ள பல்வேறு மொழிகளில் இரண்டு இலட்சம் தப்சீர்கள் வந்துள்ளன” என்கிறார் மவ்லானா ஸய்யித் முஹம் மது அன்வர்ஷா (ரஹ்)

“திரிப்போலியிலுள்ள நூல் நிலையத்தில் மட்டும் 20,000 க்கும் மேற்பட்ட தப்சீர்கள் உள்ளன” என்கிறார் டாக்டர் அர்னால்டு (ஆதாரம் ; தஃப்சீருல்ஹமீத், ஃபீதஃப்சீரில் குர்ஆனில் மஜீத் பக்கம் 73,74)

சிந்தித்து ஆராய்ச்சி செய்து என்னை ஏற்றுக் கொள்ளுங்கள் என்று கூறும் வேதம் பூமியின் மேல் பரப்பில் திருக்குர்ஆனைத் தவிர வேறெதுவும் இல்லை.

உள்ளுவோர் உள்ளமெல்லாம் கொள்ளை போகும் உள்ளடக்கம் கொண்ட இவ்வேதத்தின் வரிகளை ஏறிட்டுப் பார்க்காமல் “இதை எரித்துப் போடுவோம்” என பிதற்றுவோர் சில காகிதங்களை எரித்து தம் அரிப்பைத் தீர்த்துக் கொள்ளலாம். ஆனால் இதை மனனம் செய்துள்ள கோடிக்கணக்கான ஹாபிழ்களின் இதயத்திலிருந்து இவ்வேதத்தை அப்புறப்படுத்திட யார் உளர் இங்கே?

ஏறக்குறைய இருநூறு கோடிப் பேர் இவ்வான் மறையை வாழ்வியல் வழி காட்டியாக ஏற்றுக் கொண்டிருப்பதையும் அவர்களின் எண்ணிக்கை பெருகுவதையும் - அமெரிக்க காவில் அதி வேகமாக இஸ்லாம் பரவுவதையும் நிறுத்திட எந்த (Super Power) வலியசக்தி உள்ளது இங்கே?

இதற்குப் பதிலாக நீங்கள் இன்னொன்றைச் செய்யலாம்.

இது இறை வேதம் தான் என்பதில் உங்களுக்கு ஐயமிருந்தால் இது போல ஒரு வேதத்தையோ ஒரு அத்தியாயத்தையோ ஒரு வசனத்தையோ ஒரு வாக்கியத்தையோ கொண்டு வாருங்கள் பார்க்கலாம் என்று திருக்குர்ஆன் விடுக்கும் (காண்க: 2:23-11:13-10:38 - 52:33,34) சவாலை, அறைகூவலை ஏற்றுச் செயல்படுத்துங்கள்.

உங்களால் அது முடியவே முடியாது என்கிறது திருக்குர்ஆன் (காண்க: 2:24)

பிறகென்ன? அதை சிந்தியுங்கள். ஏற்றுக்கொள்ளும் வழிகளைத் தேடுங்கள்.

குர்ஆனின் வசனங்களைக் கேட்டவுடன் கோபத்தில் கண்கள் சிவக்க, வதனம் வீங்க கொடுவாளைக் கையில் ஏந்திப் புறப்பட்ட உமர்பின் கத்தாப் திருக்குர்ஆனைத் தொகுத்திட வழி வகுத்தார்.

இப்படி எதிர்ப்போரையெல்லாம் வாரியணைத்த வரலாறு திருக்குர்ஆனுடையது. அந்த வழி திறந்தேயிருக்கிறது அனைவருக்கும். அதை விடுத்து போகாத ஊருக்கு வழி சொல்லும் பொல்லாத செயலைச் செய்திட வேண்டாம்.

“இவ் வேதத்தை நாமே இறக்கியருளினோம். இதை நாமே பாதுகாப்போம்” (15:9)

# தரீக்குல் குர்ஆன் 31



**இல்யாஸ் ரியாஜி**

41 وَاٰمِنُوْا بِمَآ اَنْزَلْتُ مُصَدِّقًا لِّمَا مَعَكُمْ وَلَا تَكُوْنُوْٓا اَوَّلَ كَافِرٍ بِهٖ وَلَا تَشْتَرُوْا بِاٰيٰتِىْ ثَمَنًا قَلِيْلًا وَّاِيَّاىَ فَاتَّقُوْنِ ○

## வசனம் 41:

**“உங்களுடனுள்ள (தவ்ராத் வேதத்) தை உண்மைப் படுத்தும் வகையில் நான் இறக்கியருளியிருக்கின்ற (இவ்வேதத்)தை நம்புங்கள். இதை மறுப்பவர்களில் முதலாமவர்களாக நீங்கள் ஆகிவிடவேண்டாம். என் வசனங்களைச் சொற்ப விலைக்கு நீங்கள் விற்றுவிட வேண்டாம். எனக்கே அஞ்சுங்கள்”**

இவ்வசனத்தில் இஸ்ரவேலர்களுக்கு அல்லாஹ் தன் கட்டளைகளை பிறப்பித்துள்ளான்.

1. **தவ்ராத்தை உண்மைப்படுத்துகின்ற திருக் குர்ஆனை நம்புங்கள்.**
2. **இதை முதலில் மறுப்பவர்களாக நீங்கள் இருக்க வேண்டாம்.**
3. **வேத வசனங்களை சொற்ப விலைக்கு விற்க வேண்டாம்.**
4. **அல்லாஹ்வுக்கு மட்டுமே அஞ்சுங்கள்.**

### முதலாம் கட்டளையின் விளக்கம்:

ஷஹீத் ஸய்யித் குதுப் (ரஹ்) கூறுகின்றார்கள்: எல்லாம் வல்ல அல்லாஹ்வின் இறுதித் தூதர் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கொண்டு வந்த இஸ்லாம் மனித இனம் தோன்றிய நாளில் அல்லாஹ் தந்த மார்க்கத்தின் தொடர்ச்சிதான். இறைவனின் தூதுச் செய்தியின் தொடர்தான். ஆரம்பத்தில் தோன்றிய அம்மார்க்கத்தில் மனித குலத்தில் நீண்ட நெடிய எதிர்காலத்துக்கு ஏற்றவாறு பல சீர்திருத்தங் களையும் நன்மைகளையும் அல்லாஹ் இணைத்தான் தவ்ராத் (பழைய ஏற்பாடு) இன்ஜீல் (புதிய ஏற்பாடு) ஆகியன இதில் ஓர் அங்கம்தான். இந்த ஒரே மார்க்கத்தின் மூலம் மனிதகுலம் முழுவதையும்

அன்புசால் சகோதரர்களாக ஒன்றிணைக்கிறான். அல்லாஹ்வின் மார்க்கத்தை அவனின் ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டவர்கள் அனைவரும் ஒரே இனம்தான். பல இனங்களாக பிரிவுகளாக துண்டு துண்டாகப் பிளவுபடாத ஒரே இனம். அல்லாஹ்வின் அடியார்கள் அவனை ஏற்றுக் கொண்டவர்கள் என்ற இனம். மனித வாழ்வின் உதயப் பொழுதி லிருந்து என்றென்றும் மாறிடாமல் இருக்கின்ற அந்த மார்க்கத்தை ஏற்பவர்கள் அல்லாஹ்வின் அடியார்கள். அந்த மார்க்கத்துக்கு அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மூலம் அல்லாஹ் இறுதி வடிவம் தந்தான்.

இஸ்ரவேலர்களை அல்லாஹ் இங்கே இப்படி எச்சரிக்கின்றான். உங்களின் முன்னால் விரிந்து கிடக்கும் உலகின் அற்ப நலன்களுக்காக குறிப்பாக இஸ்லாத்தை ஏற்றால் தலைமை பதவி பறிபோய் விடும் என்று அஞ்சுகின்ற யூதமத குருமார்கள் தங்களின் நலன்களுக்காக தவ்ராத்தை உண்மைப் படுத்துகின்ற இவ்வேதத்தை ஏற்காம விருந்துவிட வேண்டாம் என எச்சரித்து தன்னை மட்டும் அஞ்சிக் கொள்ளும்படி வலியுறுத்துகிறான். (நூல்: பீழி லாலில் குர்ஆன்)

மனித குலத்துக்கு அல்லாஹ் உவந்தளித்த மார்க்கமே இஸ்லாம். அதன் படிப்படியான வளர்ச்சி மற்றும் சீர்திருத்தத்தின் ஓர் அங்கமே தவ்ராத் வேதம். தவ்ராத்தைப் பெற்ற நீங்கள் மார்க்கத்துக்கு அல்லாஹ் அளிக்கும் இன்னொரு சீர்திருத்தம் மற்றும் இறுதிச் சீர்திருத்தம் இவற்றின் அடையாளமான குர்ஆனை ஏற்க மறுப்பதில் எந்த நியாயமும் இல்லை என்பதே பொருள்.

**இரண்டாம் கட்டளையின் விளக்கம்:**

இவ்வேதத்தை முதன் முதலில் மறுப்பவர் களாக நீங்கள் இருக்க வேண்டாம், என்று கூறுவதன் காரணம் என்னவென்றால் எந்தக் குற்றத்தையும் முதன் முதலில் செய்பவன் அக்குற்றத்தை உலகுக்கு அறிமுகப்படுத்தியவனாகிறான். மற்றவன் அதே குற்றத்தைச் செய்வதற்கு இவன் வழிகாட்டியாக ஆகிவிடுகிறான். இவன் அறிமுகப்படுத்தி வழி காட்டிய குற்றத்தை இவனுக்குப் பிறகு யார் செய்தாலும் எத்தனை முறை செய்தாலும் அவர் களுக்கு அதன் பாவம் எழுதப்படுவது போல அதிலிருந்து சற்றும் குறைக்கப்படாமல் அறிமுகப் படுத்தியவனுக்கும் அதே அளவு பாவம் எழுதப்படும். அவன் தண்டிக்கப்படுவான்.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "யார் மக்களை நேர்வழியில் அழைக்கிறாரோ அவரை பின்பற்றக் கூடியவர்களுக்கு கிடைக்கும் அதே அளவு கூலி அவருக்கும் உண்டு. அதற்காக அவர்களின் கூலி கொஞ்சமும் குறைக்கப்படாது. யார் மக்களை தவறாக வழிகெடுக்கிறாரோ அவரைப் பின்பற்றக் கூடியவர்களுக்கு கிடைக்கும் அதே அளவு தண்டனை அவருக்கும் உண்டு. அதற்காக அவர்களின் தண் டனையில் சிறிதும் குறைக்கப் படாது" (நூல்: முஸ்லிம்)

எனவே பனீ இஸ்ராயீல்களில் முதன் முதலில் முஹம்மது நபி (ஸல்) அவர்களையும் திருக்குர் ஆனையும் மறுப்பவர்களாக மதீனாவாழ் யூதர்கள் இருந்தால் அவர்கள் ஒரு வரலாற்று இழிவுக்கு இலக்காவார்கள். இந்தக் கேவலத்திலிருந்து அவர் களைக் காத்திடவே அல்லாஹ் அப்படிக் கூறினான். ஏனெனில் இனி எக்காலமும் யாரேனும் ஒரு யூதன் இஸ்லாத்தை நோக்கி அழைப்பு விடுக்கப் பட்டு அதை ஏற்க மறுத்தால் அவனுக்கு கிடைக்கும் அதே அளவு தண்டனை மதீனாவாழ் யூதர்களுக்கும் கிடைக்கும் அல்லவா?

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் துக்கு முன்னர் மக்காவில் ஏகத்துவப்பிரச்சாரத்தை முன் னெடுத்துச் சென்றபோது குரைஷிகள் அதை மறுத் தனர். ஏற்கவில்லை. எனவே ஏகத்துவத்தை முதலில் மறுத்தவர்கள் குரைஷ்கள் தான். ஆயினும் இவ்வசனத்தில் "அதை மறுப்பவர்களில் முதலாமவர் களாக நீங்கள்ஆகிவிட வேண்டாம்" என பனீ இஸ்ராயில்களை யூதர்களை நோக்கி அல்லாஹ் கூறுவதன் பொருள் என்னவென்றால் மதீனாவாழ் யூதர்களே! உலகில் வாழும் யூதர்களில் திருக்குர் ஆனை ஏற்க மறுப்போராக முதலில் நீங்கள் இருக்கவேண்டாம் என்பதாகும். ஏனெனில் மதீனா வாழ் யூதர்களிடம் தான் குர்ஆன் வழியாக பேசப்பட்டு ஏகத்துவம் எடுத்துரைக் கப்பட்டது. (நூல்: இப்னுகதீர்)

**மூன்றாம் கட்டளையின் விளக்கம்:**

பனீ இஸ்ராயீல்களுக்கு அல்லாஹ் வழங்கிய தவ்ராத் வேதத்தில் உள்ள உண்மைகளை யூத குருமார்கள் தங்கள் வசதிக்கு ஏற்ப மறைத்துக் கொண்டிருந்தனர். தங்களின் உல்லாச வாழ்க்கைக் கும் சல்லாப சந்தோஷங்களுக்கும் இடையூறு வந்தி டாதவாறு இறைவேதத்தை வளைத்துக் கொண்டி ருந்தனர். செல்வந்தர்களும், செல்வாக்குப் பெற்ற

பிரமுகர்களும், அவர்கள் தம் குடும்பத்தவரும் குற்றமிழைத்துவிட்டால், போலித் தீர்ப்புகள் வழங்கி மெல்லிய தண்டணைகளைத் தந்தனர். இதற்காக அந்த செல்வந்தர்களிட மிருந்தும் கோமான்களிட மிருந்தும் தங்களுக்குத் தேவையானதைப் பெற்றுக் கொண்டனர்.

இறைவனின் வசனங்களை இருட்டடிப்புச் செய்கின்ற இழிச்செயலை அண்ணல் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் அவர்கள் செய்து வந்தனர். ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் உமர் (ரழி) கூறு கின்றார்கள்: 'ஒரு முறை யூதர்களில் சிலர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து 'யூத குலத்தைச் சார்ந்த ஆணும் பெண்ணும் விபச்சாரம் செய்து விட்டனர் என்று கூறினார்கள். அதற்கு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் "தவ்ராத் வேதத்தில் (விபச்சாரம் செய்தவர்களை) கல்லால் எறிந்து கொல்லுவது பற்றி என்ன கூறப்பட்டுள்ளதாக நீங்கள் அறிந்துள்ளீ ர்கள்?" என்று கேட்டார்கள். அப்போது அவர்கள் 'விபச் சாரம் செய்தவர்களை நாங்கள் இழிவுப்படுத்துவோம். அவர்களுக்கு கசையடி தரப்படும்' (கல்லால் அடித்துக் கொல்வதுப்பற்றி தவ்ராத்தில் கூறப்பட வில்லை?) என்று கூறினர்.

(தவ்ராத் வேதத்தை நன்கறிந்தவரும் யூதராக இருந்து இஸ்லாத்தை ஏற்றவருமான) ஹழ்ரத் அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரழி) உடனே கூறினார்கள் : "நீங்கள் பொய்சொல்கிறீர்கள். நிச்சய மாக தவ்ராத்தில் கல்லால் எறிந்துகொல்வது பற்றிக் கூறப்பட்டுள்ளது". உடனே யூதர்கள் தவ்ராத்தைக் கொண்டு வந்தனர். அதனைத் திறந்தனர். அப்போது அங்கிருந்த யூதர்களில் ஒருவன் கல்லால் எறிந்து கொல்லுவதுபற்றி கூறும் வசனத்தை தன் கையால் மறைத்துக் கொண்டான். அதற்கு மேல் வசனத்தை யும் கீழ் வசனத்தையும் படித்தான்.

அப்போது அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரழி) அவர்கள் அவனிடம் "கையை எடு" என்றார்கள். அவன் எடுத்தான் அங்கே கல்லால் எறிந்து கொல்வது பற்றிய வசனம் இலங்கிக் கொண்டிருந்தது. உடனே அவர்கள் "முஹம்மதே (ஸல்) அப்துல்லாஹ் பின் ஸலாம் (ரழி) கூறுவது உண்மைதான் இதோ அந்த வசனம் உள்ளது. எனினும் எங்களுக்கிடையே நாங்கள் தான் அதை மறைத்துக் கொண்டிருந்தோம்" என்று கூறினார்கள். உடனே அண்ணல் நபி (ஸல்) அவர்கள் விபச்சாரம் செய்த அவ்விருவரையும் கல்லால் எறிந்து கொல்லும்படி கட்டளையிட்டார் கள். அவ்வாறு செய்யப்பட்டது'. (நூல்: புஹாரி, முஸ்லிம்)

தங்களின் வாழ்க்கைக்கும் வசதிக்கும் ஏற்றவாறு வேதவசனங்களை வளைத்து திரித்து மறைத்து அல்லாஹ்வுக்கு துரோகம் செய்து கொண்டிருந்தனர் யூதர்கள். மேலும் பின்னால் இறுதித் தூதர் ஒருவர் புதிய வேதத்துடன் மக்களை வழி நடத்திட வருவார். அவரை ஏற்றுப் பின்பற்ற வேண்டும் என்றும் தவ்ராத்தில் அல்லாஹ் யூதர்களுக்கு உத்தரவிட்டிருந் தான். இந்த உண்மையை அவர்கள் தவ்ராத்திலிருந்து ஒரேயடியாக அகற்றிவிட்டனர். ஏனெனில் இது மக்களுக்குத் தெரிந்தால் இச்செய்தி பரவினால் தம் தலைமைப் பதவி பறிபோய்விடும். தமது செல்வாக்கு மண்மூடிப்போய்விடும் என்று அஞ்சினர். இப்படி தலைமைப் பதவியை நீடிப்பது செல்வந்தர்களிட மிருந்து வசதிகளைப் பெற்றுக் கொள்வது ஆகிய உலகின் அற்ப சுகங்களுக்காக வேத வசனங்களை அவர்கள் புரட்டியதை அல்லாஹ் கண்டிக்கிறான்.

இப்படி வசதிக்கேற்ப மறைவசனங்களைத் திரிப்பதற்காக யூத மத குருமார்கள் பெரும் செல்வங் களையே கூலியாகப் பெற்றனர். எனினும் 'சொற்ப விலை' என்று அதை அல்லாஹ் கூறுவதன் காரணம் என்னவெனில் உலகின் செல்வங்கள் அனைத்தும் சேர்ந்தாலும் அவை சொற்பமானதுதான்.

அல்லாஹ் கூறுகின்றான் "உலகின் செல்வங்கள் அற்பமானவைதான் என்று நபியே கூறுவீராக".

**(அல்குர்ஆன் 4:77)**

இந்தக் கட்டளை பனீஇஸ்ராயீல்களிடம் கூறப்பட்டிருப்பினும் அதே வேலையைச் செய்கின்ற அனைவரையும் இது உள்ளடக்கும். யாரேனும் ஒருவன் உண்மையை மறைக்கவோ அதை மாற்றவோ லஞ்சம் பெற்றால் அல்லது கடமையான ஒன்றை கற்றுத் தர மறுத்தால் தான் கற்றிருப்பவற்றை நிறை வேற்ற மறுத்தால் கற்றுக்கொடுக்க வேறுயாரும் இல் லாதபோது கற்பிப்பதற்காக கூலியை நிர்ணயித்துப் பெற்றால் அவர்களும் இந்த இறைகட்டளையின் கீழ்வருவர்.

அண்ணல் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: "அல்லாஹ்வின் திருப்தியை மட்டும் நாடிக் கற்கவேண்டிய கல்வியை உலகத்தின் செல்வங்களை அடைந்து கொள்வதற்காகக் கற்பவன் கவனத்தின் வாடையைக்கூட நுகரமாட்டான்" (நூல்: அபூதாவூத், இப்னுமாஜா) அல்லாஹ்வே எல்லாம் அறிந்தவன் (குர்த்துபீ)

மார்க்கக் கல்வியைக் கற்றுக் கொடுக்கின்ற (தகுதி உள்ள நபர்) ஒருவர் மட்டும் இருந்தால் அவர் ஊதியத்தை நிர்ணயித்துப் பெறக்கூடாது. வேண்டு மானால் பைத்துல் மால் என்ற பொது நிதியிலிருந்து தமக்கும் தன் குடும்பத்தவருக்கும் தேவையானதைப் பெற்றுக் கொள்ளலாம். கல்வி கற்றுக் கொடுக்க பலர் இருக்கிறார்கள் எனும் போது (தன்நேரத்தை கற்பிப்பதில் செலவிடுகிறார்கள் என்பதால்) ஊதியம் பெறலாம். பொது நிதியத்திலிருந்து எதுவும் கிடைக் காவிடில், கற்பித்தால் வேறு சம்பாத்தியம் ஈட்ட இயலாது என்பதால் இவர் ஊதியம் பெறலாம். இமாம் மாலிக்(ரஹ்) உள்ளிட்ட முக்கிய பெரும் பாலான அறிஞர்கள் இவ்வாறு கூறியுள்ளனர். (இப்னு கதீர்).

மார்க்கத்தை நிலை நாட்டுவதற்காக (தீன் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு உதவுவது மக்களை வழி நடத்தும் தலைவருக்கு கடமையாகும். அவர் அதை செய்யத் தவறினால் முஸ்லிம்கள்மீது அது கடமையாகும். ஏனெனில் ஹஜ்ரத் அபூபக்ர் (ரழி) அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற போது தம் குடும்பத்தவரின் பராமரிப்புச் செலவுக்கு ஏதும் இல்லாத நிலை ஏற்பட்டது. அப்போது அவர்கள் ஜவுளி வியாபாரம் செய்திட கடைத்தெருவுக்கு சென்றார்கள். இதன் பின்னர் அவர்களின் குடும்பச் செலவுகளுக்குப் போதுமான அளவு அவர்களுக்கு பொதுநிதியிலிருந்து பணம் வழங்க ஏற்பாடாயிற்று (குர்த்துபீ)

பேரறிஞர் இப்னுகதீர் அவர்கள் தம் கூற்றுக்கு நபி மொழிகளிலிருந்து சான்று காட்டியுள்ளார்கள். ஹஜ்ரத் அபூஸயீத் அல் குத்ரி (ரழி) அவர்கள் அறிவிக்கின்ற புஹாரியில் இடம் பெற்றுள்ள ஹதீஸில் விஷக்கடிக்கு ஆளான ஊர்த்தலைவர் ஒருவருக்கு நபித்தோழர் ஒருவர் ஓதிப் பார்த்து ஆட்டு மந்தையை கூலியாகப் பெற்ற சம்பவத்தின் போது நபி (ஸல்) அவர்கள், “நீங்கள் கூலி பெற்றிட மிகவும் தகுதி வாய்ந்தது அல்லாஹ்வின் வேதமாகும்” எனக் கூறினார்கள். மேலும் ஒரு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ள விரும்பிய ஒரு நபித்தோழர் தம்மிடம் அப்பெண்ணுக்கு மஹராகக் கொடுக்க ஏதும் இல்லை என்று கூறிய போது அவரிடம், “உம்மிடம் உள்ள திருக்குர்ஆன் அத்தியாயங்களை (பெண்ணுக்கு கற்றுத்தருவதை) மஹராக வைத்து உங்களிரு வருக்கும் நான் மணமுடித்துவைக்கிறேன்”என்று நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

***(நூல்: புஹாரி, இப்னுகதீர்)***

இமாம்குர்துபீ அவர்களும் பல ஹதீஸ்களை ஆதாரம் காட்டியே கருத்துக் கூறியுள்ளார்கள்.

**நான்காம் கட்டளையின் விளக்கம்:**

யூத மத குருமார்கள் தவ்ராத் வசனங்களை திரித்தும் மறைத்தும் கொண்டிருந்ததற்கு தங்களின் தலைமைப் பதவி பறிபோய்விடக் கூடாது என்று அஞ்சியதும் ஒரு காரணம் ஆகும். எனவே அல்லாஹ் அவர்களிடம் “எனக்கு மட்டும் அஞ்சுங்கள்” என்று வலியுறுத்துகிறான்.

அண்ணல் நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: “யார் மீதுள்ள அச்சமும் உண்மையை நிலைநாட்டு வதை விட்டும் உண்மையை உரைத்திடுவதை விட்டும் உங்களைத் தடுத்துவிட வேண்டாம். அது எப்படிப் பட்ட உண்மையாக இருந்தாலும் சரி”.

***(அறிவிப்பாளர்: அபூ சயீத், (ரழி)***
***நூல்: அஹ்மத், 11281)***

மனிதர்கள் மீதான அச்சமும் பயமும் விலகிட இறையச்சம்தான் ஒரே வழி. மேலும் தக்வா எனும் இறையச்சம் இருந்தால் திருக்குர்ஆனையும் இறுதித்தூதரையும் புறக்கணிப்பது, அல்லாஹ்வின் வசனங்களைத் திரிப்பது போன்ற பாவச் செயல்களில் நீங்கள் ஈடுபடமாட்டீர்கள்’என்று அறிவுறுத்துவதாக இவ்வாக்கியம் அமைந்துள்ளது.

இன்ஷா அல்லாஹ்

**தொடரும். . .**


## தமிழன் தொலைக்காட்சியில் தரீக்குல் குர் ஆன்

**வைகறை வெளிச்சம் துணை ஆசிரியர் மௌலவீ இல்யாஸ் ரியாஜி-யின் திருக்குர் ஆன்விரிவுரை தமிழன் தொலைக்காட்சி யில் ஒளிபரப்பாகிறது.**

**வாரந் தோறும் செவ்வாய்க் கிழமை இரவு 10.00 மணி முதல் 10.30 வரை ஒளிபரப் பாகும் இந்நிகழ்ச்சியை RSD நிறுவனம் நடத்துகிறது. காணத் தவறாதீர்கள்!**

**இது வரை ஒளிபரப்பான உரைகள் குறுந் தகடுகளாகவும் (DVD) கிடைக்கும்**

தொடர்புகளுக்கு : **காயல் தர்வேஷ்**
**9841898044**

# நபி மொழி விளக்கம் -29

# இளமையில் ஹஜ்

وعن الفضل بن عباس رضي الله عنه عن النبي ﷺ أنه قال: «من أراد الحج فليتعجل، فإنه قد يمرض المريض، وتضل الضالة، وتعرض الحاجة»

**அண்ணல் நபி - ஸல் - கூறினார்கள்:**

**ஹஜ் செய்திட விரும்புபவர் விரைவாக அதை நிறைவேற்றட்டும். ஏனெனில் அவர் நோயுற்று விடலாம். வாகனம் கிடைக்காமல் போகலாம். தேவைகள் குறுக்கிட்டுவிடலாம். (அறிவிப்பாளர் : பள்ல்பின் அப்பாஸ் (ரழி) நூல் : அஹ்மது)**

ஒவ்வொரு முஸ்லிமுக்கும் அவர்தம் வாழ்வின் மிக முக்கியமான லட்சியங்களில் ஒன்றாகத் திகழ்வது ஹஜ்.

ஆம்! ஹஜ்ஜுக்குச் செல்வதை விரும்பாத முஸ்லிம் யாருமில்லை. உலகத்தின் இதயமாம் புனிதமிக்க கஅபா ஷரீஃபை ஆயுளில் ஒரு முறையாவது நேரில் பார்த்து விட வேண்டும் என்று ஏங்கித் தவிப்பவர்கள் அங்கே சென்று விட்டால் மீண்டும் மீண்டும் அங்கே சென்றி வேண்டும் என்றே விரும்புவார்கள்.

அது கஅபாவின் சிறப்பு. அதன் ஈர்ப்பு. தனித் தன்மை.

ஹஜ்ஜுக்குச் சென்று திரும்பிய அனைவருமே இன்னொரு உணர்வையும் பெற்றுவிடுவார்கள். அது "இன்னும் விரைவாக இந்த அமலைச் செய்திருக்கலாம்" என்பதே.

உடல் நலிவுற்று வியாதிகளின் இருப்பிடமாக ஆனதற்குப் பிறகு தான் ஹஜ் செய்திட வேண்டும் என்றொரு எண்ணம் எப்படியோ ஊடுருவிவிட்டது சமுதாயத்தில். இது மிக மிகத் தவறான சிந்தனை.

இதர இபாதத்களைப் போலவே பருவ வயதை அடைந்த ஆண், பெண் அனைவர் மீதும் ஹஜ் கடமையாகி விடுகிறது அவர்களுக்கு உடல் பலமும் பொருள் வசதியுமிருந்தால்.

இந்த இபாதத்தை ஆயுளின் இறுதிவரை தள்ளிப் போடுவது தவறு. சொல்லப் போனால் உடல் நலிவுற்று பின் ஹஜ் செல்பவர்கள் சரியாகவும் உற்சாகமாகவும் அமல்களில் ஈடுபட முடியாமல், இயலாமல் தவிப்பதை அங்கு காணமுடியும்.

ஹஜ்ஜுடைய நாட்களான துல்ஹஜ் பிறை எட்டு முதல் பதிமூன்று (அல்லது பனிரெண்டு) வரைமுற்றிலும் மாறுபட்ட சூழலில் வசதி குறைவான இருப்பிடத்தில் தங்கியிருந்து அந்த இபாதத்தை நிறைவேற்றிட அந்த முதியவர்கள் சிரமப்படும் போது இளமையாக இருக்கும்போது ஹஜ்ஜை நிறைவேற்றியிருக்க வேண்டும் என்று அவர்களுக்குத் தோன்றும்.

அப்போது ஏங்குவதிலோ வருத்தப்படுவதிலோ ஒருபலனும் இல்லை.

வாகனம் கிடைக்காமல் போகலாம். நோயுற்றுவிடலாம்.

வேறு தேவைகள் தடையாக வந்துவிடலாம். எனவே ஹஜ்ஜை விரைவாக நிறைவேற்றி விடுங்கள் என்ற நபி மொழி எவ்வளவு சத்தியமான உண்மை என அப் போது விளங்கிடுவார்கள்.

“முதுமையில் தான் ஹஜ்” என்ற கலாச்சாரம் ஒழிய வேண்டும். “இளமையில் ஹஜ்” என்ற புதிய புரட்சி மலர வேண்டும்.

அப்போது தான் சுறுசுறுப் புடனும் உற்சாகத்துடனும் அமல் களில் ஈடுபடமுடியும். வர லாற்றுச் சிறப்புமிக்க இடங் களைக் காணச் சென்றிடமுடியும். இல்லையென்றால் ‘ஹஜ்’ என்பது முதுமையான ஒரு சடங்காக மாறிவிடும்.

**தவறான மற்றொரு சிந் தனை:**

ஒருவருக்கு எல்லாத் தேவைகளும் நிறைவேறி வாய்ப் பும் வசதியும் செல்வமும் வனப்பும் வளமும் அவரது வாழ்வில் நிரம்பி வழியும் போதுதான் அவர் ஹஜ் செல்வதைப் பற்றியே யோசிக் கிறார். இதுவும் தவறானதே.

> **“முதுமையில் தான் ஹஜ்” என்ற கலாச்சாரம் ஒழிய வேண்டும். “இளமையில் ஹஜ்” என்ற புதிய புரட்சி மலர வேண்டும்.**

ஆனால் குறைந்த வாய்ப்பு வசதிகள் இருந்தாலே அவர் ஹஜ்ஜுக்கு வர வேண்டும் என்பதே அல்லாஹ்வின் விருப்பம்.

அல்லாஹ் கூறுகிறான் “நாம் இபுராஹீம் நபியிடம் கூறினோம்:) மக்களிடத்தில் ஹஜ்ஜைப் பற்றி அறிவி(த்து அழை)ப்பீராக. அவர் கள் நடந்தவர்களாகவும் வெகு தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகைகள் மீது (பயணித்து)ம் உம்மிடம் வருவார்கள்” (22:25)

இபுராஹிம் நபியின் அழைப்பை ஏற்று ஹஜ்ஜுக்கு வரக் கூடியவர்களை இருவகை யாக அல்லாஹ் கூறியுள்ளான். “நடந்தவர்களாக”, “மெலிந்த ஒட்டகங்கள் மீது பயணித்தவர் களாக” என்கிறான்.

அதுமட்டுமின்றி “தூர தொலைவிலிருந்து வரும் மெலிந்த ஒட்டகம்” என்கிறான்.

இவ்வசனம் நடந்துதான் ஹஜ்ஜுக்கு வரவேண்டும் என்றோ மெலிந்த ஒட்டகத்தின் மீது தான் வரவேண்டும் என்றோ கூறவில்லை. மாறாக அல்லாஹ்வின் அழைப் பை ஏற்று புனித ஹஜ்ஜை நிறை வேற்றிட வருபவர்கள் காத்திருக்க மாட்டார்கள். குறைந்தபட்ச வசதிகளை பயன்படுத்தியாவது ஹஜ்ஜுக்கு வந்திட வேண்டும் என்று ஆர்வப்படுவார்கள் என் பதே அவ்வசனத்தின் கருத்து.

தூர தொலைவிலிருந்து வருவதாக இருந்தால் ‘கொழுத்த ஒட்டகம்’ ‘வலிமையான வாகனம்’ என்று கூறுவதே பொருத்தமாக இருக்கும். எனினும் அல்லாஹ் “தூர தொலைவிலிருந்து மெலிந்த ஒட்டகத்தில் வருவார்கள்” என்று கூறியுள்ளான். இதன் பொருள்; வாகன வசதியின்மையையோ தொலைவையோ காரணம் காட்டி ஹஜ்ஜுக்கு வருவதை தள்ளிப் போட மாட்டார்கள் என்பது தான்.

**இறுதிக் கடமையா?**

இந்த புனித ஹஜ்ஜை “இறுதிக் கடமை” என்று நாம் கூறுவதுண்டு. இதன் பொருள்; இது வாழ்வின் இறுதியின் செய்ய வேண்டிய கடமை என்பதல்ல.

முதுமையடையும் வரை நாம் வாழ்வோம் என்பதற்கு எந்த உத்தரவாதமும் இல்லாத நிலையில் எப்போது வேண்டு மானாலும் மரணம் நம்மை தழுவிக் கொள்ளும் என்ற நிலையில் ஹஜ்ஜை வாழ்வின் இறுதிவரை தள்ளிப் போடுதல் என்பது புத்திசாலித்தனமான செயல் அல்ல.

இறுதிக் கடமை என்ற பெயர் வந்ததற்கு காரணம் தொழுகை, ஜகாத், நோன்பு ஆகிய கடமைகளுக்குப் பின்னர் கடைசி யாகவே ஹஜ் கடமையாக்கப் பட்டது என்பதனால் தான்.

தொழுகை ஹிஜ்ரத்துக்கு முன்னர் கடமையானது. ஜகாத், நோன்பு இவ்விரண்டும் ஹிஜ்ரி இரண்டாம் ஆண்டில் கடமை யானது. ஹிஜ்ரி எட்டாம் ஆண்டில்தான் ஹஜ் கடமை யானது. எனவே இது கடமை களில் இறுதியாக வந்த கடமை என்பதே இறுதிக் கடமை என்பதன் பொருள்.

எனவே முதுமையின் சடங்குகளில் ஒன்றாக ஹஜ் மாற்றப்படும் அவலம் நீங்க வேண்டும். “இளமையில் ஹஜ்” ஒரு கலாச்சாரமாகமாற வேண்டும்.

***இல்யாஸ் ரியாஜி***

# நாம் பிரிந்து விட வேண்டாம் 19



சில அறிஞர்களின் ஆராய்ச்சி முடிவைப்பற்றி "அது தரமற்றகருத்து தள்ளிவைக்கப்பட வேண்டிய கருத்து பலஹீனமான கருத்து" என்றெல்லாம் கூறப்படுவதை பொத்தாம் பொதுவாக அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றில்லை ஏனெனில் தள்ளிவைக்கப்பட்ட எவ்வளவோ முடிவுகள் பின்னர் பிரபலமானவையாகியிருக்கின்றன. ஒரு காலத்தில் பலஹீனமாகயிருந்த எவ்வளவோ கருத்துக்களை உறுதிசெய்து பலமுள்ளதாக்குவோர் வந்துள்ளனர். ஒரு நேரத்தில் தரமற்ற கருத்தாக இருந்ததை சீர்படுத்தி ஆதாரங்களைக் காட்டும் நபர்கள் மூலம் அல்லாஹ் அதை தரமுள்ளதாக்கியுள்ளான். கடைசியில் அதுவே முக்கியமான ஃபத்வா என்றாகியுள்ளது.

இங்கே இதற்கு நாம் உதாரணமாக ஷைகுல் இஸ்லாம் இப்னுதைமிய்யா (ரஹ்)வின் முடிவுகளையே கூறினால் போதுமானது. இதற்காக தமது வாழ்வில் அவர் என்னவெல்லாமோ சந்திக்க நேர்ந்துள்ளது?

அவரின் முடிவை மொத்த சமுதாயத்துக்கும் எதிரானது என்று கூறியவர்களுமுண்டு. அவரின் மரணத்துக்குப்பின் சில நூற்றாண்டுகள் கழிந்தன. நமது காலமும் வந்தது. இப்போது முஸ்லிம் சமுதாயத்தை வீழ்ச்சியிலிருந்தும், அழிவிலிருந்தும் காப்பாற்றும் கப்பல்கள் (போன்ற விஷயங்கள்) அவரின் கருத்துக்களிலிருப்பதைக் காணமுடிகிறது.

புதிதாய்த் தோன்றியுள்ள வெளிரங்க வாதிகள் என்று நான் பெயர் வைத்துள்ளாளவர்களான புதுமைவாதிகளின் ஆபத்து என்னவென்றால் ஆராய்ச்சிக்குரிய ஷரிஅத் பிரச்சனைகளில் அவை பிரிவுச் சட்டங்களாக இருப்பினும் அல்லது அசல் சட்டங்களாக இருப்பினும் சரி அவற்றில் கருத்து வேறுபாட்டை நீக்கிவிட்டு தாம் எதை சரியானதென்றும் நேர்மையானதென்றும் கருதுகின்றார்களோ அந்தக் கருத்தின் கீழ் மக்களைத் திரட்டி விடலாம். தாம் எதை தவறு என்றும் சரியற்றதென்றும் கருதுகின்றார்களோ அவற்றைப் புறந்தள்ளி விடலாம் என்றும் கருதுவது தான்.

தனது ஆராய்ச்சியை மட்டும் வைத்து மனப்பூரிப் படைந்து கொள்வது கூட அழித்து விடக்கூடிய (பெரும்) பாவங்களில் ஒன்று என்பதை இவர்கள் மறந்து விட்டனர். சக முஸ்லிமை இழிவாக எண் ணுவதுகூட ஒரு மனிதனுக்குரிய பாவமாக இருந்திடப் போது மானது. ஒருவரினுடைய ஆராய்ச்சி முடிவை இழிவாகக் கருதுவதும் அவரையே இழிவு படுத்துவதுதான்.

புதிதாய்த் தோன்றியுள்ள வெளிரங்கவாதிகளிடமுள்ள குறை என்னவென்றால் கருத்து வேறுபாட்டுக்குரிய தலைப்பில் ஒரு ஹதீஸ் கிடைத்துவிட்டால் அதுவே சர்ச்சைகளை நிறுத்தி விடும் என்று கருதுகின்றனர். இது போன்ற வேளைகளில் தமக்கு எதிரான கருத்து ஹதீசுக் கே எதிரானது சுன்னாவுக்கே முரணானது என்றெண்ணு கின்றனர்.

இதில் அவர்கள் பெரும் தவறிழைக்கின்றனர். இப்படி நாம் கூறுவதற்கு பல காரணங்கள் உள்ளன.

ஒரு ஹதீசை ஸஹீஹ் என்று நம்புவதற்கு அவர்கள் கூட, நிகழ்காலத்திலுள்ள ஹதீஸ் துறை அறிஞர்களையோ முற் காலத்தில் வாழ்ந்த அறிஞர்களில் சிலரையோ (தக்லீது) பின்பற்று வதைத்தானே சார்ந்திருக் கின்றனர்.

அந்த அறிஞர்கள் ஸஹீஹ் என்று கருதிடும் ஹதீஸை இதர அறிஞர்கள் ஸஹீஹ் என்று ஒப்புக் கொள்வதில்லை. இந்த சமுதாயத்தின் மாபெரும் அறிஞர் களுக்கும் சட்ட மேதைகளுக்கும் மத்தியில் பழங்காலத்திலிருந்து நிலவிவரும் பிரபலமான விஷயம் தான் இது. ஒருவர் இது ஸஹீஹான ஹதீஸ் என்பார். மற்றொருவர் இது பலஹீனமான ஹதீஸ் என்பார். ஒரு ஹதீஸ் ஸஹீஹ் என்பதற்குரிய விதி களை ஒவ்வொரு அறிஞரும் ஒவ்வொரு விதமாக வைத்திருப் பதே இதற்குக்காரணம்.

ஒருவர் விதிக்கும் நிபந்தனை பொதுவான தன்மையில் அமைந் திருக்கலாம் அல்லது மக்களுக்கு மத்தியில் பரவலான எல்லோரை யும் பாதிக்கின்ற விஷயங்களிலும் ஏற்படலாம்.

ஹதீசின் அறிவிப்பாளர் களை சரியானவர்களா குறையுள் ளவர்களா என்று முடிவு செய் வதில் ஏற்படும் கருத்து வேறு பாட்டினால் கூட இந்த முரண் பாடு ஏற்படலாம் ஒரு அறிஞர் ஒரு அறிவிப்பாளரை நீதியாளர் என்று கூறுவார் மற்றொருவர் அவரை குறையுள்ளவர் என்பார்.

ஒரு ஹதீஸ் பலவீனமான ஸனத் தொடர்களில் வந்திருந் தாலும் கூட பல வழிகளில் அது வந்திருந்தால் ஸஹீஹாகிவிடும் என்கின்றனர் சில அறிஞர்கள். வேறு சிலர் இக்கருத்தை ஏற்றுக் கொள்ளவில்லை.

அல் முர்ஸல் எனும் தரத்தி லான ஹதீஸை ஆதாரமாக ஏற்க லாம் என்று சிலரும் ஏற்க இய லாது என்று சிலரும் கருது கின்றனர் (அல்முர் ஸல்: அறிவிப் பாளர் தொடரிலுள்ள கடைசி நபரின் பெயர் விடுபட்டிருக்கலாம். உதாரணம் இரண்டாம் தலை முறையைச் சார்ந்தவரான ஒரு தாபிஈ நபி - ஸல் - கூறினார்கள் என்று அறிவிக்கும் ஹதீஸ். -மொழி பெயர்ப்பாளர்)

பெண்கள் தங்க நகை அணிவது ஹராம் என்று வந் துள்ள ஹதீஸை இதற்கு உதாரண மாகப் பாருங்கள். சில அறிஞர் கள் இந்த ஹதீஸை ஸஹீஹ் என்றும் வேறு சிலர் பலவீன மானது என்றும் கூறுகின்றனார். ஸஹீஹான ஹதீஸ் தான் இது என்று கூறிடும் அறிஞர்களில் சிலர் இந்த சட்டம் மாற்றப்பட்டு விட்டது என்கின்றனர். இன்னும் சிலர் இது சில விளக்கங்களுக் குட்பட்டது என்கின்றனர்.

முர்ஸல் தரத்திலான இந்த ஹதீசை ஓர் ஆதாரமாக ஏற்றுக் கொண்டுஅதற்கு இவ்வாறு விளக் கங்களை அவர்கள் தருவதற்குக் காரணம்; “பெண்கள் தங்க நகை அணிவதை எல்லா மத்ஹபுகளும் அனுமதிக்கின்றன என்பதால் மொத்த சமுதாயமும் அதை ஆதரிக்கிறது. மேலும் பதினான்கு நூற்றாண்டு காலமாக இந்த சமு தாயம் அதை செயல்படுத்திக் கொண்டிருக்கின்றது” என் கின்றனர்.

இஃதன்றி எந்த ஹதீசை அவர்கள் சார்ந்து நின்று செயல் பட்டு வருகின்றார்களோ அந்த ஹதீஸை ஸஹீஹ் என்று நிர்ண யிப்பதில் மாற்றுக் கருத்துடைய வர்கள் அவர்களுடன் முரண்படு கின்றனர். அதாவது இந்த ஹதீஸ் ஒரு மார்க்கக் கட்டளையல்ல. மாறாக இஃதோர் உலக வழக்கம் என்கின்றனர். உதாரணமாக குத்பா ஓதிடும்போது கம்பு (கோல்) ஒன்றை வைத்திருப்பது, கையால் (கரண்டியால் அல்ல) சாப்பிடுவது தரையில் அமர்ந்து (மேஜை மீதல்ல) சாப்பிடுவது போன்றவை. (மார்க்கக் கட்டளை யல்ல. நாட்டின் வழக்கம் என் கின்றனர்)

உதாரணமாக ஒரு ஹதீஸ். நபி -ஸல் - கூறினார்கள். "இஸ்முத் (நீலாஞ்சனக்கல்) வகை சுர்மாவை நீங்கள் கண்ணுக்குப் போட்டுக் கொள்ளுங்கள், அது கண்பார்வையைத் தெளிவாக்கும். முடிகளை முளைக்கவைத்திடும்."

ஒரு முஸ்லிம் இந்த ஹதீசின் படிசெயல்படாமல் சிறப்புக்கண் மருத்துவர் கூறிய ஆலோசனைப்படி (வேறொரு வகை சுருமாவைப் போட்டால்) செயல்பட்டால் அவர் சுன்னாவுக்கு எதிராக ஹதீசுக்கு மாறாக நடந்தவராக மாட்டார். (ஏனெனில் இது உலக வழக்கம் தானேயன்றி மார்க்கக்கட்டளையல்ல).

சில நேரங்களில் ஒரு ஹதீஸ் மார்க்கத்தின் கட்டளையாக இருந்திடும். ஆனால் அதை ஒரு வழிகாட்டி தலைவர் என்று அடிப்படையில் நபி - ஸல் - கூறியிருப்பார்கள். அல்லாஹ் விடமிருந்து வந்த கட்டளையாக, சமுதாயத்துக்கு எடுத்துரைத்திட வேண்டியது கட்டாயம் என்ற தன்மையில் உள்ளதாக இருக்காது) எதிரியொருவர் கொல்லப்பட்டால் அவரின் உடைமைகள் கொன்றவருக்குச் சொந்தமானது என்ற நபிமொழி இவ்வகையைச் சார்ந்ததுதான் என்கிறார் பேரறிஞர் இப்னுல் கய்யிம் (ரஹ்) அவர்கள்.

சில வேளை, ஒரு ஹதீஸ் என்றென்றும் செல்லத்தக்க ஒரு பொதுவான மார்க்கக் கட்டளையாகத்தான் இருக்கும். ஆனால் ஹதீஸ் கூறிடும் சட்டம்பற்றி கருத்து வேறுபாடும் இருக்கும் உதாரணமாக ஒரு கட்டளையோ தடையோ இடம் பெற்றுள்ள ஹதீசைப்போல். அந்தக் கட்டளை (ஏவல் வினை) கண்டிப்பாக ஏற்றிடவேண்டிய கடமையா? அல்லது ஏற்பது அழகு என்ற அளவிலான முஸ்தஹப்பா? அல்லது அது ஒரு வழிகாட்டுதலா? அந்தக்கட்டளை ஹராமா? மக்ரூஹா? அந்த மக்ருஹ் தஹ்ரீம் - ஹராமுக்கு நெருக்கமான மக்ரூஹா? அல்லது மக்ருஹ் தன்சீஹ் தவிர்ப்பது நல்லது என்ற மக்ரூஹா?

இவற்றில் எந்த முடிவை எடுப்பதற்கும் வாய்ப்புக்கள் உண்டு, அம்ரு ஏவல், நஹ்யு தடை இவற்றைப்பற்றி துறை சார்ந்த அறிஞர்களிடையே பல கருத்துக்களும் உண்டு. ஒவ்வொரு கருத்துக்கும் ஆதாரமும் உண்டு. அதற்கென ஒரு திசையும் உண்டு.

அம்ரு - ஏவல் நஹ்யு தடைபற்றிய விவாதக்களத்தில் அத்துறை சார்ந்த அறிஞர்களின் கூற்றுப்படி ஏழு வகையான கருத்துக்கள் உண்டு.

நபித் தோழர்கள் நபி-ஸல்-இடமிருந்து ஒரு ஏவல் வருவதைக் கேட்டுச் செயல்படுவார்கள். அந்த ஏவல் விட்டுவிடுவதற்கு சலுகையும் எடுத்துக் கொள்வார்கள். அந்த ஏவலை உறுதியான கட்டளை அல்ல என்று அவர்கள் அறிந்திருப்பதால் அதை விடுகின்றனர். ஏதேனுமொரு ஆதாரத்தின் மூலம் அது ஒரு உறுதியான கட்டளை தான் என்று முடிவாகி விட்டால் அதை விரைந்து செயல்படுத்துவதில் எல்லோரையும் விட முனைப்புடனிருப்பார்கள்.

ரமழான் மாதத்தில் நிகழ்ந்த ஒரு போர்ப்பயணத்தில் நபித் தோழர்கள் நோன்பு வைத்திருந்தார்கள். நோன்பை விடச் சொல்லி அவர்களிடம் நபி-ஸல்- கூறினார்கள். அதைக்கேட்டு சிலர் நோன்பை விட்டார்கள். சிலர் விடவில்லை. நோன்பு வைத்திருந்தார்கள். கண்டிப்பாக நோன்பை விட்டுத்தானாக வேண்டும் என்பதற்குரிய தெளிவான ஆதாரமெதுவும் நபி(ஸல்)லின் சொல்லில் இல்லை. நமக்குச் சலுகை தந்திடுவதே நபி-ஸல்-ன் நோக்கம் என்று அதற்கொரு விளக்கத்தையும் வைத்துக் கொண்டனர்.

எதிரிகளுடன் மோதிட வேண்டிய நேரம் நெருங்கிய போது நீங்கள் எதிரிகளுக்கு அருகிலிருக்கின்றீர்கள். நோன்பைத் துறப்பதே உங்களுக்கு சக்தியைத்தரும். எனவே நோன்பைத் துறந்துவிடுங்கள் என்று நபி-ஸல்- கூறினார்கள். இந்த ஏவலில் கட்டளை தொனிக்கிறது எனவே நபித் தோழர்கள் (அனைவரும்) நோன்பைத்துறந்தனர்.

யூதர்களும் கிறித்தவர்களும் நரைத்தமுடிகளுக்கு சாயம் பூசுவதில்லை. நீங்கள் அவர்களுக்குமாறு செய்யுங்கள் நரை முடிக்கு சாயம் பூசுங்கள் என்று நபி-ஸல்-கூறினார்கள். இந்த ஏவலை ஒரு அழகுச் செயல் (முஸ்தஹப்பு) அல்லது வழிகாட்டுதல் என்று நபித் தோழர்கள் கருதினர். எனவே சிலர் அதை ஏற்று சாயம் பூசவில்லை. சிலர் மருதாணி பூசினார்கள் சிலர் வேறு சாயங்களையும் சிலர் கருப்புச்சாயமும் பூசினார்கள். இப்படித்தான் நபித்தோழர் களை நாம் காண்கிறோம்.

நாஃபிவு (பலன் தருபவர்) யசார் (செல்வம்) ரபாஹ்(லாபம்) என்றெல்லாம் உன் மகனுக்கோ அடிமைக்கோ பெயர் வைத்திடவேண்டாம் என நபி-ஸல்- கூறினார்கள். ஆனால்

# உச்சநீதிமன்றம் 1993இல் வழங்கிய தீர்ப்பின்படி

# மஸ்ஜித் இமாம்களுக்கு அரசு ஊதியம் வழங்கிட வேண்டும் !

லாலுபிரசாத் யாதவ் அண்மை காலந்தொட்டே நாடாளுமன்றத்தை உலுக்கி வருகின்றார்.

21.8.2010 சனிக்கிழமை அன்று நாடாளுமன்றத்தில் 1993இல் உச்சநீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு ஒன்றை விநியோகித்தார். அந்தத் தீர்ப்பு மஸ்ஜித்களில் பணிபுரியும் இமாம்களுக்கு அரசு ஊதியம் வழங்கிட வேண்டும், எனக் கட்டளையிடும் தீர்ப்பு.

17 ஆண்டுகளாகியும் இந்தத் தீர்ப்பு செயல்படுத்தப்படாமலிருக்கின்றது என்பதைச் சுட்டிக்காட்டினார்.

தீர்ப்பின் நகலை வாங்கிப்படித்த நாடாளுமன்ற அவைமுன்னவர் பிரனாப் முகர்ஜி, உரிய நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும் என்றார்.

ஆனால் சிறுபான்மையினர் நல்வாழ்வு துறைஅமைச்சர் சல்மான் குர்ஷித் - அரசிடம் ஊதியம் பெறுவதில் இமாம்களுக்கிடையே கருத்து வேறுபாடுகள் இருக்கின்றன என கூறி மொத்த பிரச்னையையும் திசை திருப்பினார்.

அதற்கு லாலு பிரசாத் யாதவ் ‘நீங்கள் ஊதியத்தை வழங்குங்கள் வாங்குபவர்கள் வாங்கட்டும் வேண்டாதவர்கள் விட்டு விடட்டும்’ என்றார்.

பாரதீய ஜனதா கட்சியைச் சார்ந்தவர்கள்,இமாம்களுக்கு ஊதியம் வழங்கக்கூடாது என்றும், சாதுகளுக்கு வழங்க வேண்டும் என்று வழக்கம் போல் கூச்சல் போட்டார்கள். இதற்கு லாலு பிரசாத் “நான் உச்சநீதிமன்றம் தந்த தீர்ப்பைச் செயல்படுத்துங்கள் என்கின்றேன். நீங்கள் அதை வகுப்புவாதமாக மாற்றாதீர்கள், சாதுகளுக்குச் சம்பளம் வேண்டுமென்றால் நீங்களும் உச்ச நீதிமன்றத்தைக் கேளுங்கள்” என்றார். இதனால் வாயடைத்துப் போனார்கள் பாரதீய ஜனதா கட்சியினர்.

**ஆதாரம் : தி ஹிந்து 22.8.2010**

---

நபித்தோழர்கள் நாஃபிவு யசார் என்று பெயர் சூட்டியுள்ளனர். இரண்டாம் தலைமுறையாம் தாபிஈகளில் இப்பெயர்கள் உள்ளன. நாபிவு மவ்லா இப்னு உமர், சுலைமான் பின் யசார். அதாவுபின் அபீராஹ் ஆகிய பெயர்களைக் காணலாம்.

தன் பிறப்புறுப்பை ஒருவர் தொட்டால் ஒளுசெய்ய வேண்டும் என்ற ஏவல் உள்ள ஹதீஸை அறிஞர் இப்னு தைமிய்யா (ரஹ்) போன்றவர்கள் முஸ்தஹப்பு விரும்பத்தக்க விஷயம்தான் அது. (ஒளுசெய்வது கடமையல்ல) என்று கூறுவதைப் பார்க்கிறோம்.

ஒட்டகக்கறி சாப்பிட்டால் ஒளுசெய்திட வேண்டும் என்ற ஹதீசிலுள்ள ஏவலையும் அது கடமையல்ல விரும்பத்தக்க விஷயம் தான் என்று இப்னுதைமிய்யா(ரஹ்) கூறியுள்ளார்கள்.

ஹன்பலீ மத்ஹபைச் சார்ந்த அவர்மேற் கூறிய இரண்டு உதாரணங்களிலும் சட்டங் களிலும் தனது இமாம் அஹ்மது (ரஹ்) வுக்கு மாறான கருத்தையே கூறியுள்ளார்.

**தொடரும் : தமிழில் :**
**இல்யாஸ் ரியாஜி**

சர்வீஸ்
விமான டிக்கெட்
விசிட் விசா
குவைத், புருனை,
ஸ்டாம்பிங்
டூர் பேக்கேஜ்

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம்

பயண உலகில் சிறந்த வழிகாட்டி

# ஏரோ ஒய்டு டிராவல்ஸ்

சவுதி விசா வைத்திருப்பவர்கள் கவனத்திற்கு

SAUDI WAKALA CARD

بطاقة الوكالة السعودية

رسنا إنتر برائزز

المعترف لدى حكومة الهند وزارة الشؤون الخارجية

رقم التسجيل: ايه ٠٣١٠/موم/٣٠٠/٤ ٣/٤/٧٨٧٠/٢٠٠٦

* Saudi Arabian Consulate, Mumbai accept wakalah from any Recruitments office.

**RASNA ENTERPRISES**
GOVERNMENT OF INDIA,
MINISTRY OF LABOUR
REGD.CERTIFICATE NO.
A0310/MUM/PER/300/4 3/4/7870/2006

எங்கள் வக்கலாவில் சிறந்த முறையில் சர்வீஸ் செய்து அனுப்புகிறோம்!

தலைமை அலுவலகம்:
எண் 6, முதல் மாடி, சிந்தூர் பிளாஸா, 42, மாண்டியத் ரோடு, எழும்பூர், சென்னை-8.
தொலைபேசி : +91 44 42148723 / 42146552

கிளைகள் :

மயிலாடுதுறை
3/43, வண்டிக்கார தெரு,
மயிலாடுதுறை-1.
தொலைபேசி : 04364-225780/225740
தொலைநகல் : 0091 4364 242100

கூத்தாநல்லூர் - லட்சுமாங்குடி
1, முதல் மாடி, எம்.ஜி.காம்ப்ளக்ஸ்,
திருவாரூர் மெயின்ரோடு.
தொலைபேசி : 04367-230341
இ.மெயில் : aerowidetravel@yahoo.com

# சிறுநீர் கட்டுப்பாடின்மை

***சில சமயம் வயதான பெண்கள் சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அவதிப்படுகின்றனர். மருத்துவரிடம் சொல்லவும் தயங்குகின்றனர். இந்தப் பிரச்னை ஏன் ஏற்படுகிறது?***

இதைத்தான் சிறுநீர் கட்டுப்படுத்த இயலாமை நிலை என்கின்றனர். கட்டுப்பாடு இல்லாமல் சிறுநீர் வெளியேறிக் கொண்டே இருக்கும். பெரும்பாலும் பெண்களிடையே காணப்படும் பிரச்னை இது. இதனால், மனச்சோர்வு ஏற்பட்டு வெளி உலகில் இருந்து விலகியே இருக்கத் தோன்றும்.

***கட்டுப்பாடு இல்லாமல் சிறுநீர் வெளியேறுவதற்கு என்ன காரணம்?***

பயன்படுத்தும் மருந்துகள், செய்துகொண்ட அறுவைச் சிகிச்சையின் தன்மை மற்றும் உளவியல் ரீதியான காரணங்களால் கட்டுப்பாடு இல்லாமல் சிறுநீர் வெளியேறலாம். இதை, முதுமையில் ஏற்படும் இயல்பான ஒரு செயல்தான் என்று நினைப்பது தவறு.




சிறுநீர் கசிவில் மூன்று வகைகள் உண்டு. அவை:

1. ***அழுத்த நீர்க்கசிவு (Stress Incontenence)***

உடற்பயிற்சி செய்யும் போது, இருமல், தும்மல் மற்றும் சிரிக்கும்போது நீர்ப்பையில் அழுத்தம் ஏற்பட்டு நீர்க்கசிவு ஏற்படலாம். பொதுவாக, சிறுநீர்ப்பையைச் சுற்றியுள்ள தசைகள் தளர்ந்து போயிருந்தால் இப்பிரச்னை ஏற்படும். அடிக்கடி குழந்தை பெற்றவர்களுக்கும் இப்பிரச்னை ஏற்படும். காயம் அடைந்தவர்களுக்கும், பிறப்பு உறுப்புப் பகுதியில் அறுவைச் சிகிச்சை செய்து கொண்டவர்களுக்கும் அழுத்த நீர்கசிவு எற்படலாம்.

2. ***கட்டுப்படுத்த முடியாத நீர்க்கசிவு (Urge Incontinence)***

சிலர், கழிவறை செல்லும்வரை கூட சிறுநீரைக் கட்டுப்படுத்த முடியாமல் அவதிப் படுவார்கள். பக்கவாதம், மறதி நோய் மற்றும் பார்க்கின்ஸன்ஸ நோயாளிகளுக்கு இந்தப் பிரச்னை இருக்கும். முதுமையில், முழங்கால் வலியால் அவதிப்படுபவர்களுக்கும் இப்பிரச்னை காணப் படுவது இயல்பு.

3. ***நிரம்பி வழியும் நீர்கசிவு (Over flow Incontinence)***

ஆண்களில் ப்ராஸ்டேட் உறுப்பு விரிவடைந்தவருக்கும். நீண்ட கால நீரிழிவு நோயாளிகளுக்கும் சிறுநீர்பையில் இருந்து சிறிது சிறிதாக நீர் கசிந்து கொண்டே இருக்கும்.

***சிறுநீர்க்கசிவை எப்படி எதிர்கொள்வது?***

சிறுநீர் கசிவு உள்ளவர்கள், இடுப்பு பகுதியின் தசைகளுக்கான உடற்பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். இதனால் தளர்ந்த தசைகள் சுருங்கி வலிவடைந்து, சிறுநீர்க் கட்டுப்பாடு எளிதாகலாம். சிலருக்கு மருந்துகள் பலன் அளிக்கும். ஆனால், பக்க விளைவுகள் உண்டு. ப்ராஸ்டேட் விரிவடைந்திருந்தால் அறுவைச் சிகிச்சை பலன் அளிக்கும்.

உடல் மற்றும் சுற்றுப்புறச் சூழல்நிலை, கழிவறை சுத்தமாகவும் அருகிலும் இருக்க வேண்டும். அணிந்திருக்கும் ஆடைகள் எளிதில் கழற்றும்படியாகவும் இருக்க வேண்டும். உடனே எழுந்து கொள்வதற்கு வசதியாக கட்டில் அல்லது நாற்காலியில் உட்கார்ந்திருக்கலாம்.

**(தொடரும்)**

# தமிழகத்தில் கலவரம் நித்யா பகீர் ப்ளான்!



பரபரப்பு வீடியோ வழக்கு, கைது என்று தொடர்ந்து சரிந்து வரும் தன் செல்வாக்கை மீண்டும் நிலை நிறுத்த பல முயற்சிகளை எடுத்துவரும் நித்யானந்தா. . . தமிழகத்திலும் தன் செல்வாக் கை திரும்ப பெற பல முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். கர்நாடக ஆசிரமத் துக்கு சில டி.வி. நடிகைகளை அழைத்து பூஜை நடத்தியது போன்று தமிழகத்தில் சில பிரபலங்களை கொண்டு செல் வாக்கை மீட்கும் திட்டத்தை வகுத்து வருகிறார் என்கிறார்கள் அவரை தொடர்ந்து கண் காணித்து வரும் கர்நாடக காவல் துறை அதிகாரிகள்.

அந்த முயற்சியின் ஒரு பகுதியாகத்தான் காமெடி நடி கரும், எம்.எல்.ஏ.வுமான எஸ்.வி. சேகரை வரவழைத்தாராம். அடுத்த கட்டமாக தமிழக இந்து அமைப்புகள் சிவவற்றை தொடர்பு கொண்டு தனக்கு ஆதர வாக பிரச்சாரம் செய்யும்படி பேசிக் கொண்டிருக்கிறார். கடந்த ஒரு மாதமாகவே இப்படி பலர் நித்யானந்தாவை சந்தித்து செல்கிறார்கள்.

இதோடு ரத யாத்திரை ஒன்றை தமிழகம் முழுக்க நடத்த வும், விநாயகர் சதுர்த்தி ஊர்வலத் தின் போதும், ரதயாத்திரையின் போதும் இந்து மத வெறியை தூண்டிவிடவும் திட்டமிட்டி ருக்கிறது நித்யானந்த ஆசிரமம் என அதிர்ச்சி தகவலைக் கொடுக்கிறார் கர்நாடக மாநில தி.மு.க. பிரதிநிதி யாக உள்ள சுரேஷ்!

“சமீப காலமாக நித்யா னந்தா ஆசிரமத்துக்கு தமிழகத்தில் இருந்து பல இந்து அமைப்பு களைச் சேர்ந்தவர்களும் வந்து செல்கிறார்கள். அப்படி வந்து போகிறவர்களும் தமிழக சிவசேனா கட்சியின் கொள்கை பரப்பு செயலாளராக இருக்கும் நாகூரை சேர்ந்த தங்க. முத்துக்கிருஷ்ணன், பழனி சந்திரசேகர், தஞ்சை சசி உட்பட பலரும் முக்கியமான வர்கள். நாகூர் தங்க.முத்துகிருஷ்ண னை தலைவராக கொண்டு புதிதாக இந்து அதிரடிப்படை என்கிற அமைப்பையே இதற்காக உரு வாக்கியிருக்கிறார்கள். இந்த அமைப்பின் மூலமாகத் தான் தமிழகம் முழுவதும் ரத யாத்திரை நடத்தப் போகிறார்கள். முதலில் கும்பகோணத்தில் இருந்து திரு வண்ணாமலை வரை மட்டும் இந்த ரத யாத்திரையை நடத்து வதாக இருந்தார்கள். இப்போது தமிழகம் முழுக்க ஒரு மாதத்துக்கு மேல் இந்த ரத யாத்திரையை நடத்த இருக்கிறார்கள்.

இதற்காக 25 லட்ச ரூபாய் கொடுப்பதாக நித்யானந்தா ஆசிரம தரப்பில் இருந்து பேசப் பட்டது. இதுவரை 18 இலட்ச ரூபாய் கொடுக்கப்பட்டிருக் கிறது. இந்த ரத யாத்திரையின் போது திட்டமிட்டு சில இடங் களில் பிரச்சினை ஏற்படுத்தப் போகிறார்கள். இதன் மூலம் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை உருவாக்கி அதன் மூலம் தி.மு.க. அரசுக்கும் நெருக்கடி கொடுப்பது தான் அவர்களின் திட்டம். தேர்தல் நேரத்தில் இப்படி ஒரு நெருக்கடியை ஏற்படுத்த இப் போதே தயாராகிவிட்டார்கள். இது மட்டுமன்றி விநாயகர் சதுர்த்தி தினத்தில் சென்னையில் ஊர்வலம் நடத்தி பிரச்சினை உண்டாக்கவும் திட்டமிட்டிருக் கிறார்கள்”என்று அதிரடித் தகவல்களை சொல்லிக்கொண் டே போன சுரேஷிடம், ‘உங் களுக்கு எப்படி இந்த தகவல்கள் கிடைத்தன’ என்றோம்.

நித்யானந்தா ஆசிரமத்தின் தரப்பில் இருந்து செல்கின்ற இ-மெயில்களை ஆராய்ந்தாலே எல்லாம் தெரியவரும். அவர்கள் போட்ட திட்டங்கள், பணம் கொடுத்தது, எல்லாமே நிரூபண மாகும். நித்ய பிராணானந்தா என்கிற சாமியாரின் இ-மெயிலில் இருந்து அனுப்பப்பட்ட இ-மெயில்கள் ஒரு சிலரின் மூலம் எங்களுக்கும் வந்தது. அதன் பிறகே இதைப்பற்றி முழுமை யாக கவனிக்க ஆரம்பித்தோம்'' என்ற சுரேஷ் "தமிழகத்தில் தி.மு.க. ஆட்சிக்கு எதிராக இப்படி ஒரு சதி செய்யப்படுகிறது என்பதை எங்கள் கர்நாடக மாநில தி.மு.க. தலைவர் பெரியசாமி, துணை முதல்வர் அலுவலகத்தின் பார் வைக்கு இந்த தகவல்களை கொண்டு சென்றிருக்கிறார். கூடவே தமிழகத்தில் அனைத்து மாவட்ட கலெக்டர்களுக்கும் இந்த ரத யாத்திரை பற்றி அலர்ட் செய்து இ-மெயிலும் அனுப்பி யிருக்கிறோம். தமிழகத்தின் சட்டம் - ஒழுங்கு பிரச்சினையை உருவாக விட்டு விடக் கூடாது என்கிற அக்கறையோடு செயல் படுகிறோம்'' என்று முடித்தார்.

நித்யானந்தாவுக்காக ரத யாத்திரை நடத்தப்பேசுகிறார் என்று சொல்லப்பட்ட நாகூர் தங்க. முத்துகிருஷ்ணன் தொடர்பு கொண்டோம். விஷயத்தைக் கேட்டதுமே, "ஆமாம். . . . விரை வில் தமிழகம் முழுவதும் ரதயாத்திரை நடத்தப் போகி றோம். இந்து துறவியர்களே மோசம் என்பது போன்ற நிலைமை உருவாக்கப்பட்டு வருகிறது. இதை மாற்றவே ரத யாத்திரைக்கு திட்டமிட்டிருக் கிறோம். நான் ஏற்கெனவே இரண்டுமுறை ரதயாத்திரை நடத்திய அனுபவம் உள்ளவன். 42 நாட்கள், இந்த ரதயாத்திரையை நடத்த திட்டமிட்டிருக்கிறோம். இன்னும் தேதி முடிவு செய்ய வில்லை. இதற்காக இந்து அதி ரடிப்படை என்கிற அமைப்பு உரு வாக்கப்பட்டிருப்பது உண்மை தான். நான் தான்அந்த அமைப் புக்கு தலைவர்'' என்ற முத்துக் கிருஷ்ணனிடம்,

"நித்யானந்தாவுக்காகத்தான் இந்த ரதயாத்திரை நடத்தப் படுவதாகவும், அதற்காக 25 லட்ச ரூபாய் நிதி கொடுக்கப் படுவதாக வும், ரத யாத்திரையின் மூலம் தமிழகத்தில் கலவரம் ஏற்படுத்த முயற்சிப்பதாகவும் கர்நாடக மாநில தி.மு.க.வினர் புகார்கள் அனுப்பியிருக்கிறார்களே?'' என்று கேட்டோம்.

"நான் இப்போ பெங் களூரில் இருந்துதான் உங்ககிட்டே பேசறேன். 4 நாட்கள் நித்யானந்தா ஆசிரமத்தில்தான் இருந்தேன். ரதயாத்திரையில் என்னோடு பங்கெடுக்க போகிற பழனி சந்திர சேகர் போன்றவர்களும் எனக்கு முன்பே ஆசிரமத்துக்கு வந்து சென்றிருக்கிறார்கள். விநாயகர் சதுர்த்திக்கு பிறகு தான் ரத யாத்திரையை தொடங்குவோம்.

ஆனால் விநாயகர் சதுர்த்தி யின் போது நித்யானந்த விநாயகர் சிலையை உருவாக்கி சென்னையில் பொதுமக்கள் வழிபாட்டிற்காக வைக்கப்போகிறோம். இந்த ரத யாத்திரையால் எந்த பிரச்சினையும் வராது. ரத யாத்திரைக்கான செலவு முழுவதையும் மக்களிடமே கை யேந்தி பெற இருக்கிறோம்'' என்கி றார் முத்துக் தங்க. கிருஷ்ணன்.

ஆசிரம வட்டாரத்தில் விசாரித்தபோது, "தமிழகத்தில் தர்மானந்தா (எ) லெனின் தந்த புகாரை வைத்து வழக்கு பதிவானது. இதன்பிறகு கர்நாடக மாநிலத்துக்கு நித்யானந்தா-ரஞ்சிதா சி.டி. வழக்கு மாற்றப் பட்டு நித்யானந்தா சிறைக்கு செல்லும் அளவிற்கு நிலைமை மாறியது. இதற்கு காரணம் சென்னையில் வழக்குப் பதி வானதுதான். அதனால் தி.மு.க. அரசுக்கு எதிராகத்தான் நாங்கள் செயல்படுவோம்'' என்றார்கள்.

நித்யானந்தாவுக்கு இன்னமும் திமிர் அடங்க வில்லை போலும்.

***நன்றி : நக்கீரன் 2010 ஆகஸ்ட் 25-27***


## வரப்பெற்றோம்

## ஹஜ்




**ஆசிரியர்:**

**பேரறிஞர் அலீமியான் (ரஹ்)**

**தமிழில் :**

**அஹ்மது ஜலாலுதீன் நத்வி**

**தொடர்புக்கு :**

**044-25222207**

**044-25251058**



# என்கவுன்டர்கள் இதோ வெளிவருகிறது பெரும் சதி!

நிழலுலக தொடர்புகள், ஆயுதங்கள் மற்றும் ஆர்.டி. எக்ஸ். கடத்தல், காவல்துறை, தாதாக்கள் மற்றும் அரசியல்வாதிகளின் சதி திட்டங்கள், போலியான உளவுத் துறை தகவல்கள்- குஜராத் என் கவுன்டர்களின் கதை இப்போது ஒரு பெட்ரோல் குண்டு போல இருக்கிறது. சொராபுதீனின் செயல்களுக்கு மதச்சாயம் பூசியது முதல்வர் நரேந்திர மோடியை இந்துக்களின் பாதுகாவலனாக காட்டும் இரட்டை பலனை தந்தது.

2003 ஆம் ஆண்டிலிருந்து நடந்த என்கவுன்டர்களில் வெளியாகியிருக்கும் புதிய தகவல்கள் அமைச்சர்கள் மற்றும் காவல் துறை அதிகாரிகளின் வயிற்றில் புளியை கரைத்துக் கொண்டிருக்கிறது. உளவுத்துறை தகவல்கள் மற்றும் கடிதங்கள் தெஹல்கா கைவசம் உள்ளது. இவை விசாரணை முன்னேற்றம் பெற்று இனி வரும் மாதங்களில் பெரிய சதிச் செயலை வெளிக் கொண்டு வரும்.

முதலாவதாக 12 அக்டோபர் 2006 தேதியிட்ட கடிதம் டி.ஜி.பி. பி.சி பான்டேக்கு ஏ.டி.எஸ்.-ன் முன்னாள் டி.ஐ.ஜி. வன்ஜாரா எழுதியது. வன்ஜாரா குற்றப் பிரிவிலிருந்து ஏ.டி.எஸ்.க்கு மாற்றப்பட்ட உடன் எழுதப்பட்டது. இக்கடிதம் என்கவுன்டர்களில் மட்டுமல்லாமல் அரசியல்வாதிகளுடன் கைகோர்த்து தன்னுடைய அதிகாரிகள் நடத்திய என்கவுன்டர்களையும் எவ்வாறு மறைத்தார் என்பதற்கான ஆதாரத்தையும் கொடுக்கிறது. இந்த என்கவுன்டர்கள்

இஷ்ரத் ஜஹான் மற்றும் சொராபுதீனின் உயிர்களை மட்டும் வாங்கவில்லை தொடர்ந்து, துளசி பிரஜாபதியின் உயிரையும் கலவரங்களுக்காக மோடியை கொல்ல இருந்ததாக போலீஸாரால் உத்தேசித்து கொல்லப்பட்ட 19 வயதேயான சாதிக் ஜமாலின் உயிரையும் தான்.

வன்ஜாரா எழுதியதாவது: “நான் 10.8.2006 மாலை 5 மணிக்கு அஹமதாபாத் ஆணையாளர் திரு. கே.ஆர். கௌஷிக்கை அவரது அறையில் சந்தித்து பேசியதாகவும் அவரிடம் குற்றப் பிரிவிடமிருந்து ஒத்துழைப்பில்லை என கேட்டுக் கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் அவர் இது சம்பந்தமாக நல்ல பதிலை அளித்திருப்பதாகவும், திரு. பி.சி. பான்டேக்கு இது பற்றி ஆணையிடுவதாக தன்னிடம் கூறியிருப்பதாகவும் தெரிவிக்கிறது. நாட்டில் பெரும் தீவிரவாதச் செயல்கள் அரங்கேறியிருக்கிறது. குஜராத் மாநிலம் மற்றும் இங்குள்ள வி.ஐ.பி.களும் தான் தீவிரவாத இயக்கங்களான ஹூஜி மற்றும் லஷ்கரே தொய்பாவின் முதல் குறி. பல்வேறு இடங்களிலிருந்து வரும் உளவுத்துறை தகவல்களும் குஜராத்திற்கு அச்சுறுத்தல் இருப்பதாக தெரிவிக்கிறது ஆகியவை அதில் குறிப்பிடப்பட்டிருந்தன.

அந்த கடிதம் கற்பனையான தீவிரவாத அச்சுறுத்தல்களிலிருந்து மாநிலத்தை பாதுகாப்பதற்காக எழுதப்படவில்லை. மாறாக, அது ஆதாரங்களை குற்றப்பிரிவு காவல்துறையிடம் முடக்குவதற்கும், இன்னும் போலி என்கவுன்டர்களை நியாயப் படுத்துவதற்கும் தான் எழுதப்பட்டிருக்கிறது என விசாரணை அதிகாரிகள் இப்போது நம்புகின்றனர். இது உளவுத்துறையின் தகவல் ஒன்றின் மூலமாக உறுதி செய்யப்பட்டுள்ளது. தெஹல்காவிடம் “ரகசிய செய்தி” என பெயரிடப்பட்டு 29 நவம்பர் 2002 தேதியிட்ட அது முன்னாள் இணை இயக்குனர் ராஜேந்திர குமாரினால் டி.ஜி.பி. கே. சக்ரபர்த்திக்கு அனுப்பப்பட்டது (No.6/CR/snw-Peak/2002/703 Subsidiary Intelligence Bureau, Ahmedabad-4) கலவரத்தால் பாதிக்கப்பட்ட சாதிக் (அ) அயூப் இஸ்லாம் (அ) ஜமால் என்பவர் பாவ் நகர் பேருந்து நிலையம் பக்கத்திலுள்ள ஒரு தொலைபேசி நிலையத்தின் அருகே தனது மாமா அஜ்ஜு பைய்யாவின் இடத்தில் காணலாம் என அது தெரிவிக்கின்றது.

உயர் நீதிமன்றத்தில் சாதிக் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவை நம்பும் பட்சத்தில் பாவ்நகரின் மாவட்ட துணை கண்காணிப்பாளர் டிசம்பர் 23க்கு ஒரு மாதத்திற்கு பின்னர் அந்த குடும்பத்தை தொந்தரவு செய்யத் துவங்கியிருக்கிறார். போலீஸார் அவனை ஒரு சூதாட்ட வழக்கில் தேடி வருவதாக சாதிக்கின் குடும்பத்தாரிடம் கூறியுள்ளனர். சூதாட்ட தடைச் சட்டத்தின் கீழ் 9 நவம்பர் அன்று ஒரு புகார் பதிவு செய்யப்பட்டுள்ளது. பயந்து போன குடும்பத்தார் அவனது இருப்பிடம் பற்றி எதுவும் சொல்லவில்லை. ஆகையால், உளவுத்துறையின் இந்த தகவலை கறை கண்ட காவல்துறையின் குறிக்கோளுக்கு உதவியது. நரேந்திர மோடி மற்றும் பிரவீன் தொகாடியா ஆகியோரை கொலை செய்ய சென்ற வழியில் சாதிக் கொல்லப் பட்டதாக வன்ஜாரா தலைமையிலான காவல்துறையினர் சமர் பித்த அறிக்கை பின்னர் எடுத் துரைத்தது. ஆனால் இந்த என்கவுன்டர் உயரதிகாரிகள் பாவ்நகரை பார்வையிட்ட வெகு நாட்களுக்கு பின் 13 ஜனவரி 2003 அன்று நடந்தது.

பத்திரிக்கையாளரும் MCOCA கைதியுமான கேத்தன் திரோத்கர் தாக்கல் செய்த உறுதிமொழியில் தான் உண்மை உள்ளது. அவர் மற்றும் என்கவுன்டர் அதிகாரி தயாநாயக் இணைந்து சாதிக் ஜமாலை மும்பை போரிவல்லி தேசிய பூங்காவில் வைத்து டி.ஜி வன்ஜாராவிடம் ஒப்படைத்ததாகவும் அப்போது வன்ஜாரா மனித உரிமை அதிகாரி போல தோற்றமளித்ததாகவும் தெரிவித்துள்ளார். குஜராத் உயர்நீதிமன்றம் இவ்வழக்கில் இதை கருத்தில் கொண்டு மனுவை விசாரிக்குமானால், உளவுத்துறையின் தகவல் குறித்து அதிர்ச்சியான உண்மைகள் வெளிவரும். சாதிக் ஜமால் வழக்கில் மனுதாரரான முகுல் சின்ஹா சுட்டிக்

**அந்த கடிதம் கற்பனையான தீவிரவாத அச்சுறுத்தல்களி லிருந்து மாநிலத்தை பாதுகாப் பதற்காக எழுதப்படவில்லை. மாறாக, அது ஆதாரங்களை குற்றப்பிரிவு காவல்துறையிடம் முடக்குவதற்கும், இன்னும் போலி என்கவுன்டர்களை நியாயப் படுத்துவதற்கும் தான் எழுதப் பட்டிருக்கிறது**

காட்டுவது போல், இது நாட்டின் முதல் அரசியல் படுகொலைகள் பற்றிய உண்மைகளை வெளிக் கொணரும்.

இவைகளை வைத்து பார்க்கும் போது 2002 குஜராத் கலவரத்திலிருந்து இஷ்ரத் மற்றும் சொராபுதீன் கொல்லப்பட்ட 2005 வரை பணியாற்றிய இதே உளவுத்துறை அதிகாரிகளின் நடவடிக்கைகள் பற்றி கேள்வி எழுப்ப இயலும். உச்சநீதிமன்றம் புதிய சிறப்பு விசாரணை குழு நியமிக்கவோ சி.பி.ஐ.யிடம் நாட்டின் அரசியல் சதித்திட்டங் கள் பற்றி விசாரணை செய்ய உத்தரவிடவோ தயாராகிவிட்டது. உச்சநீதிமன்றம் துளசி பிரஜாபதி வழக்கை சி.பி.ஐ.யிடம் ஒப் படைக்க உத்தரவிட இருக்கும் அதே நேரம் குஜராத் உயர் நீதிமன்றம் சாதிக் ஜமால் என் கவுன்டர் வழக்கு மனு விசா ரணையை துவங்க இருக் கிறது.

இந்த மிகப்பெரும் சதி பற்றிய விசாரணை, 2005-2006 சொராபுதீன் என்கவுன்டரில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மற்றும் போலீசார் இடையே யான தொடர்பை மட்டுமல் லாமல் தெஹல்கா வசமுள்ள ஆதாரங்கள் மற்றும் தொலை பேசி அழைப்பு பதிவுகள் அடிப் படையில் 2004லிருந்து என் கவுன்டர் வரை நடந்த சம்பவங் களையும் வலம் வரும். சி.பி.ஐ. தாக்கல் செய்த குற்றப்பத்திரிக் கையிலிருந்து புரிவது என்ன வெனில், சொராபுதீன் வழக்கின் அடித்தளம் Popular Builders துப்பாக்கி சூடு வழக்கும் அதன் சி.பி.ஐ. சாட்சிகளான ராமன் & தஷ்ரத் படேல். சொராபுதீன் என்கவுன்டரின் போது அமித்ஷா தொலைபேசி அழைப்புகள் எதுவும் செய்யவில்லை என பி.ஜே.பி. உண்மைக்கு மாறாக பிதற்றிக் கொள்கிறது அதே வேளை உள்துறை அமைச்சர் சம்பவத்தில் ஈடுபட்டவர்களுடன் தொடர்ச்சியாக தொடர்பிலே இருந்தார் என்பது தெஹல்கா வினால் எடுக்கப்பட்ட அழைப்பு பதிவுகள் மூலம் தெரிய வருகிறது. அஹமதாபாத் கூட்டுறவு வங்கியில் உயர் பதவியில் உள்ள யஷ் பால் சுதசாமா மற்றும் அஜய் படேல் ஆகியோர் உட்பட இவர் கள் படேல் சகோதரர்களை மிரட்டி வந்தனர். வல்சாட் எஸ்.பி. அபய் சுதசாமா அதிகாரத்தை தவறாக பயன்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு சிறையிலிருக்கிறார்.

இவை மட்டுமல்ல,படேல் சகோதரர்கள் முதல்வருக்கு எழுதிய விண்ணப்பத்தையும் அதற்கு உள்துறை அளித்துள்ள பதிலையும் தெஹல்கா பெற்றுள் ளது. முதல்வர் புகாரை பெற்று சம்பந்தப்பட்டவர்களிடம் தொடர்பு கொண்டு அதற்கான துறை சார்ந்த விசாரணைக்கு உத்தரவிடும் வழக்கமான அலுவல் கள் இவை என்பதும் தெரிகிறது. முதல்வர் & உள்துறை அலுவலகத் தினர் நேர்மையான விசாரணை வேண்டிய தங்களது வேண்டு கோளை புறக்கணித்துவிட்டதாக ராமன் படேல் தெஹல்காவிடம் தெரிவித்தார். சுவாரஸ்யமாக, அதே சமயத்தில் வல்சாட் கண்காணிப்பாளராக பொறுப் பேற்றிருந்த அபய சுதசாமா 9 என்கவுன்டர்களை செய்தார். நிழலுலகத் தொடர்புடைய ஆயுத கடத்தல்காரன் ஹாஜியும் இதில் அடக்கம். சோட்டா ஷகீலின் ஒப்பந்தப்படி கொலையிலிருந்து ஹாஜி தப்பியதாக நம்பப்படுவ தால், சி.பி.ஐ. இப்போது சுதசாமா வின் நிழலுலக தொடர்பு பற்றி விசாரித்து வருகின்றனர். சுவாரஸ்ய மாக 2004 பிற்பகுதியில் நடந்த இச்சம்பவங்கள் தான் 2005 சொராபுதீன் படுகொலைக்கும், பின்னர் 2006 துளசி பிரஜாபதி படுகொலைக்கும் என்றால், 2004 Popular Build எர்ச் சம்பவத்திற்கு முன்னர் 2004 ஜுனில் இஷ்ரத் ஜஹான் மற்றும் ஜாவித் (அ) ப்ரனேஷ் பிள்ளை படுகொலை நடந்துள்ளது. "என்கவுன்டருக்கு அளிக்கப்பட்ட உளவுத்துறை தகவலே பொய்யானது" என இஷ்ரத் ஜஹானின் குடும்ப ஆலோசகர் விருந்தா க்ரோவர் கூறுகிறார். மும்பை காவல்துறை யிடம் சரிபார்த்த போது அவர் களுக்கு எந்த உளவுத்துறை தகவலும் வரவில்லை என தெரிவித்தனர். என்கவுன்டர் களில் உளவுத்துறையின் தகவல் களை மேற்கோள் காட்டி "காவல் துறை மற்றும் உளவுத்துறை அதிகாரிகள் விசாரிக்கப்பட வேண்டும்" எனவும் விருந்தா கூறினார். ஒரு வாரத்திற்கு முன் முன்னாள் அஹமதாபாத் ஆணையாளர் கே.ஆர். கெஷிக் கின் பங்குபற்றி விசாரிப்பதற்காக குஜராத் நீதிமன்றத்தால் தமான் அறிக்கை நிறுத்தி வைக்கப் பட்டதன் மூலம் இது உண்மை யாகிறது.(உண்மையில் முன்னேறி வரும் சி.பி.ஐ. மாநிலத்தின் மூத்த காவல்துறை அதிகாரி ஒருவர் இஷ்ரத்தை விசாரிக்க சென்றி ருக்கிறார்). பாகிஸ்தானின் லஷ்கரே தொய்பா மற்றும் ஹுஜி ஆகிய இயக்கங் களுடன் இஷ்ரத்திற்கு தொடர்பு இருப்பதாக நிரூபிக்கும் பொ ருட்டு அவளை அங்குள்ள தொலைபேசி எண்களுக்கு அழைப்பு கொடுக்க வற்புறுத்தி யுள்ளனர்.

**-நன்றி - தெஹல்கா - SHAB**

# முஸ்லிம்களின் ஒற்றுமைக்கு கிடைத்த வெற்றி!

கலைஞர் கருணாநிதி தலைமையிலான தி.மு.க. அரசு சிறுபான்மை மக்களின் நண்பராக தன்னை முன்னிறுத்தி செயல்பட்டு வந்தாலும், அவருக்கு கீழ் செயல்பட்டு வரும் பல அரசுத் துறையினரும், அரசு அதிகாரிகளும் கருணாநிதியின் ஆட்சிக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையிலும் சிறுபான்மை இன மக்களுக்கு எதிரான கீழறுப்பு வேலைகளிலும் ஈடுபட்டு வருகின்றனர். குறிப்பாக முஸ்லிம்கள் அதிகமாக வசிக்கும் ஐஸ்ஹவுஸ், இராயப்பேட்டை, புதுப்பேட்டை பகுதிகளை சேர்ந்த மின்சார துறையினரும், துப்புறவாளர்களும் இவ்வேலையில் கண்ணும் கருத்துமாக ஈடுபட்டு வருகின்றனர்.

முஸ்லிம்கள் ரமளான் மாதத்தில் இரவில் விழித்திருந்து வணங்குவதும், நோன்பிருப்பதும் அதற்கான சமையல் வேலைகளை இரவு நேரத்தில் செய்வதும் அனைவரும் அறிந்ததே.

கடந்த சில வருடங்களாக ரமளான் மாத இரவு நேரங்களில் ஐஸ்ஹவுஸ் மற்றும் புதுப்பேட்டை பகுதிகளில் மின்சாரம் தொடர்ச்சியாக நிறுத்தப்பட்டு வந்தது. சென்ற வருடமும் ரமளான் மாத இரவு நேரத்தில் இதே நிலை ஏற்பட்டது. அப்போது ஐஸ்ஹவுஸ் பகுதியைச் சேர்ந்த தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன் டிரஸ்டை சேர்ந்த அபூ அப்ரஹ் அவர்களும் த.மு.மு.க.வை சேர்ந்த இல்யாஸ் அவர்களும் இன்னும் சில நண்பர்களும் (ஐஸ்ஹவுஸ் பகுதியை பொறுத்த வரை அனைத்து இயக்கங்களை சேர்ந்தவர்களும் பொதுப் பிரச்சனையில் ஒருங்கிணைந்து செயல்பட்டு வருகிறார்கள்) இராயப்பேட்டை துணை மின் நிலையத்தை அணுகி முறையிட்டனர். இவ்வலுவலகம் இராயப்பேட்டை மருத்துவமனைக்கு எதிரில் உள்ளது. அவர்கள் முறையிட்டவர்களை இராயப்பேட்டை கபருஸ்தானுக்கு எதிரில் உள்ள மின் கட்டண வசூல் மையத்தை நோக்கி திருப்பி விட்டனர். அவர்கள் மீண்டும் இராயப்பேட்டை துணை மின் நிலையத்திற்குப் செல்லுமாறு திருப்பினர்.

இவ்வாறு இரண்டு அலுவலகத்திற்குமிடையே மாறி மாறி அலைகழிக்கப்பட்டனர் ஐஸ்ஹவுஸ் பகுதி முஸ்லிம்கள். இதற்கிடையில் இராயப்பேட்டை துணை மின் நிலைய அலுவலர்கள் சிலர் தரக்குறைவான வார்த்தைகளால் பேசத் தொடங்க அங்கே மோதல் உண்டாகும் சூழ்நிலை ஏற்பட்டது. அதை சாதுர்யமாக தவிர்த்து அப்பகுதி பொறியாளரிடம் (Area Engineer) புகார் தெரிவிக்கப்பட்டது. பின்னர் உடனடியாக மின்சார இணைப்பு தரப்பட்டது. இதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்றால் இரண்டு நிமிடங்களில் நடந்து முடிந்த அந்த வேலையை மூன்று மணி நேரமாக செய்யாமல் ஒருவிதமான பதட்ட சூழ்நிலையை மின்சாரத் துறையினர் உருவாக்கியதுதான். இவ் வருடமும் அதே போன்றதொரு சூழ்நிலை உருவானது. கடந்த செப்டம்பர் 2ம் தேதி வியாழன் அன்று நள்ளிரவில் 11 மணியளவில் மின்சாரம் நிறுத்தப்பட்டது. அது 1 மணி வரை வராததன் காரணமாக (இந்த மாதம் முழுவதுமே மின்சாரம் நிறுத்தப்படுவதும் வருவதுமாக இருந்தது குறிப்பிடத்தக்கது) வைகறை வெளிச்சம் பத்திரிகையாளர் அபூ அப்ரஹ் அவர்களும் த.மு.மு.க.வை சேர்ந்த சகோ. இலியாஸ், முபாரக், பக்ருதீன் போன்றோர் இராயப்பேட்டை கபருஸ்தானுக்கு எதிரில் உள்ள மின் கட்டண மையத்தை அணுகி புகார் செய்தனர். புகாருக்கு பதிலளித்த மின்சாரத்துறை அதிகாரிகள் சில கோளாறுகளின் காரணமாக மின்சார பகிர்மான

நிலையத்தில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது எனவும் தற்போது உடனடியாக மின்சாரம் வர வாய்ப்பே இல்லை எனவும் மறுநாள் காலை வர ஒன்றும் செய்ய இயலாது எனவும் கைவிரித்தனர். ஆனால் அங்கே மின்சாரத்துறை அதிகாரிகள் தங்களுக்குள் பேசிக் கொண்டதையும் மற்றவர்களுக்கு தெரிவித்த சில தகவல்களின் அடிப்படையிலும் சில விவரங்களை ஐஸ்ஹவுஸ் பகுதி முஸ்லிம்கள் புரிந்து கொண்டனர். அதாவது இந்த பிரச்சனை சரி செய்ய முடிந்த பிரச்சனையே. ஆனால் அதை சரி செய்யக் கூடிய பணியாளர் பல்லாவரத்தில் உள்ளார். தற்போது உடனடியாக வர மறுத்துவிட்டார். மேலும் இம்மாதிரியான நேரங்களில் மாற்று ஏற்பாடாக (Backup) தற்காலிக மின் இணைப்பு கையில் உண்டு. அதனை பாலாஜிநகர் பகுதிக்கு வழங்க அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளதையும் முஸ்லிம்கள் அறிய வந்தது. உடனே இதனை மின்சாரத் துறை ஊழியர்களிடம் தெரிவித்து தற்போது தொழுகையும் நோன்பு சமையல் செய்ய வேண்டியதையும் சுட்டிக் காட்டி அந்த மாற்று மின்சார இணைப்பை ஐஸ்ஹவுஸ் பகுதிக்கு வழங்க வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்தனர்.

ஆனால் இதனை ஏற்க மறுத்த மின்சாரத்துறை ஊழியர்கள் அவ்வாறு தங்களால் செய்ய இயலாது என மறுத்துவிட்டனர். இதே நேரத்தில் ஐஸ்ஹவுஸ் பகுதி மக்கள் வீட்டிற்கு வெளியே வந்து குழுமத் தொடங்கினர். ஒரு பதற்றமான சூழ்நிலை அங்கே உருவானதாக அபூ அப்ரஹ் அவர்களுக்கும், த.மு.மு.க. இல்யாஸ் அவர்களுக்கும் தகவல் வந்தது. இதனை மின்சாரத்துறை அதிகாரிகளிடம் சுட்டிக்காட்டியும் அவர்கள் நீங்கள் என்ன வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள், எங்களால் ஒன்றும் செய்ய இயலாது என்று கூறிவிட்டனர்.

பின்னர் சகோ. அபூ அப்ரஹ், த.மு.மு.க. இல்யாஸ், த.மு.மு.க. ஃபக்ருதீன் போன்றோர் ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தை அணுகி ஒரு பதற்றமான சூழ்நிலை உருவாகி இருப்பதை எடுத்துரைத்து இதனை தடுத்து நிறுத்துமாறு கோரிக்கை விடுத்தனர். ஆனால் காவல்துறையினரும் இது மின்சாரத்துறை சம்பந்தப்பட்ட பிரச்சனை நாங்கள் எதுவும் செய்ய இயலாது என்று கைவிரித்து விட்டனர்.

இதற்குள் முஸ்லிம்கள் கூட்டத்தில் சில புல்லுருவிகளும் குழப்பம் ஏற்படுத்தும் நோக்கில் ஊடுருவி இருந்தனர். காவல் நிலையத்திலேயே குழப்பம் எற்படுத்த முயன்ற அந்த குடிகாரர்களை சகோ. அபூ அப்ரஹ், ஃபக்ருதீன், இலியாஸ் போன்றோர் கட்டுப்படுத்தி கூட்டத்தை விட்டு விரட்டியடித்தனர்.

இதற்கிடையே இப்பிரச்சனை சம்பந்தமாக உடனடியாக கோபாலபுரம் சென்று கலைஞர் அவர்களை சந்தித்து புகார் தெரிவிக்க வேண்டுமென முஸ்லிம்கள் அனைவரும் ஒருமனதாக முடிவு செய்தனர். இதனை ஐஸ்ஹவுஸ் காவல்நிலையத்தில் தெரிவித்து விட்டு நள்ளிரவு 2 மணியளவில் கோபாலபுரத்தை நோக்கி ஊர்வலமாக புறப்பட்டு சென்றனர். கூட்டத்தில் ஊடுருவி இருந்த புல்லுருவிகளில் ஒருவனான மன்சூர் என்பவன் நடுநடுவே கருணாநிதி ஆட்சிக்கு எதிராகவும் சில தேவையற்ற கோஷங்களையும் எழுப்பி சில பிரச்சனைகளை உருவாக்க முனைந்தபோது இலியாஸ் அவர்கள் அதனை சாதுர்யமாக தடுத்தார்.

ஊர்வலத்தினர் மெதுவாக முன்னேறி இராயப்பேட்டை, புதுக்கல்லூரி இவற்றை கடந்து கோபாலபுரத்தைஅடைந்தனர். ஐஸ்ஹவுஸ் காவல் நிலையத்தில் அறிவித்து விட்டு வந்த பிறகும் அவர்கள் அதை வயர்லஸ் மூலம் தெரிவித்துவிட்ட பிறகும் வழியில் இராயப்பேட்டை காவல் நிலையத்தை கடந்த வந்த பிறகும் ஊர்வலத்தினரை யாரும் தடுக்காமல் கோபாலபுரம் வரை செல்ல அனுமதித்தது அனைவருக்கும் ஆச்சரியத்தை அளித்தது. காவல்துறையினரின் ரோந்து, பாதுகாப்பு ஏற்பாடுகள் போன்றவற்றின் மீது பல கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியது.

இறுதியாக ஊர்வலத்தினர் கோபாலபுரம் அருகே தடுத்து நிறுத்தப்பட்டனர். காவல்துறையினர் ஊர்வலத்தினருக்கு இப்பிரச்சனையை உடனடியாக கவனிப்பதாக வாக்குறுதி அளித்து நேரே மின்சார அலுவலகத்திற்கு சென்று சம்பந்தப்பட்ட மின்சாரத் துறை ஊழியர்களுடன் பேசியவுடன் உடனடியாக துண் டிக்கப்பட்ட மின்சார இணைப்பு மீண்டும் வந்தது. ஊர்வலத்தினர் காவல்துறைக்கு நன்றி தெரிவித்து கலைந்து சென்றனர்.

இந்த பிரச்சனையில் தாருல் இஸ்லாம் ஃபவுன்டேஷன்

டிரஸ்ட், த.மு.மு.க., இந்திய தவ்ஹீத் ஜமாஅத், மற்றும் அமைப்பு சாரா பொதுமக்கள் என அனைவரும் ஒன்றாக இணைந்து போராடியது அனைவரின் விழிகளையும் ஆச்சரியத்தில் உயர செய்தது. இவர்களுடன் இவர்களின் நோக்கம் நன்றாக இருந்ததன் காரணமாக பல இந்து சகோதரர்களும் இந்த ஊர்வலத்தில் இரவு நேரம் எனப் பாராமல் தங்களை இணைத்துக் கொண்டனர்.

இதனை தொடர்ந்து துப்புறவுத்துறை ஐஸ்ஹவுஸ் பகுதி மக்களை புறக்கணித்தது. அவர்கள் தொடர்ந்து பல நாட்கள் குப்பைகளை அகற்றாமல் விட்டதன் காரணமாக அப்பகுதியே துர்நாற்றம் அடித்து கொண்டிருந்தது. நோன்பு பெருநாளுக்கு முந்தைய தினம் இது குறித்து அப்பகுதி மாநகராட்சி உறுப்பினர் வாசுதேவன் (காங்கிரஸ்) அவர்கள் நீர் மெட்டல் துப்புறவு உறுப்பினர்களை உடனடியாக அப்பகுதியிலுள்ள குப்பைகளை அகற்ற உத்தரவிட்டார். ஆனால் அவர்களோ குப்பைகளை அகற்றாமல் தனியார் கட்டிட இடிபாடுகளை அகற்றும் வேலையில் பணத்தை வாங்கிக் கொண்டு மும்முரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தனர்.

வாசுதேவன் அவர்கள் இதனை கண்டித்து நீர்மெட்டல் ஊழியர்களை தட்டிக் கேட்க அவர்களோ வாசுதேவனை தாக்க முயன்றனர். வாசுதேவனுக்கு ஆதரவாக அவருடைய ஆதரவாளர்களும், பொதுமக்களும் களத்தில் இறங்க இந்த களேபரத்தில் துப்புறவு வாகனங்களின் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன. நீல் மெட்டல் உறுப்பினர்கள் 200பேர் பல பகுதிகளிலிருந்தும் ஒன்றும் கூடி தங்கள் கைகளிலிருந்து முள்கரண்டி போன்ற துப்புறவு ஆயுதத்தைக் கொண்டு தாக்க முயன்றனர். இதைத் தொடர்ந்து இருதரப்பாரையும் காவல் துறையினர் சமாதானப்படுத்தினர். அடுத்த நாள் நோன்பு பெருநாள் வெள்ளிக்கிழமை 10.9.2010 அன்ற மாநகராட்சி உறுப்பினர் வாசுதேவன் கைது செய்யப்பட்டார். முஸ்லிம்கள் அனைவரும் ஒன்று கூடி இதனை எதிர்த்ததன் விளைவாக உடனடியாக ஜாமீனில் விடுவிக்கப்பட்டார்.

ஆனால் இப்பிரச்சனையில் இன்று வரை தீர்வு ஏற்படவில்லை. இன்றும் அப்பகுதி குப்பைகள் பல இடங்களில் அகற்றப்படாமல் உள்ளன. இதன் காரணமாக அப் பகுதி மக்கள் மிகவும் அதிருப்தி அடைந்துள்ளனர். இதுவே இன்னுமொரு பிரச்சனை உருவாக காரணமாகி விடக்கூடாது. வாசுதேவன் போன்ற நகராட்சி உறுப்பினர்களே போராடியும் கூட ஐஸ் ஹவுஸ் பகுதி புறக்கணிக்கப்பட்ட பகுதியாகவே உள்ளது. இப்பொழுதும் இப்பகுதியில் அடிக்கடி மின்தடை ஏற்படுகிறது. பல தெரு மின் கம்பங்கள் திறந்த நிலையில் உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்தும் விதமாக உள்ளன. சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கவனிப்பார்களா?

-நமது நிருபர்

## காயல் இளவரசுவின் ‘அந்நிஸா’ நிகழ்ச்சி கனிமொழி எம்.பி. கவுரப்படுத்தினார்




கலைஞர் தொலைக்காட்சியில் ரமழான் மாதம் முழுவதும் ஸஹர் நேரத்தில் ‘அந்நிஸா’ என்றொரு நிகழ்ச்சியை காயல் இளவரசு அவர்கள் நடத்தினார்.

பெண்களால் பெண்களுக்காக நடத்தப்பட்ட இந்நிகழ்ச்சியைப் பாராட்டி காயல் இளவரசுவை கவுரவித்தார் கனிமொழி எம்.பி.

# லண்டனுக்குள் தீவிரவாதிகள் நுழைய திட்டம்!

## பிரிட்டிஷ் முஸ்லிம்கள் தடுக்கின்றனர்!

பிரிட்டன் நாட்டுக்குள் இந்தியாவின் பெண் தீவிரவாதி சாத்வி ரீதாம் பரா நுழைய முயற்சி செய்து வருகின்றார்.

இந்தத் தீவிரவாதியை நுழையவிடக்கூடாது என பிரிட்டிஷ் அரசை - ஆங்கிலேய அரசை அங்குள்ள முஸ்லிம்கள் கேட்டு வருகின்றனர். ஆனால் அங்குள்ள சில தீவிரவாதிகள் இதற்கு ஆதரவு தெரிவிப்ப தாகவும் செய்திகள் வெளிவந்துள் ளன.

**ஏன் தீவிரவாதி?**

சாத்வீ ரீதாம்பரா வர லாற்று சிறப்புமிக்க இந்திய அடையாளங்களுள் ஒன்றான பாபரி மஸ்ஜித் - ஐ இடித்ததில் முக்கிய பங்கு வகித்தவர். இது குறித்து லிப்ரான் கமிஷனால் குற்றஞ்சாட்டப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

பாபரி மஸ்ஜித் ஐ இடித்தப் பின்னணியில் 3000 முஸ்லிம்கள் கொலை செய்யப்பட்டார்கள். இந்தக் கொலை குற்றங்களு க்கும் இவருக்கும் சம்மந்தம் உண்டா? என்ற விசாரணையும் நடை பெற்று வருகின்றது.

இந்தியாவில் நடந்த பல குண்டுவெடிப்புகளுக்கும், இந்து அமைப்புகள்தாம் காரணம் என்பது அண்மையில் கண்டு பிடிக்கப்பட்டது. மர்கோவா, அஜ்மீர், ஷரீஃப் குண்டுவெடிப்பு, ஹைதராபாத் மக்கா பள்ளி குண்டுவெடிப்பு, ஷம்சுஹோத்தா ரெயில் குண்டுவெடிப்பு, மொடசா குண்டு வெடிப்புகள், நத்தேத் குண்டுவெடிப்பு, பூர்லினா மஸ்ஜித் குண்டு வெடிப்பு, ஜால்னா மஸ்ஜித் குண்டுவெடிப்பு, இவை அனைத் தும் இந்து அமைப்புகளால் நடத்தப் பெற்றவை என்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த அமைப்புகளுக்கும் இந்தப் பெண் மணிக்கும் (சாத்வீ ரீதாம்பரா வுக்கும்) தொடர்பு உண்டு என்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசா ரணைகள் தொடர்ந்து கொண்டி ருக்கின்றன.

இந்நிலையில் சாத்வீ ரீதாம் பரா பிரிட்டனுக்குள் நுழைய முயற்சி செய்து வருகின்றார். ஆகவே அவரை நுழைய விடக் கூடாது என முனாஃப் ஜீனா என்ற இந்திய முஸ்லிம்களின் அமைப் பைச் சார்ந்த பெண்மணி பிரிட் டன் அரசை கேட்டுக் கொண்டுள் ளார்.

சாத்வீ ரீதாம்பரா 2007 ஜூனில் பிரிட்டன் நாட்டுக்குச் சென்று 35 லட்சம் ரூபாயை வசூல் செய்துவந்தார். தன்னுடைய தீவிர வாதசெயல்களுக்காக. அதையே அவர் இப்போதும் செய்வார். அவர் இங்கே வந்து வெறுப்புப் பிரச் சாரங்களைச் செய்வார் என்றும், முனாஃப் ஜீனா கூறியுள்ளார். ஆனாலும் அவருக்கு விசா வழங் கப்பட்டுள்ளது என அரசு வட்டாரங்கள் அறிவித்துள்ளன.

இதில் வேதனை என்ன வெனில் இஸ்லாத்தை தன்னு டைய சீரிய விவாதங்கள் வழி பிரச்சாரம் செய்யும், டாக்டர் ஜாஹிர் நாயக் அவர்களுக்கு இதே பிரிட்டனுக்கு வர விசா வழங்க மறுத்த பிரிட்டன் இந்துத் தீவிரவாதிகளுக்கு விசா வழங்கி வருகின்றது.

பிரிட்டன் விசா வழங்கிடும் சட்டங்களின்படி தீவிரவாத குற்றங்களில் குற்றம் சாட்டப் பட்டவருக்கோ விசாரணைக்கு உள்ளானவருக்கோ விசா வழங் கிடக்கூடாது. அந்த விதிகளையும் மீறி விசா சாத்வீ ரீதாம்பராவுக்கு வழங்கப்பட்டுள்ளது. இப்படி எந்த குற்றச்சாட்டும் இல்லாத டாக்டர் ஜாஹிர் நாயக் அவர் களுக்கு விசா இல்லை.

பிரிட்டனில் இந்தத் தீவிர வாதிகளுக்காக வாதாடுகின்ற பிரிட்டன் நாடாளுமன்ற உறுப் பினர்கள் கூட உண்டு.

பெரிகார்டன் என்பவன் மனித இன துரோகி. மோடியை "The Lion of Gujarat" குஜராத்தின் சிங்கம் என கர்ஜித்தான். கார ணம் கேட்டால் லண்டனில் வாழும் குஜராத்திகளின் ஓட் டைப் பெறு வதற்கான வழி வேறெதுவும் தெரியவில்லை என்றாராம்.

ஆக மானங்கெட்ட நா டாக பிரிட்டன் மாறிவருகின்றது.

எனினும் பிரிட்டன் முஸ் லிம்கள் தங்கள் போராட்டத் தைத் தொடர்ந்து வருகின்றார் கள்.

**எம்.ஜி.எம்.**

# இஸ்ரேலின் எந்தப் பகுதியை வேண்டுமானாலும் தாக்கிட இயலும்!

ஹிஸ்புல்லாஹ்விடம்15,000 ஏவுகணைகள் இருக்கின்றன. இந்த ஏவுகணைகள் இஸ்ரேலின் எந்தப் பகுதியை வேண்டும் என்றாலும் தாக்கிட இயலும்.

ஏன் இஸ்ரேலின் கடைக்கோடி கடற்கரையான இலியட் 'ELIOT' கடற்கரைவரை தாக்கிட இயலும். இந்த இலியட் கடற்கரை செங்கடல் ஓரத்திலுள்ள ஒரு "வசதியானவர்களின் உல்லாச புரி". இந்த உல்லாச புரியை இமைப்பொழுதில் இல்லாமலாக்கிடும் ஆற்றலைப் பெற்றுள்ளது ஹிஸ்புல்லாஹ்.

இப்போது ஹிஸ்புல்லாஹ் பெற்றுள்ள ஏவுகணைகள் இலக்குகளைத் துல்லியமாகத் தாக்கிடும் ஆற்றலைப் பெற்றவை. தொலை தூரம் சென்று தாக்கிடும் தகுதி பெற்றவை. (Longer Range Roctes)

எல்லாவற்றிற்கும் மேலாக இந்த ஏவுகணைகள், ஹிஸ்புல்லாஹ்வின் சொந்தத் தயாரிப்புகள்.

இவை எங்கே இருந்து இயக்கப்படும். எங்கே இருந்து பறக்கும். எந்த இலக்குகளை அவை தாக்கும் என்பனவற்றை கணித்திட இயலாது.

2006 ஆம்ஆண்டு நடந்த 34 நாள் போரின் போது, ஹிஸ்புல்லாஹ் 4000 ராக்கட்டுகளை மட்டுமே தன் வயம் பெற்ற இஸ்லாமிய இயக்கமாக இருந்தது.

இந்த 4000 ராக்கட்களைக் கொண்டு இஸ்ரேலின் இராணுவ தளங்களை மிகவும் துல்லியமாகத் தாக்கிட இயன்றது, இதனால் 2006 போரில் இஸ்ரேலின் தெற்கு பகுதியை முழுமையாகத் தாக்கிடும் ஆற்றலை ஹிஸ்புல்லாஹ் பெற்றிருந்தது. தெற்கு பகுதியில் வாழ்ந்த இஸ்ரேலியர். வடக்குப் பகுதிக்கு ஓடினார்கள். போர் நடந்த 34 நாள்களும் இஸ்ரேலின் தெற்கு பகுதி செயலிழந்து நிலை குலைந்து போனது.

இந்தப் போரில் ஹிஸ்புல்லாஹ்விடமிருந்து தன்னைக் காப்பாற்றிக்கொள்ள ஐக்கிய நாடுகளின் சபையின் காலில் வீழ்ந்திட வேண்டிய நிலை ஏற்பட்டது.

லெபனானை மையங் கொண்டுதான் ஹிஸ்புல்லாஹ் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

1982களில் ஷாப்ரா ஷத்திலா ஆகிய லெபனானிலுள்ள பாலஸ்தீன அகதிகள் முகாமில் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களுக்கு பதிலாக எழுந்ததுதான் ஹிஸ்புல்லாஹ் என்ற இஸ்லாமிய போர் வீரர்களின் இயக்கம்.

அப்போது (1982)இல் லெபனானின் ஒரு பகுதியை (ஷாப்ரா ஷத்திலா பகுதிகள் உட்பட) இஸ்ரேல் ஆக்கிரமித்து வைத்திருந்தது.

1982 - 1987 வரையிலான காலகட்டத்தில் வடிவமைக்கப்பட்ட ஹிஸ்புல்லாஹ். 1990இல் லெபனானிலிருந்து இஸ்ரேலை விரட்டியடித்தது. அண்மைக் கால வரலாற்றில் இஸ்ரேல் அறுதியான தோல்வி ஒன்றை தழுவியது 1990 இல்தான்.

அதன் பின்னர் 2006 தாக்குதல் இஸ்ரேலுக்கு மரண அடியைத் தந்தது. இவற்றால் இன்று இஸ்லாமிய உலகில் அதிகம் செல்வாக்கைப் பெற்ற இயக்கமாக, ஹிஸ்புல்லாஹ் இருந்து வருகின்றது.

இப்போது ஹிஸ்புல்லாஹ்வின் தரமும், மக்கள் செல்வாக்கும் பெருகிவருகின்றது. இதனால் இஸ்ரேலுக்குப் பக்கத்தில் வாழும் லெபனான் பகுதி மக்கள் தங்கள் கிராமத்தை ஹிஸ்புல்லாஹ்வின் இராணுவ தளமாகத் தந்திட முன்வந்துள்ளார்கள்.

ஹிஸ்புல்லாஹ்வை சார்ந்த முஜாஹித்களுக்கு அடிக்கடி விருந்து வைத்து மகிழ்கின்றார்கள். தங்கள் வீட்டைச் சார்ந்த அல்லது தங்கள் குடும்பத்தைச் சார்ந்த ஒருவராவது ஹிஸ்புல்லாஹ்வில் அங்கம் வகிக்க வேண்டும் என ஆசைப்படுகின்றார்கள்.

நிலைமை இப்படி இருக்க இஸ்ரேல் வேறொரு கருத்தை வேகமாகப் பரப்பி வருகின்றது. அது ஹிஸ்புல்லாஹ் விடமிருப்பது வெறும் 15,000 ஏவுகணைகளல்ல அவை உண்மையில் 40,000 ஏவுகணைகளாகும். (அல் ஹம்ந்துலில்லாஹ்)

பாலஸ்தீனிலும், உலகின் இதர பகுதிகளிலும் முஸ்லிம் பெண்கள், குழந்தைகள் இவர்களைக் கொன்று குவித்துவரும் இஸ்ரேலுக்குதக்க பதிலடி கொடுக்கட்டும். ஹிஸ்புல்லாஹ் இன்ஷா அல்லாஹ்.

(ஆதாரம்: டெக்கான் க்ரானிக்கல் 5.9.2010 (ஏஎஃப்பி))

அல்லாஹ் ஆணை இடுகின்றான்:

“அவர்களை எதிர்ப்பதற்காக உங்களால் இயன்ற அளவு பலத்தையும் திறமையான போர் குதிரைகளையும், ஆயத்தப்படுத்திக் கொள்ளுங்கள். இதனால் நீங்கள் அல்லாஹ்வின் எதிரியையும் உங்களுடைய எதிரியையும் அச்சமடையச் செய்யலாம். அவர்கள் அல்லாத வேறு சிலரையும் நீங்கள் அச்சமடையச் செய்யலாம். அவர்களை நீங்கள் அறிய மாட்டீர்கள். அல்லாஹ் அறிவான். அல்லாஹ்வின் வழியில் நீங்கள் எதை செலவு செய்தாலும், அதற்கான நற்கூலி உங்களுக்குப் பூரணமாகவே வழங்கப்படும். ஒரு சிறிதும் உங்களுக்கு அநீதம் செய்யப்பட மாட்டாது”

**அல்குர்ஆன்: அல் அன்ஃபால்:60**

**- எம்.ஜி.எம்.**

# இஃப்தார் நிகழ்ச்சியில் கர்கரே நூல்







தமிழ் மாநில தேசிய லீக் சார்பில் சென்னை அசோகா ஹோட்டலில் அன்று இஃப்தார் நிகழ்ச்சி நடைபெற்றது.

அக்கட்சியின் பொதுச் செயலாளர் திருப்பூர் அல்தாப் நிகழ்ச்சிக்கு தலைமையேற்றார். தமிழ் மாநில ஜமா அத்துல் உலமா சபையின் தலைவர் அப்துர் ரஹ்மான் ஹழ்ரத் அவர்களின் உரையுடன் துவங்கிய இந்நிகழ்ச்சியை ஷம்சுத்தீன் எம்.ஏ. தொகுத்து வழங்கினார்.

எஸ்.டி. கொரியர் உரிமையாளர் நவாஸ் கனி, திருவான்மியூர் காஜா, இஸ்லாமிய இயக்கங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்ச்சியின் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற தமிழக துணை முதல்வர் மு.க. ஸ்டாலின், மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் ஆகியோருக்கு தாருல் இஸ்லாம் சார்பில் “கர்கரே-ஐ கொலை செய்தது யார்?” என்ற நூலை மவ்லவி இல்யாஸ் ரியாஜி வழங்கினார்.



# கம்யூனிஸத்தின் வீழ்ச்சி!

இஸ்லாம்

முதலாளித்துவம் அல்லது முதலாளித்துவ ஏகாதிபத்தியம்

கம்யூனிசம் என்ற பொதுவுடமை

இவை உலகை ஆட்சி செய்த மூன்று கொள்கைகள்.

நீதியை நிலைநாட்டுவதையே இலக்காக் கொண்டது இஸ்லாமிய ஆட்சி. நீதி நிலைநாட்டப்படுவதால் மக்கள் நிம்மதியாகவும், தங்களுக்கு வழக்குகளும், சழுக்குகளுமின்றி வாழ்ந்தார்கள் அனைத்துத்தரப்பு மக்களும்.

இந்த ஆட்சி ஓர் நீண்ட நெடியகாலம்வரை நிலைத்தது.

1924 ஆம் ஆண்டு பெப்ருவரி திங்கள் 22 ஆம் நாள் ஒரு பெரும் சூழ்ச்சியால் இந்த ஆட்சி வீழ்த்தப்பட்டது. அதாவது இஸ்லாத்தின் ஆட்சி, கிலாபத் வீழ்த்தப்பட்டது. (விரிவான விளக்கங்களுக்கு பார்க்க கிலாபத் : மு. குலாம் முஹம்மத், வேர்கள்)

இந்நிலையில் முதலாளித்துவம் வலுப்பெற்றது.

உலக நாடுகளின் இயற்கை வளங்களை சுரண்டி கொளுக்கத் தொடங்கியன முதலாளித்துவத்தை வழி முறையாகக் கொண்ட நாடுகள். பொருளா தார வளர்ச்சியில் பின் தங்கிய நாடுகளின் கனிம வளங்களை கொள்ளை கொள்ள அவை தயங்கிடவில்லை.

பின் தங்கிய நாடுகளின் இயற்கை வளங்களை நுகர்வோர் பொருளாக மாற்றி, மொத்த உலகையும் தனது அங்காடியாக மாற்றிட முனைந்தது. இந்த அங்காடி தேடிகளும் அலாதியான ஆசையால் அஃது ஆடிய அரசியல் சதுரங்களுக்கு அளவே இல்லை. முதலில் ஆங்கில ஏகாதிபத்தியம் இதற்கு தலைமை தாங்கிற்று. பின்னர் அமெரிக்க ஏகாதிபத்தியம் தலைமை தாங்கியது. ஒரு கட்டத்தில் மொத்த ஐரோப்பாவும் இதையே செய்தது.

உண்மையைச் சொன்னால் சுரண்டல், ஊழல், ஊதாரித்தனம் அரசியல் கொலைகள், ஒழுக்க வீழ்ச்சி இவையெல்லாம் முதலாளித்துவத்தின் தவிர்க்கவியலாத விளைவுகளாக ஆகின.

உலகநாடுகளின் வளங்களை தான் நிரந்தரமாகச் சுரண்டிட தனது ஏகாதிபத்தியத்

தையும், எடுபிடிகளையும் நிலை நாட்டிற்று முதலாளித்துவம்.

முதலாளித்துவம் கட்ட விழ்த்திட்ட கெடுபடிகளாலும் அநீதிகளாலும் பெருமளவில் நிலை குலைந்தவர்கள் உழைக்கும் மக்களும், பாட்டாளிகளுந்தான். அவர்கள் வெகுண்டு எழுந் தார்கள்.

விளைவு,

எழுந்தது கம்யூனிசம். உழைப்பவர்களுக்கே ஆட்சி சொந்தம் எனக் கூறி இரத்தப் புரட்சிகளின் வழியாக ஆட்சி களுக்குப் பிடித்தார்கள்.

உழைப்பாளர்களின் ஆட்சி என்ற நிலையில் ரஷ்யா என்ற நாட்டைத்தான் கம்யூனிசத்தோடு அடையாளப்படுத்தினார்கள்.

ரஷ்யாவின் தலைநகர் “மாஸ்கோ” கம்யூனிசத்தின் தலை நகரம் என அடையாளம் காட்டப்பட்டது. சிகப்பும், சிவப்பு நிறத்தைக் கொண்ட கொடியும் கம்யூனிசத்தின் சொந்த வண்ணமானது.

இந்தச் செங்கொடி உலகெங்கும் பறக்க வேண்டும் என்பதற்காக கம்யூனிஸ்டுகள் உலகெங்கும் நடத்திய ஆக்கிரமிப் புகள் குரூரம் நிறைந்த கொலை கள் இவை எழுத ஏடுகள் தாங்க மாட்டா.

இந்த ஆதிக்க வெறியின் ஒரு பகுதியாகத்தான் 1979களில் ஆப்கானிஸ்தானை ஆக்கிரமிக்க ரஷ்யா தன்னுடைய செம்படை யை அனுப்பியது.

ஏற்கெனவே ஆப்கானிஸ் தானின் ஆட்சியாளர்களைக் கம்யூனிசத்தின் வரட்டு சித்தாந்தங் களின் கீழும், முரட்டுப் பிடியின் கீழும் வைத்திருந்த ரஷ்யாவுக்கு ஆப்கானிஸ்தானுக்குள் படை நடத்திச் செல்வது மிகவும் எளிதாக இருந்தது.

ஆப்கானிஸ்தானின் ஆட்சி யாளர்களும் அவர்களின் கட்டுப் பாட்டின் கீழிருந்த படைகளும், கம்யூனிச ஆட்சியாளர்களை எதிர்க்க மாட்டார்கள். எதிர்க்க வில்லை என்ற நிலையில், அங்கு இஸ்லாத்தை இலட்சியமாகிக் கொண்டவர்கள் மட்டுமே அவர் களை எதிர்த்தாக வேண்டும் என்ற நிலை.

கற்களோடும், கம்புக ளோடும் இருவல்லரசுகளில் ஒன்றான ரஷ்யாவை எதிர்த்து முஜாஹிதீன்கள் அறுதி வெற்றியை அடைந்தார்கள்.

பத்தாண்டுகள் தொடர்ந்த இந்தப்போரில் முஜாஹிதீன்கள் 1989 இல் வென்றார்கள். செம் படைகள் புறமுதுகிட்டு ஓடின. (விரிவான தகவல்களுக்கு படிக்கவும் :ஆப்கானிஸ்தான் முஜாஹிதீன்களின் தியாகவரலாறு - மு. குலாம் முஹம்மது)

இந்திய போரின் அழுத்த தால் கம்யூனிசம் வீழ்ந்தது.

ரஷ்யா “USSR - United Soviet Socialistic Republic” என்றிருந்த ரஷ்யா உடைந்து Common Wealth of Russia என்றானது.

ஆறு நாடுகள் இஸ்லாமிய நாடுகளாகி ரஷ்யாவின் பிடியி லிருந்து அதாவது கம்யூனிசத்தின் பிடியிலிருந்து வெளியே வந்தன. இன்று நூறு சதவீத கல்வியைப் பெற்ற நாடுகள் என்று வளர்ந்து விடுகின்றன.

கம்யூனிஸிட் ரஷ்யாவின் பொதுவுடைமை பொய்த்து போனது. மாஸ்கோவிலேயே கம்யூனிசம் வீழ்ந்தது.

தங்கள் தோல்வியை சமாளிக்க ஒரு புது உத்தியைக் கையாண்டார்கள். அது, கம்யூ னிசம், முழுமையடைந்து விட்ட தாகவும் இனி கம்யூனிசத்தில் கட்டுப்பாடுகள் தேவைப்படாது என்றும் அறிவித்தார்கள்.

**பிரஸ்தோரிக்கா:**

தோற்று நிலத்தில் வீழ்ந் தாலும் மீசையில் நிச்சயமாக மண் ஒட்டவில்லை எனக் கூறிடுவது வல்லரசுகளின் வழமை. கைவந்த கலை.

இந்த வகையில்தான் அப்போதைய (1989இல்) ரஷ்ய கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர் (General Secretary Communist Party of the Soviet Union) மிக்காயில் கோர்பசெவ் ஒரு புதுக் கொள் கையைப் பிரகடனப் படுத்தினார். அதன் பெயர் பிரஸ்தோரைக்கா “Perestroika”.

இந்தப் பிரஸ்தோரைக்கா என்ற சொல்லுக்கு மறுஉருவாக் கம் (Restructuring) என்று பெயர்.

இந்தப் பின்னணியில் அவர் ஓர் நூலை எழுதி வெளியிட்டார் அதன் பெயர் “Perestroika”.

இந்த நூலை ஆழ்ந்து படித் தால் ஓர் உண்மைப் புலப்படும். அது படிப்படியாக கம்யூனி சத்தைத் தூக்கி வீசிவிடுவது என்பதுதான். இதனை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நூலின் பக்கம் 177 இப்படிக் பேசிற்று.

“Nations Have the Right to Choose their own way of Develop ment”

அதாவது ஒவ்வொரு நாட்டிற்கும் அதனதன் வளர்ச்சிப்

பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமையுண்டு.

இதிலிருந்து வெளிப்படும் உண்மை என்னவெனில் அதற்கு முன் அதாவது பிரஸ்தோரைக் காவுக்கு முன் கம்யூனிசம் பிடித் துக் கொண்ட நாடுகளுக்கு, அவற் றில் வளர்ச்சிப் பாதையைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் உரிமை இருக்கவில்லை. அந்த உரிமை அந்த நாடுகளுக்கு மறுக்கப்பட்டது என்ற உண்மை சுயப்பிரசவமாக வெளியே வரு கின்றது.

இந்த உரிமையை மறுத்து, கம்யூனிச சித்தாந்தங்களை அவற் றின் மேல் திணிக்க இந்தச் செங் கொடியினர் செய்த கொலைகள், குவித்த பிணங்கள் இவற்றிற்கு அளவே இல்லை.

இவர்களின் கொடூரங்கள் கொலைகள் இவற்றிற்கு ஆளான வர்கள், அழுதபோதும், தங்கள் வாழும் உரிமையைக் கேட்ட போதும் அந்தச் செய்திகள் உண்மையைச் சொன்னால் இவர் களின் தோல்விகள் உலக மக் களின் காதுகளுக்கு எட்டி விடாமலிருக்கத்தான் செய்தி களின் மேல் Iron Curtain இரும்புத் திரையைப் போட்டார்கள்.

ஆப்கானிஸ்தான் முஜா ஹித்களிடம் இவர்கள் பட்ட அடி இத்துணை அழுத்தமாகவும், ஆழமாகவுமிருக்கும் என யாரும் எதிர்பார்க்கவில்லை.

இதில் உலகமகா வேடிக்கை என்னவெனில் கம்யூனிசம் பொத் தென்று வீழ்ந்ததற்கும் ரஷ்யா சுக்கு நூறாக உடைந்து போன தற்கும் பெயர். புரட்சியாம் நாம் மேலே மேற்கோள் காட்டிய நூலில் கோர்பசெவ் இதனை இப்படிக் கூறுகின்றார்கள்.

'It may seem that our current Puestoraika could be called a revolution from above'

அதாவது,

'இப்போது நமது' 'பிரஸ் தோரைக்கா' வானத்திலிருந்து வந்த புரட்சி என்றே படும்.

எப்படி? தோல்விக்குப் பெயர் புரட்சியாம். அதுவும் வானத்திலிருந்து வந்தப் புரட்சி யாம்.

வானத்திலிருந்து வந்தப் புரட்சி. 'From above' என்ற சொற் கள் பொதுவாக இறைவனைக் குறிக்கவே பயன்படுத்தப்படும் உலக வழக்கில்.

ஈராக் - இல் ஏன் ஆக்கிரமிப்பை ஏன் நடத்தினீர்கள். என நமது,செருப்படி புகழ் 'புஷ்' (அமெரிக்க முன்னாள் அதிபர்) ஐ கேட்ட போது அவர் கூறினார். "The Command is from above" உத்தரவு வானத்திலிருந்து வந்தது என்றார். ஏறத்தாழ அதே சொல் லாட்சியைத் தான் கம்யூனிசத்தின் தோல்வியின் போது கோர்பசெவ் -வும் கையாண்டிருக்கின்றார்.

இதல் பெரிய அதிசயம் என்ற வென்றால் மதம் மக்களை மயக்கும் "அபின்" என்று கூறிய கம்யூனிஸ்டுகளின் வழித்தோன்றல் கள் எப்போது ஆண்டவனை -இறைவனை நம்பத் தொடங்கி னார்கள். தாங்கள் தோல்வியுறும் போதெல்லாம் "From Above" வானத்திலிருந்துதான் எல்லாம் என்பார்கள் போலும்.

இமாம் கொமைய்னி அன்று கோர்பசெவ்க்கு எழுதிய கடிதம்.

கம்யூனிசம் வீழ்ந்து, அஃது "Restructuring" மறு உருவாக்கம் என்ற புதிய சொல்லாட்சியோடு அதனை ஒத்துக் கொண்ட 1988-1989 களில். இமாம் கொமைய்னி அவர்கள் கோர்பசெவ்க்கு ஒரு கடிதம் எழுதினார். அந்தக் கடிதத்தில் இப்படிக் குறிப் பிட்டார்.

## சோவியத் அதிபர் கோர்பசேவ் அவர்களுக்கு இமாம் கொமைனி அவர்களின் மடல்!



மேதகு கோர்பசேவ் அவர்களுக்கு,

உங்களுக்கும், உங்கள் தலைமையின் கீழ் வாழும் சோவி யத் ரஷ்யாவின் குடிமக்களுக்கும் என் உளமார்ந்த வாழ்த்துக் கள்.

நீங்கள் ரஷ்யாவை வழி நடத்தும் பொறுப்பை ஏற்ற நாளிலிருந்து உலக விவகாரங் களை அணுகுகின்ற முறையில் மகத்தான பல மாற்றங்களை வெளிக்காட்டி இருக்கின்றீர்கள்.

அதே போல் ரஷ்யாவின் உள்நாட்டு விவகாரங்களை



நீங்கள் சீர்திருத்தும் முறையிலும் மகத்தானதொரு மாற்றத்தைக் காண்கின்றேன்.

ரஷ்யாவின் அதிபர் உலக பிரச்னைகளை அணுகும் முறையில் மாற்றங்கள் ஏற்படுமேயானால், அது உலக வரலாற்றின் போக்கையே மாற்றும் என்பதை நான் அறிவேன்

ஆகவேதான் இந்த மடலை உங்கள் பார்வைக்காக வரைந்திட வேண்டியது அவசியமாகி விட்டது.

கம்யூனிஸத்தையே தலைகீழாக மாற்றி அமைக்கும் விதத்தில் நீங்கள் மேற்கொண்ட முடிவுகள் உறுதியானவை - பாராட்டுகின்றேன்.

இன்றுவரை சிவப்புச் சித்தாந்தத்தைக் காட்டி, இளைய தலைமுறையின் ஆற்றல்களை இரும்புக் கூட்டுக்குள் சிறைவைத்திருந்தார்கள் உங்கள் முன்னோர்கள்.

இந்த இரும்புக் கூட்டை உடைத்தெறிவதில் நீங்கள் காட்டிய பேராண்மை பாராட்டுக்குரியது - பாராட்டுகின்றேன்.

கம்யூனிஸம் இன்று வரை வழிபட்டு வந்த மரபுகளுக்கு அப்பால் நின்று சிந்திக்கின்ற உங்களுக்கு ஒன்று சொல்வேன்.

நீங்கள் உலகப் பிரச்னைகளுக்கும், உள்நாட்டு பிரச்னைகளுக்கும் தீர்வு காண்பதற்கு முன்னால், உங்கள் முன்னோர்கள், மதத்திற்கு எதிராக மேற்கொண்ட கோபத்திலிருந்து உங்களை விடுவித்துக் கொள்ளுங்கள்.

இறைவனை இல்லையென்று சொல்லும் நாத்திகவாதத்திற்கு இன்றுவரை தந்து வந்த ஊக்கத்தையும் உற்சாகத்தையும் உதறித் தள்ளிவிடுங்கள்.

உங்கள் முன்னோர்கள் மதத்திற்கு எதிராக மேற்கொண்ட போர்க்குணங்கள். இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை மறுத்தது. இவைதான் ரஷ்ய மக்களின் வாழ்க்கையையும் இன்னுமுள்ள கம்யூனிச நாடுகளில் வாழும் மக்களின் வாழ்க்கையையும் பாழாக்கிவந்தன.

இன்றைய உலகைக் கவ்வி இருக்கும் பிரச்னைகளைத் தீர்த்து அமைதியை நிலைநாட்ட வேண்டும் என்றால், நீங்கள் இறைவனை மறுக்கும் போக்கையும், மதத்திற்கு எதிரான போரையும் கைவிட்டே யாக வேண்டும்.

இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை ஏற்றுக் கொண்டு மதத்தை அங்கீகரித்து, அதன் அடிப்படையில் நீங்கள் உலகப் பிரச்னைகளைத் தீர்த்திட முன்வந்தால், நீங்கள் அதில் நிச்சயமாக வெற்றி பெறுவீர்கள். இதை அறுதியிட்டு உறுதி கூறுவேன்.

இன்று உலகிலுள்ள முதலாளித்துவ நாடுகளின் வளர்ச்சி உங்கள் கண்களுக்குப் பகட்டாகப்படுகின்றது.

அந்த முதலாளித்துவத்தை நோக்கி அடியெடுத்து வைக்க ஆசைப்படுகின்றீர்கள்.

ஆனால் உண்மை வேறொரு பக்கத்தில் இருக்கின்றது.

முதலாளித்துவத்திற்குள் புகுந்து நீங்கள் சோஷலிஸம் எனும் நீறூற்றி வளர்ந்த பிரச்னை களுக்கு ஓர் விடிவுகாண விரும்பி னால், ஒரு தவறைக் கிள்ளி எறிந்துவிட்டு இன்னொரு தவறுக்குள் நுழைகின்றீர்கள் என்றே பொருள்.

கம்யூனிசத்தால் ஏற்பட்டு விட்ட கேடுபாடுகளைக் களைந்திட நீங்கள் முதலாளித்துவத்தைப் புகுத்தாதீர்கள். அப்படிச் செய்தால் முதலாளித்துவத்தால் ஏற்படும் இழப்புகளை ஈடுகட்ட உங்களுக்குப் பின்னால் வருபவர்கள் பல சீர்திருத்தங்களைக் கொண்டு வர வேண்டியதிருக்கும்.

இன்னும் விளக்கமாகச் சொன்னால். எப்படி எழுபது ஆண்டுகளாக உங்கள் முன்னோர்கள் செய்துவந்த தவறுகளைத் திருத்தவதற்கு உங்களுடைய முயற்சிகள் தேவைப்பட்டனவோ அதே போல் -

உங்களுடைய தவறுகளைத் திருத்துவதற்கு உங்களுக்குப் பின்னால் வருபவர்களின் முயற்சி தேவைப்படும்.

ஏனெனில் கம்யூனிசத்தைக் கழுத்தைப் பிடித்துத் தள்ளிவிட்டு, முதலாளித்துவத்தை அந்த இடத்தில் கொண்டுவருவது தலைவலி போய் திருகுவலி வந்த கதையாகத்தான் முடியும்.

அன்புக்குரிய சோவியத் அதிபர் அவர்களே!

நாம் உண்மையைத் திறந்த மனத்துடன் அறிந்திடவும், ஏற்றுக் கொள்ளவும் முன்வருவோம்.

இன்றைய கம்யூனிஸ ரஷ்யாவின் குடிமக்களைப் பிடித்திருக்கும் உண்மையான பிரச்னை பொருளாதார கேடுபாடுகளோ தனியுரிமையோ அல்ல.

இன்று சோவியத் சமுதாயத்தை பீடித்திருக்கும் நோய் இறைவன் ஒருவன் இருக்கின்றான் என்ற உண்மையை மறுப்பதே!

இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையை நிராகரித்

ததால் தான் மேலை நாட்டினர் தங்களின் நிம்மதியை இழந்து வருகின்றனர்.

ஆகவே, மீண்டும் ஒன்றை வலியுறுத்த விரும்புகின்றேன்.

ரஷ்ய மக்களின் பிரச்னைகள் எங்கே ஆரம்பிக்கின்றன என்று பார்த்தால் ஓர் உண்மை வெளிச்சத்திற்கு வரும்.

அனைத்தையும் படைத்த இறைவனுக்கெதிராக அவர்கள் நடத்தும் அர்த்தமற்ற பயனற்ற போராட்டத்திலிருந்தே ரஷ்ய மக்களின் அனைத்து பிரச்னைகளும் ஆரம்பமாகின்றன.

கம்யூனிசத்தை இனி கண்காட்சியில் வைத்துதான் பார்த்திட வேண்டும். மார்க்சிசத்தால் மனித இனத்தின் உண்மையான பிரச்னைகளைத் தீர்த்திட இயலவில்லை. இந்தப் பேருண்மை வெட்ட வெளிச்சமாகி விட்டது.

அன்புக்குரிய, கோர்பசேவ் அவர்களே! நீங்கள் அவமானத்திற்கு அஞ்சி, 'நாங்கள் கம்யூனிசத்திலிருந்து முற்றாக முகந்திரும்பி விடவில்லை' என்று வெளியே கூறிக் கொள்ளலாம்.

இன்னும் ஒரு படி மேலே போய், இனிவரும் அறிக்கைகளிலும், பேட்டிகளிலும் உங்களுக்கு இன்னும் கம்யூனிசத்தில் நம்பிக்கை இருப்பது போலவும் காட்டிக்கொள்ளலாம்! ஆனால் உங்களது அடிமனத்தின் ஆழத்தில் நீங்கள் ஓர் உண்மையை அறிவீர்கள்!

அதாவது எந்தப் பிரச்னையையும் கம்யூனிசம் தீர்த்து வைத்திடவில்லை. மாறாக எல்லாப் பிரச்னைகளையும் அது இன்னும் சிக்கலாக்கி வைத்திருக்கின்றது.

சீனாவின் தலைவர் கம்யூனிசத்திற்கு முதல் அடியைத் தந்தார்.

நீங்கள் அதற்கு முடிவான அடியைத் தந்துள்ளீர்கள்.

இந்த நேரத்தில் திறந்த மனத்துடன் ஓர் உண்மையை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன்.

தயவு செய்து முதலாளித்துவத்தின் வலையில் வீழ்ந்து விடாதீர்கள்.

70 ஆண்டுகளாகக் கம்யூனிசம் மனித இனத்தின் மேல் கட்டவிழ்த்துவிட்ட கொடுமைகளைத் துடைத்த பெருமை உங்களைச் சாரும்.

இந்தப் பெருமை பெற்ற நீங்கள் இன்னொரு தவறான கொள்கையில் அடியெடுத்து வைத்து விட்டீர்கள் என்ற அவமானத்தைப் பெற்று விடாதீர்கள்.

அல்லாஹு அக்பர் - இறைவனே பெரியவன்; முஹம்மது (ஸல்) அவர்கள் அந்த ஏக இறைவனின் இறுதித் தூதர் என்ற வெற்றி முழக்கம், தொழுகை அழைப்பு (பாங்கொலி) இன்று கம்யூனிசத்தின் பிடியிலிருந்த நாடுகளில் ஒலிக்கத் துவங்கி இருக்கின்றது.

இந்த உண்மை முழக்கம் விண்ணில் உயர்ந்துசெல்லும் நேரத்தில் உலக இலாபங்களை அடிப்படையாகக் கொண்ட எல்லாக் கொள்கைகளும் மண்ணில் வீழ்ந்து கொண்டிருக்கின்றன.

மனிதன் பார்த்து, தொட்டு, உணரக் கூடியவற்றை மட்டுமே நம்புவேன். இந்த உலகத்தையும், இன்னுமுள்ளவற்றையும் படை த்த இறைவனைப் பார்த்துவிட்டு வந்தால் தான் நம்புவேன் என்றெல்லாம் அடம்பிடிப்பது அடாவடித்தனங்களேயாகும்.

அன்று, இறைவனின் தூதர் மூஸா (அலை) அவர்களிடம் சிலர் இப்படித்தான் அடம்பிடித்தார்கள். அவர்களைப் பார்த்து இறைவனின் இறுதி வெளிப்பாடு திருக்குர்ஆன் இப்படிப் பேசுகின்றது.

“அன்றி நீங்கள் (மூஸாவை நோக்கி) மூஸாவே! நாங்கள் அல்லாஹ்வை பிரத்தியட்சமாகக் காணும் வரையில் உம்மை நாம் விசுவாசிக்க மாட்டோம்” என்று கூறியபோது , நீங்கள் பார்த்துக் கொண்டிருக்கும்போதே உங்களை இடி முழக்கம் பிடித்துக் கொண்டது. (2:55)

இன்னொரு இடத்தில் இறைமறை இப்படிக் குறிப்பிடுகின்றது:

“எவருடைய பார்வையும் அவனை அடையாது. அவனே யாவற்றையும் பார்க்கின்றான். அவன் நுட்பமும் தெளிவும் ஆனவன். அறிந்தவன்” (6:103)

இறைவன் ஒருவன் இருக்கின்றான். அவன் ஒருவனாகவே இருக்கின்றான். இந்த உலகம் ஒரு நாள் அழிக்கப்பட்டுவிடும்.

இறந்த பின்னால் ஒரு வாழ்க்கை வரத்தான் போகின்றது. அதுபோது இறைவனை நீங்கள் சந்தித்தே ஆக வேண்டும். அவனை நம்பியே ஆக வேண்டும்.

இந்த நம்பிக்கைகளில் தாம் “மனிதன் ஏன் வாழ வேண்டும்?” என்ற கேள்வியின் பதிலும், மனித இனத்தின் ஈடேற்றமும் இருக்கின்றது.

இதை நான் விரிவாக விளக்கிட முடியும். அவ்வளவு நீண்ட விவாதம் இப்போது இந்த மடலில் வேண்டாம் எனக் கருதுவதால் விட்டு விடுகின்றேன்.

ஒன்றை மட்டும் இறுதியாகச் சொல்லிட விரும்புகின்றேன். நீங்கள் வெற்றுத் தத்துவங்கள் எனக் கருதி உதாசீனம் செய்யும் இவை வாழும் உண்மைகள்.

என் அன்புக்குப் பாத்திரமான கம்யூனிச உலக அதிபர் அவர்களே! நான் உங்களிடம் மெத்தப் பணிவன்போடு கேட்டுக் கொள்வதெல்லாம் நீங்கள் எதிர்கால கம்யூனிச உலகத்தை இன்னொரு தவறான அடிப்படையில் உருவாக்க முற்படுமுன் இஸ்லாத்தைப் பற்றி நன்றாக சிந்தியுங்கள். இது என் அன்பான அழைப்பு.

இஸ்லாத்திற்கு நீங்கள் தேவைப்படுகின்றீர்கள் என்பதற்காக நான் இந்த அழைப்பை உங்கள் முன் வைக்கவில்லை.

மாறாக, உலகை இன்று கவ்வி இருக்கும் நோய்களைத் தீர்க்கும் மாமருந்தாக மனித இனத்தை ஈடேற்றவல்ல ஒரே கொள்கையாக இஸ்லாம் இருப்பதால்தான் தீன் - இஸ்லாம் உங்களுக்கு தேவைப்படுவதால் உங்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கின்றேன்.

நீங்கள் போலித்தனத்தை அதிகமாக விரும்பமாட்டீர்கள் என்பதை அறிந்துதான் யதார்த்தமான வாழ்க்கை நெறியாம் இஸ்லாத்தின் பக்கம் உங்களை அழைக்கின்றேன்.

இஸ்லாத்தை நீங்கள் அறிந்து கொண்டால் ஆப்கானிஸ்தான்போன்ற பிரச்னைகளுக்கு மிக எளிதில் தீர்வு கிடைத்துவிடும்.*

ரஷ்யாவில் இன்றுவரை, மத சுதந்திரத்தின் மேல் போட்டிருந்த தடையை நீங்கள் அகற்றி இருக்கிறீர்கள்.

ஆப்கானிஸ்தான் முஜாஹித்களின் வெற்றிக்கு இஸ்லாம் தான் காரணம்.

அதே இஸ்லாம் தான் ஈரானை எந்த வல்லரசுக்கும் வளைந்து கொடுக்காமல் வாழ வைக்கிறது.

உங்களுடைய பார்வையில் இஸ்லாமும் ஓர் மதம்தான் என்றால் அந்த மதத்தின் ஆற்றலை நீங்கள் அனுபவத்தில் உணர்ந்திருக்கின்றீர்கள்.

இந்த மதம்(இஸ்லாம்) ஒரு போதும் மக்களை மயக்கும் அபினாக இருந்ததில்லை. மாறாக மனித இனத்தை அநீதிகளுக்கெதிராகவும் தீமைகளுக்கு கெதிராகவும், ஒழுக்கக் கேடுகளுக்கு எதிராகவும் கிளர்ந்தெழுந்து போராட வைத்த பெருமைபெற்றது.

கம்யூனிச உலகை புதுப் பாதையில் செலுத்துமுன், இறைவனின் வழிகாட்டுதலாகிய இஸ்லாத்தை சிந்தித்துப் பாருங்கள். அதன்பின் உங்கள் விருப்பம் போல் முடிவு செய்யுங்கள்.

என்னுடைய அழைப்பை உங்கள்முன் பகிரங்கமாக வைத்துவிட்டேன்.

இது குறித்து சிந்திப்பது, ஏற்பது உங்கள் விருப்பத்தைப் பொறுத்தது.

எது எப்படி இருந்தாலும் ஈரான் உங்களோடு சிறந்ததொரு உறவை வைத்துக் கொள்ள விரும்புகின்றது.

உண்மையை நாடும் அத்தனை ஆத்மாக்கள் மீதும் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டும்.

**இவண்**

**அல்லாஹ்வின் அடிமை**

**ஆயத்துல்லாஹ்**
**ரூஹுல்லாஹ் கொமைனி**

இமாம் அவர்கள் இந்த மடலை கோர்பசேவ் அவர்களிடம் தர ஈரானில் இருந்து ஓர் குழுவை அனுப்பினார்கள். அதில் இரண்டு பெண்களும் இடம் பெற்றார்கள்.

**சினாவின் நிலை**

கம்யூனிசம் உலகில் உயர்ந்து வந்தபோது சீனாவும் இன்னும் சில நாடுகளும், இந்தக் கொள்கையைப் பின்பற்றி தங்கள் ஆட்சிச் சக்கரத்தைத் சுழற்றின.

சீனாவில் இந்த கம்யூனசத்தின் - பொதுவுடைமயின் அடையாளமாக "மாவோ" திகழ்ந்தார்.

1949 இல்அவர் ஓர் இரத்தப் புரட்சியின் வழி பல மாற்றங்களைக் கொண்டு வந்தார்.

ஆனால் அதுவும் அதிக நாள்கள் நீடிக்கவில்லை.

1949களில் வந்த புரட்சி 1976ல் மாவோ மரணத்தைத் தழுவியவுடன் இல்லாமல் போய் விட்டது.

சீனத்து ஆட்சியாளர்கள், இஸ்லாத்தின் பக்கம் தங்கள் கவனத்தைத் திருப்பினார்கள். ஆனால் இஸ்லாத்திலிருக்கும் பூரண மதுவிலக்கு, விபச்சாரத்தின் மீதான ஒட்டு மொத்தமான தடை, இன்னோரன்ன ஒழுக்க விதிகளால் அஃது இஸ்லாத்தைப் புறந்தள்ளியது.

அனைத்தையும் விஞ்சி XIANPENG என்பவர் ஆட்சிக்கு வந்தார்.

இவர் மாவோயிசத்தின் தோல்வியைத் தெளிவாக உணர்ந்தார்.

அதே நேரத்தில் தோல்வியைப் பகிரங்கமாகப் பேசிடவும் முடியாது. மாவோயிசத்தின் தோல்விகளை பகிரங்கமாக பேசினால் தன்னையே தீர்த்துக் கட்டி விடுவார்கள் என்பதையும் உணர்ந்தார்.

ஆதலால் மிகவும் புத்திசாலித்தனமாக ஓர் அறிவிப்பை செய்தார். மாவோயிசத்தின் நன்மைகளை நாம் முழுமையாக அறுவடை செய்ய வேண்டும் என்றால் நாம் இன்னொரு புரட்சிக்குத் தயாராக வேண்டும் என்றார்.

உண்மையைச் சொன்னால் கம்யூனிசத்தை மூட்டைக்கட்டி வைத்துவிட்டு, முதலாளித்துவத்தை நோக்கி எடுத்து வைத்த முதல் அடி முதல் படி.

நாசூக்காக மாவோயிசத்தின் குறைகளையும் சுட்டிக் காட்டினார். மிகவும் அறிவுப்பூர்வமான சொல்லாட்சி ஒன்றை கையாண்டார். "Seven parts good Three parts bad".

ஏழு நன்மைகளையும் மூன்று தீமைகளையும் கொண்டது தான் 'மாவோயிசம்' என்றார்.

நமக்கு வெளிச்சம் வேண்டும் என்றால் நாம் புதிய வழிகளை நோக்கி பயணம் செய்திட வேண்டும் என்றார்.

அதாவது கம்யூனிசத்தை மூட்டை கட்டி வைத்துவிட்டு முதலாளித்துவத்தை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும் என்பதே இதன் சுருக்கம்.

இன்று முதலாளித்துவத்தின் அல்லது ஏகாதிபத்தியத்தின் மூச்சாகக் கருதப்படுபவை சிறப்புப் பொருளாதார மண்டலங்கள்.

இந்த சிறப்பு பொருளாதார மண்டலங்கள் வருமிடங்களிலெல்லாம் மக்கள் தங்கள் உயிரை பணயம் வைத்துப் போராடுகின்றார்கள்.

காரணம், தலைமுறை, தலைமுறையாக அவர்கள் வாழ்ந்த இடங்களிலிருந்து அவர்கள் வெளியேற்றப்படுகின்றார்கள். அவர்களுக்கு உரிய விலைகளைத் தருகின்றோம் எனக் கூறிடும் வெளிநாட்டு நிறுவனங்கள், அவர்களை பெரும்பாலும் ஏமாற்றவே செய்கின்றன. அதற்கு நம் மத்திய அரசும் மாநில அரசுகளும் துணை போகின்றன.

ஏன் ஆண்டாண்டு காலமாகக் கம்யூனிசம் ஆட்சிச் செய்யும் மேற்கு வங்கத்தில் கூட இதுவே நடந்தது. இடத்தை விட்டுத் தந்திட மாட்டேன் எனக் கூறிய கிராம வாசிகளை கம்யூனிஸ்ட் தொண்டர்களை விட்டே கொலை செய்தார்கள் மேற்கு வங்க நந்திகிராமில்.

இப்படி அனைத்து அடாவடித்தனங்களோடும் அரங்கேறும் இந்த சிறப்புப் பொருளாதார மண்டலங்களை அன்றே சைனாவில் கொண்டுவந்தார் மாவோவுக்குப் பின் சைனாவை ஆட்சி செய்ய டெங்சியாபிங்க் DENG XIOPING.

இந்தச் சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் வெளிநாட்டிலிருந்து நம் நாட்டின் உள்வருவதற்கு மிகவும் கேவலமானதொரு நிபந்தனையை நாம் ஒத்துக் கொள்கின்றோம். அது, அந்த வெளிநாட்டு நிறுவனங்களின் செயல்களை நமது உள்நாட்டுச் சட்டங்கள் கட்டுப்படுத்தாது.

கட்டுப்படுத்தாது என்பது மட்டுமல்ல, மாறாக அந்த வெளிநாட்டு நிறுவனங்களுக்கு நமது உள்நாட்டுச் சட்டங்களிலிருந்து பாதுகாப்பும் அளிக்கும்.

இதனை இங்குள்ள கம்யூனிச கட்சியைச் சார்ந்த ஒரு சாரார் மறுகாலனியாதிக்கம் என்றார்கள். ஆனால் அதனை அன்றே 1976-1986 களிலேயே சீனாவில் செயலில் கொண்டு வந்தார் டெங்சியாபிங்.

பின்னர் இதனை மாபெரும் புரட்சி எனச் சீனத்து குடிமக்களே அழைத்தார்கள். ஏனெனில் இந்த வெளிநாட்டு நிறுவனங்களின் வருகையினால் மின் உற்பத்தி பெருகிற்று. மின்விளக்குகள் சீனாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் பளிச்சிட்டன.

பின்னர் இதே கம்யூனிச சீனா, முதலாளித்துவத்தின் தீமைகளால் பாதிக்கப்பட்டது. ஒழுக்கக்கேடுகள், உல்லாச புரிகளில் சிலர், யாசித்துதான் வாழ வேண்டும் என பலர். இதனால் அங்கே இன்னொரு புரட்சி ஏற்பட்டது. ஆனால் அஃது ஈவிரக்கமின்றி நசுக்கப்பட்டது.

விளைவு 1989 இல் "டியென்மென் ஸ்கேயர்" Tiananman Square என்ற Gate way of Peace: நிம்மதியின் நுழைவாயில் அப்பாவி மக்களின் மரணத்தின் நுழைவாயில் என்றானது.

இப்படி மாஸ்கோவிலும் (கம்யூனிசத்தின் தலைநகர் எனக் கருதப்பட்ட ரஷ்யாவின் தலைநகர்) பிஜிங்கிளிலும் (கம்யூனிச சித்தாந்தின் இன்னொருமையம்

எனக்கருதப்பட்ட சீனாவின் தலைநகர்) வீழ்ந்து போன கம்யூனிசம் இந்தியாவில் வாழும் என இங்குள்ள நமது கம்யூனிச தோழர்கள் நமக்குப்பாடம் சொன்னார்கள். இந்தத் தோழர் கள் சில பிரச்னைகளில் (கொள் கையளவில் அல்ல) நமக்குத் தோள் கொடுப்பவர்கள் என்ப தனால் நாமும் அதை நம்பினோம் (என்னைப் போன்றவர்கள் அதனை சீரியஸாக எடுத்துக் கொள்ளவில்லை).

### இந்தியாவில் கம்யூனிசம்



ஆனால் இந்தியாவிலும் அது கதைக்குதவாது என்பது கம்யூனிசத்திற்காக வாழ்ந்தவர் களின் வாய்களிலிருந்தே வந்து விட்டது. முதன் முதலில் இந்தப் பிரகடனத்தைச் செய்தவர் இந்தியக் குடிமக்களின் அன்புக் குப் பாத்திரமான ஜோதிபாசு அவர்கள்தாம்.

மாண்புமிகு ஜோதிபாசு, அவர்கள் பென்னம்பெரிய தொரு பாரம்பரியத்திற்குச் சொந்தக் காரர்.

கம்யூனிசத்தின் எடுத்துக் காட்டாய் வாழ்ந்தவர். மேற்கு வங்கத்தில் 23 ஆண்டுகளாய் ஜூன்21, 1977 நவம்பர் 6, 2000 வரை ஆட்சி செய்து அலுத்து போய் இனி வேறுயாராவது இந்த ஆட்சியை நடந்துங்கள், என முதலமைச்சர் பதவியைத் தந்தவர் கள்தாம். 1996 ஆம் ஆண்டு நமது இந்திய அரசியலில் ஏற்பட்ட நெருக்கடியின்போது, பிரதமர் பதவிக்கு கூட்டணி கட்சிகளால் முன்மொழியப்பட்டவர் தாம் ஜோதிபாசு.

அந்த ஜோதிபாசுதான் 2008 களில் இனி கம்யூனிசம் கதைக் குவராது முதலீடுகளில்லாமல் இனிவளர முடியாது என அறிவித்தார்.

தமது நீண்ட அரசியல் வாழ்வில் ஏழைகள் ஏற்றம் பெற பல பொன்னரிய திட்டங்களைத் தந்தவர்தாம் ஜோதிபாசு அவர்கள்.

அதே போல்தான், ஜோதி பாசுவைத் தொடர்ந்து ஆட்சி பொறுப்பை ஏற்ற, புத்ததேவ் பட்டாச்சாரிய்யா நான் அமெரிக் காவை வெறுக்கிறேன். ஆனால் அமெரிக்காவின் முதலீட்டை வரவேற்கின்றேன் என்றார்.



அதே போல் இந்திய நாடாளும் மன்றத்தில் 11 முறை அங்கத்தினராக இருந்தவர் சோம நாத் சாட்டர்ஜி இறுதியில் இவர் நாடாளுமன்றத்தில் சபாநாயக ராகவுமிருந்தார், இவர் அண்மை யில் ஓய்வு பெற்றார். ஓய்வு பெற்ற நிலையில் தனது நாடாளுமன்ற வாழ்க்கையைப் பற்றிய நூல் ஒன்றை எழுதினார் அந்த நூல் குறித்து தி வீக் என்ற பத்திரிக்கை க்குப் பேட்டி அளித்த அவர் கம்யூனிசம் இன்றயை இந்தியா வுக்கு முற்றிலும் பொருத்தமற்றது எனக் கூறினார். Left is absolutely irrelevent in India Today.

அத்தோடு இடது சாரி களுக்கு நாடாளுமன்றத்திலும் அதற்கு வெளியேயும் எந்தப் பலமு மில்லை என்றும் கூறியுள்ளார்.

இன்றைக்கு ஒரு 'பாரத் பந்த்'ஐ அறிவிக்கக்கூட அவர்கள் பாரதீய ஜனதா கட்சியோடு சேர்ந் திட வேண்டிய அவல நிலைக்கு வந்து விட்டார்கள். இன்றைய இடது சாரிகள் தங்கள் நிலையை நன்றாக சீர்தூக்கிப் பார்க்க வேண்டிய நிலைக்கு வந்து விட்டார்கள்.

The Week July 25, 2010 Pages 38/39

### கியூபாவிலும் கம்யூனிசம் வீழ்ந்தது

அதிர்ச்சி தந்திடும் அளவில் கம்யூனிசத்தின் நீண்டகால பூமி எனக்கருதப்பட்ட கியூபாவிலும் இப்போது கம்யூனிசம் வீழ்ந்தது.

1959 களில் கியூபா - என்ற நாட்டில் கம்யூனிசத்தைக் கொண்டு வந்தார் ஃபிடல் கேஸ்ரோ என்ற மாவீரன்.

அவர் கம்யூனிசத்தைக் கொண்டு வந்தபோது அந்தப் புரட்சியைத் தடுக்கவும், தொ டர்ந்து ஃபிடல் கேஸ்ரோவை கொலை செய்யவும் முதலாளித் துவ நாடுகள் முயற்சி செய்து வந்தன.

ஒரு கணிப்பின்படி அமெரிக்காவின் மத்திய



புலனாய்வுத்துறை, இதுவரை 1000 முறை ஃபிடல் கேஸ்ரோவைக் கொலை செய்ய முயற்சி செய்துள்ளது.

அதே போல், ஈரானைப் போல் தொடர்ந்து பொருளாதாரத் தடைகளை எதிர்கொண்டு எதிர்த்து முன்னேறிவரும் நாடு கியூபா. அதன் சிற்பி ஃபிடல் கேஸ்ரோ.

கம்யூனிஸ்ட்டுகள் தங்கள் கொள்கைக்கு முடிசூடும் போதெல்லாம் கியூபாவைத்தான் கிரீடமாகக் காட்டுவார்கள். ஆனால் செப்டம்பர் 8 ஆம் நாள் கியூபாவின் சிற்பி மாவீரன் ஃபிடல் கேஸ்ரோ கம்யூனிசம் இனி எங்களை வாழ வைக்காது எனக் கூறிவிட்டார்.

Atlantic Magaizne : அட்லாண்டிக் மெகஸின் என்ற பத்திரிக்கையைச் சார்ந்த பத்திரிகையாளர் ஜெஃப்பரி கோல்டுபர்க் (National Correspondent for the Altantic Magazine) ஃபிடல் கேஸ்ரோவிடம் இப்படி ஒரு கேள்வியைக் கேட்டார்.

Is Cuba's Economic System still worth exporting to other countries?

அதாவது, கியூபாவின் பொருளாதார முறை ஏனைய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்திடும் அளவலிருக்கின்றதா?

இதற்கு ஃபிடல் கேஸ்ரோ இப்படிப் பதில் சொன்னார்:

The Cuban model does not work for us any more.

க்யூபாவின் பொருளாதார முறை (கம்யூனிசம்) எங்களுக்குள்ளேயே இனி செயல்படாது. தொடர்ந்து க்யூபாவின் ஆட்சித் தலைவராக 1959 முதல் இருந்து வந்த கேஸ்ரோ அவர்கள் உடல் நலம் குன்றிப் போனதால் நான்கு ஆண்டுகளுக்கு முன் ஒய்வு பெற்றார்.

இப்போது அவரது சகோதரர் ரவுல் கேஸ்ரோ, Raul Castro ஆட்சிப் பொறுப்பை ஏற்றுள்ளார். இவர் அண்மைக் காலந்தொட்டே க்யூபா பொருளாதார துறையில் முன்னேறிட வேண்டும் என்றால், இனி எல்லாத்துறைகளிலும் "Wide spread Reform" விரிந்து பரந்த சீர்திருத்தங்கள் தேவைப்படும் எனப் பேசி வருகின்றார்கள்.

**DC 10/9/2010**

உலகை ஆளும் கொள்கைகளைக் கூர்ந்து கவனித்து வருபவர்கள் ஃபிடல் கேஸ்ரோவின் சகோதரர் ரவுல் கேஸ்ரோ சீர்திருத்தங்கள் எனக் கூறுவதைத்தான் ஃபிடல்கேஸ்ரோ இனி கம்யூனிசம் கதைக்குவதாது எனக் கூறியுள்ளார் என்கின்றார்கள்.

இனிமேலாவது கம்யூனிஸ்ட்டுகள் இஸ்லாத்தின் வழிகாட்டுதல்களைக் கூர்ந்து கவனிப்பார்கள். அதன் கொள்கைகளைத் தங்கள் நாடுகளை ஆட்சிச் செய்யும் கொள்கைகளாக ஆக்குவார்கள் என எதிர்பார்ப்போம்.

"இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூரணமாக்கி விட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட் கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன், இன்னும் உங்களுக்காக இஸ்லாம் மார்க்கத்தையே தேர்ந்தெடுத்துள்ளேன்" 5:3 அல்குர்ஆன்

இந்த வசணம் இனி கம்யூனிஸ்டுகளை இஸ்லாத்தின் பக்கம் திருப்பட்டும்.

**எம்.ஜி.எம்.**


## வரப்பெற்றோம்

## இஸ்லாம் உலகப் பொது நெறி




**ஆசிரியர்:**

**டாக்டர் அப்துல்லாஹ் அல் கதானி**

**தமிழில் :**

**அப்துஸ் ஸமது, இன்ஜினியர்**

**விலை : இருபது ரூபாய்**

**வெளியீடு :**

**புர்கான் பப்ளிகேஷன்ஸ்**

**தொடர்புக்கு :**

**044-25224821**

# ஆப்கானிஸ்தானில் தொடரும் படுகொலைகள்

அண்மையில் ‘விக்கிலீக்’ என்ற ஆய்வுதளம் ஆப்கானிஸ் தானைப் பற்றிய ஆய்வறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அதில், ஆப்கானிஸ்தானில் அமெரிக்கா எப்படித் தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கின்றது என்ற உண்மையைத் தெளிவுப்படுத்தி இருந்தது.

தொடரும் தோல்வியால் விரக்தி அடையும் அமெரிக்கச் சிப்பாய்கள் அப்பாவி முஸ்லிம்களை ஆப்கானிஸ்தான் கிராம வாசிகளை கூட்டங் கூட்டமாக கொன்று குவித்துக் கொண்டிருக்கின்றார்கள் என்ற உண்மையையும் அஃது வெளியிட்டிருந்தது. இதனால் அமெரிக்கா உலக அரங்கில் தலைகுனிந்து நின்றது.

அமெரிக்க அதிபர் செருப்படி புகழ் ‘புஷ்’ ஐயும் இப்போதைய அதிபர் ஒபாமாவையும் போர்க் குற்றவாளிகளாக அறிவித்து அவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்திட வேண்டும் என்ற முழக்கங்கள் உலகெங்கும் வலுப்பெற்று வருகின்றன.

இந்நிலையில் இப்போது பிரிதோர் உண்மை வெளிப்படத் தொடங்கியுள்ளது. அது, அமெரிக்கா ஆப்கானிஸ்தானில் போர் புரிய சென்ற தனது சிப்பாய்களில் சிலரை கைது செய்து இரகசியமாக விசாரித்து வருகின்றது என்பதே!

இந்த அமெரிக்க சிப்பாய்கள் மதுவை அருந்தி விட்டு ஆப்கானிஸ்தானிலுள்ள கிராமப் பகுதிகளுக்குச் சென்றுள்ளனர். அங்கு கண்ணில் பட்ட கிராம வாசிகளையெல்லாம் துப்பாக்கியால் சுட்டு கொலை செய்துள்ளனர்.

இவர்கள் பற்றிய இரகசிய விசாரனையில் இவர்கள் தந்த வாக்குமூலங்கள் உலகில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

தாங்களை நிரம்ப மது அருந்த சொல்லி ஜெர்மி எம்.மர்லோக் Jermy M. Morlock என்ற தளபதிதான் கட்டாயப் படுத்தினார். பின்னர் எங்கள் ஆயுதங்களை எடுக்கச் சொல்லி ஒரு வாகனத்தில் ஏற்றி கிராமப் பகுதிகளுக்கு அழைத்துச் சென்றார். அங்கே கண்ணில் கண்டவர்களையெல்லாம் சுடச் சொன்னார். இதுவே வாக்குமூலம். இப்படி மூன்று அமெரிக்க வீரர்கள் வாக்குமூலம் வழங்கியுள்ளார்கள்.

இந்த லட்சணத்தில் “ஜெர்மி எம். மர்லோக்” கிற்கு சிறப்புப் பயிற்சி பெற்றவர் என்ற பட்டம் வேறு உண்டாம். அவரை Specialist Jermy M. Morlock (ஸ்பெசலிஸ்ட்) என்று தான் அழைப்பார்களாம்.

இவர்கள் தவறுகள் எதையும் செய்யவில்லை என்பதைபோல் அமெரிக்கா விசாரணையை முடுக்கவிருந்தது. ஆனால் விசாரணை பற்றிய தகவல்களை ஒரு குறுந்தகட்டிலிருந்து அகழ்ந்தெடுத்து வெளியிட்டிருக்கின்றார். லூவிஸ் மிக்கோர்டு என்பவர்: இதில் தளபதி ஜிப்ஸ் என்பவரும் சிக்கி இருக்கின்றார். (DC 29.9.2010)

**ஆப்கானிஸ்தான் இளைஞர்கள் தப்பி ஓட்டம்.**

ஆப்கானிஸ்தானில் அப்பாவிகளைக் கொலை செய்யும் அதே நேரத்தில் இளைஞர்களைக் கடத்திச் சென்று சித்திரவதைச் செய்து வருகின்றது அமெரிக்கா.

சித்திரவதைகளிலிருந்து தப்பிக் வேண்டும் என்றால் அமெரிக்கா சொல்லுமிடங்களில் குண்டுகளை வைத்திட வேண்டும். அல்லது அமெரிக்கா சிப்பாய்கள் ஆப்கானிஸ்தான் மக்கள் குழுமிடங்களில் குண்டுகளை வைப்பார்கள் இந்த அப்பாவி முஸ்லிம் இளைஞர்கள், மேல் பழியைச் போடுவார்கள் அவர்கள். பழியைச் சுமக்க வேண்டும்.

இப்படி இளைமையாய் இருப்பவர்கள் ஆப்கானிஸ்தானில் வாழ முடியாத நிலை, இதனால் ஆப்கானிஸ்தான் இளைஞர்கள் ஆப்கானிஸ்தானை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த உண்மையை ஆப்கானிஸ் தானில் ஆட்சிப் பீடத்தில் அமர்த்தப்பட்டிருக்கும் அமெ ரிக்க எடுபிடி ஹமீத் ஹர்சே ஒத்துக் கொண்டுள்ளார்.

இப்படி ஆப்கானிஸ் தானில் அனேக அநீதிகளை தொடர்ந்து இழைத்து வருகின்றன அமெரிக்க தலைமையிலான நேட்டோ படைகள். ஆனால் விரைவில் இந்தப் படைகள் புறமுதுகிட்டு ஓடும். இன்ஷா அல்லாஹ். அங்கு தாலிபன்களின் கை ஓங்கி வருகின்றது.

***எம்.ஜி.எம்.*** DC 29.9.2010

# ஈரானுக்கு எதிரான போர் தொடங்கப்பட்டுவிட்டது!



மத்திய கிழங்கு நாடுகளில் அணு அயூத வலிமை பெற்ற ஒரே நாடு இஸ்ரேல். அமெரிக்காவின் செல்லப்பிள்ளையாக அடாவடித்தனம் செய்துக் கொண்டிருக்கும் இஸ்ரேலை அவ்வப்போது ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா படைகள் தரைப் படை மோதலில் தட்டி வைத்துக் கொண்டிருக்கின்றன. ஆனால் இஸ்ரேலுக்கு இணையாக இஸ்லாமிய அடிப்படையில் செயல்படும் ஓர் இஸ்லாமிய குடியரசு அணு அயூதபலம் பெற்றிருக்கிறதா என்றால் இல்லை என்றே சொல்லலாம். தற்போது ஈரான் அந்த பலத்தை பெற்று விட்டதாக நம்பப் படுகிறது.

இஸ்லாமிய அடிப்படையில் செயல்படும் இஸ்லாமிய குடியரசு நாடான ஈரான் புஷ்ஷஹ்ர் அணு உலையை இரஷ்ய நாட்டின் உதவியுடன் தங்கள் நாட்டில் மின்சார தேவைக்காக நிறுவி உள்ளது. அதற்கான எரி பொருளை அணுவை செறிவூட்டும் பணிகள் ஈரானில் நதன்ஸ் என்ற அணு உலையில் நடந்து வருகிறது. இவ்வாறு ஈரான் அணு சக்தியை பெற்றிருப்பது அமெரிக்காவையும், இஸ்ரேலையும் கதி கலங்க செய்து வருகிறது. ஈரானின் இந்த பலத்தை முடக்க பல்வேறு சதிகளை சர்வதேச அரங்கில் அமெரிக்காவும் இஸ்ரேலும் நேரிடையாகவும் மறைமுகமாகவும் செய்து வருகின்றன. ஈரானுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிப்பது, இந்தியா போன்ற நாடுகளையும் ஈரானுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் வாக்களிக்க செய்வது, ஈரானுக்கு எதிராக சீனா, இரஷ்யா போன்ற நாடுகளுக்கு பயணம் செய்து அவர்களுக்கெதிரான கருத்துகளை உருவாக்குமாறு என பல நேரிடையான தாக்குதல்களை குறிப்பாக அமெரிக்கா செய்து வருகிறது.



ஆனால் இதற்கெல்லாம் சற்றும் அசைந்து கொடுக்காத ஈரான் இதனை தைரியமாக எதிர்கொண்டு வருகிறது. ஏனெனில் உலக வங்கியிடம் கடன் வாங்காத தன் நிறைவு பெற்ற நாடு ஈரான். ஆகவே அமெரிக்காவிடம் மண்டியிட வேண்டிய அவசியம் ஈரானுக்கு ஒரு போதும் கிடை யாது.

சர்வதேச நாடுகளின் சமாதான முயற்சியின் படி ஈரான் தன் அணுஉலை முயற்சியை கை விடவில்லை என்றால் தாங்கள் ஈரானின் அணுஉலை ஆதாரங் களை தாக்கக் கூடும் என்று குறிப்பாக இஸ்ரேல் தெரிவித் திருந்தது. இப்போது அதற்கான அடிப்படைகளை அமெரிக்கா வுடன் கைகோர்த்துக் கொண்டு செய்ய ஆரம்பித்துவிட்டதாக தெரிகிறது.

கடந்த ஜூலை 13 2010 அன்று W32.stuxnet என்ற வைரஸை சிமன்டெக் (Symantcec) என்ற நிறுவனம் அடையாளம் கண்டது. முதலில் இதற்கு W32.Temphid என்று தான் பெய ரிட்டது. பின்னர் stusnet என்று அனைத்து Antivirus நிறுவனங் களும் பெரியட்டன. இது Worm வகையை சேர்ந்தது. இது Windows XP, Windows Vista, Windows NT, Windows Server 2003. Windows 2000 போன்ற Operating System களை தாக்கக் கூடியது. இந்த வைரஸ் சக்தி நிலையங்கள் (Power Staions) எண்ணெய் நிலையங்கள் நீர் நிலையங்கள் (Water Plants) மற்றும் தொழிற்கூடங்களை (Industrial Units) தாக்கக் கூடியது. அவற்றை தன் கட்டுப்பாட்டிற் குள் கொண்டு வரக்கூடியது. இந்த விதமாக வடிவமைக்கப்பட்ட முதலில் Worm இது எனலாம்.

மற்ற வைரஸ்கள் போல் அல்லாமல் இவை பாதுகாப்பிற் காக இன்டர்நெட்டை (Internet) தொடர்பு கொள்ளாத கம்ப்யூட்டர்களை இலக்காக கொண்டவை. இவை USB (Universal Seria Bus) விசைகள் வழியாக மற்ற கணினிகளுக்கு பரவக்கூடியவை. இப்பொழுது



USBக்கள் தான் ஃபைல்களை ஒரு கணினியிலிருந்து மற்றொரு கணி னிக்கு மாற்ற பொதுவாக உப யோகிக்கப்படுகின்றன.

அவ்வாறு ஒரு கணினியில் இவை நுழைந்தவுடன் அது சீமென்ஸ் (Siemens) வகை தொழிற்கூட கட்டுப்பாடு மென் பொருளைத் தேடத் துவங்கும். அது கிடைத்தவுடன் இந்த வைரஸ் அதில் உள்ள PLC (Programmable Logic Control) நிரல்களை புதிய கட்டளைகளுடன் மாற்றியமைக் கும். PLCக்கள் மூலமாகத்தான் மோட்டார்களை தொடங்கவும் (ON) அணைக்கவும் (OFF) வெப் பத்தை கண்காணிக்கவும், வெப்பம் மிகும் போது குளிரூட்டிகளை தொடங்கவும் (ON) செய்யப்படு கின்றன.

இந்த வைரஸ் ஈரானின் புஷெஹ்ர் அணுஉலையை இலக் காக வைத்துதான் அனுப்பப் பட்டுள்ளது. ஏனெனில் இதுவரை இந்த வைரஸ் ஏற்படுத்திய பாதிப் பில் 60 சதவிகிதம் ஈரானிலுள்ள கணினிகளுக்கு ஏற்பட்டுள்ளது. டெஹ்ரானின் அதிகாரிகளும் கிட்டத்தட்ட 30,000 I.P. முகவரிகள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொண்டனர். ஆனாலும் இது புஷெஹ்ர் அணு உலைக்கு எந்த பாதிப்பையும் ஏற்படுத்த வில்லை என அதன் திட்ட மேலாளர் (Project Manager) மஹ்மூத் ஜஃபரி கூறியுள்ளார்.

"உலைக் கூடத்திலுள்ள அனைத்து கணினிகளும் நன்றாக இயங்குகின்றன. இதனால் உலைக் கான எரிபொருளை நிரப்பும் பணிகள் எதுவும் பாதிப்படைய வில்லை" என ஜஃபரி கூறினார்.

ஜெர்மனியை சேர்ந்த கணினி பாதுகாப்பு ஆராய்ச்சி யாளர் ரால்ஃப் லாங்னர் இந்த வைரஸ் ஈரானின் புஷெஹ்ர் அணு உலையை இலக்காக கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது என்று கூறினாலும் சீமென்ஸ் தங்க ளுடைய மென்பொருட்கள் எதுவும் புஷெஹ்ர் கூடத்தில் நிறுவப்படவில்லையாதலால் அதற்கு எந்த பாதிப்பும் ஏற்பட்டி ருக்க வாய்ப்பில்லை என கூறி யுள்ளது. இதை உறுதிபடுத்தும் வகையில் ஜஃபரியும் புஷெஹ்ர் கூடத்தில் உள்ள தனி நபர்களின் கணினிகள் மட்டுமே இதில் பாதிக்கப்பட்டுள்ளது என கூறியுள்ளது.

இது ஏதோ சாதாரண நபர்கள் பொழுதுபோக்கிற்காக எழுதிய வைரஸ் கிடையாது. இந்த வைரஸின் கட்டமைப்பையும் அது ஏற்படுத்தும் பாதிப்பையும் உற்று நோக்கும் போது கண்டிப்பாக இதன் பின்னணியில் ஒரு நாடு (Nation State) உள்ளது தெரிகிறது. ஏனெனில் இவ்வாறு சக்தி நிலையங்களை இலக்காகக் கொண்டு வைரஸ் (Worm) வருவது இதுதான் முதல்முறை. மேலும் ஈரானே இதில் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளது. எனவே இந்த வைரஸின் இலக்கு ஈரான். மேலும் இந்த வைரஸை எழுதியவர்களுக்கு ஈரானின் உள்ள சில விஷயங்கள் மிக மிக முக்கியமானவை என்று சிமென்டக் (Symentec) என்ற நிறுவனத்தின் (இது Antivirus நிறுவனம்) லியம் ஓ முர்ச்சு என்பவர் கூறியுள்ளார்.

இந்த வைரஸ் மிகவும் சிக்கலான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது என டிரென்ட் மைக்ரோ (Trend Micro) என்ற நிறுவனத்தின் ரிக் பெர்குஸோன் என்பவர் அல்ஜஸீராவிற்கு அளித்த நேர்காணலில் கூறியுள்ளார்.

“இது தகவல்களை திருடவும் செய்கிறது, வடிவங்களை ஆராய்கிறது. பின்னர் மாற்று நிகழ்ச்சி நிரல்களை கட்டுப்பாடு நிரல்களுக்கு அனுப்புகிறது.”

“இது புது கட்டளைகளை பிறப்பிக்கவும், கட்டளைகளை மாற்றவும் செய்யும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது” என ரிக் கூறுகிறார்.

ஆக இதன் வடிவமைப்பிற்கு பின்னால் சர்வதேச நாடுகள் சில உள்ளன. அவற்றிற்கு ஈரானின் வளர்ச்சி பிடிக்கவில்லை என்பது தெளிவாகிறது. இதன் பின்னால் மேற்கத்திய நாடுகள் மற்றும் இஸ்ரேலின் சதி உள்ளது என ஈரான் குற்றம் சாட்டியுள்ளது. “Stuxnet Spy Worm மேற்கத்திய நாடுகள் ஈரானுக்கு எதிராக தொடங்கியுள்ள மின்னணு போர்” என தொழிற்கூடங்களுக்கான அமைச்சக தகவல் தொழில்நுட்ப செயலர் மஹ்மூத் லியாயி கூறினார்.

ஆனாலும் இந்த வைரஸ் அரசு நிறுவனங்களின் கணினிகளில் பெரிய அளவில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்திவிடவில்லை என ஈரானின் தொலைதொடர்பு அமைச்சர் ரெஸா டெகிபோர் கூறியுள்ளார். ஈரானின் சிவில் டிஃபென்ஸ் ஆர்கனைசேஷன் பிரிகேடியர் ஜெனரல் (Civil Defence Organisation Brigadiar General) குலாம் ரெசா ஜலாலி அவர்கள் இராணுவ மற்றும் குடிமக்களின் பாதுகாப்பிற்கு ஏற்படும் அச்சத்தை கண்டுபிடித்து அதனை எதிர்ப்பது சிவில் டிஃபென்ஸ் ஆர்கனைசேஷனின் கடமை என்று 26.9.2010 அன்று நடந்த பத்திரிக்கையாளர் சந்திப்பில் தெரிவித்தார்.

எனவே அவர்கள் தங்கள் நாட்டிற்கென தனியான தேசிய ஆபரேட்டிங் சிஸ்டத்தை (Operating System) தயாரித்திருப்பதாகவும் அதன் பீட்டா (Beta) வடிவம் வெளிவந்திருப்பதையும் அதனை பாதுகாப்பு அதிகாரிகள் ஆராய்ந்து வருவதாகவும் ஜலாலி கூறினார். இந்த தேசிய ஆபரேட்டிங் சிஸ்டம் பல விதமான ஆபத்துக்களுக்கு எதிராகவும் பாதுகாப்பானது என அவர் கூறினார். எனவே தொழிற்கூடங்கள், பாதுகாப்புதுறை மற்றும் தகவல் தொடர்பு அமைச்சகங்கள் இதனை பயன்படுத்துவது அவர்களின் கடமை எனவும் ஜலாலி கூறினார்.

இதன் மூலம் அரபு தீபகற்பகத்தில் மட்டுமல்ல இஸ்லாமிய நாடுகளிலேயே மேற்கத்திய நாடுகளுக்கு சவால் விட்டு தங்களுக்கென தனியான ஆபரேட்டிங் சிஸ்டத்தை வடிவமைத்துக் கொண்டுள்ள முதல் நாடென்ற பெருமையுடன் நெஞ்சை நிமிர்த்தி கொண்டு ஈரான் வலம் வரும். உலக வங்கியில் கடன் வாங்காத நாடு, உலக அரங்கில் அமெரிக்காவையும் இஸ்ரேலையும் எதிர்க்கும் நாடு, அணு உலை அமைத்துள்ள இஸ்லாமிய குடியரசு என்ற வரிசையில் தங்களுக்கென சொந்தமான ஆபரேட்டிங் சிஸ்டத்தை வடிவமைத்துக் கொண்டுள்ள நாடு என்ற பெருமையையும் சேர்த்துக் கொண்டுள்ளது ஈரான்.

## எதிரொலி

ஆசிரியர் மு. குலாம் முஹம்மது அவர்கள் எழுதி வருகின்ற “பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை” தொடரை தொடர்ந்து படித்துவருகிறேன்.

“அஜீசா”வின் வீரம் மெய்சிலிர்க்க வைக்கிறது சம்பவம் நடந்த காலத்துக்கே நாம் செல்வது போன்ற உணர்வு ஏற்படுகிறது இத்தொடரை வாசிக்கும் போது.

அஜீசாவுக்கு நம்மால் இயன்ற உதவிகளைச் செய்திட வேண்டும் என்ற பேராவல் எழுகின்றது.

வைகறையின் வெளிச்சம் வையமெங்கும் பரவிட வாழ்த்துகிறேன்.

**மர்யம், தி.நகர். சென்னை**

பிஸ்மில்லாஹிர் ரஹ்மானிர் ரஹீம் துவக்கம் 1980

# அல்ஜாமி அத்துல் அரபிய்யா சுபுலுஸ்ஸலாம்

*மத்ரஸா தெரு, அய்யம்பேட்டை – 614201*

## அரபிக்கல்லூரி மாணவர்களுக்கு ஓர் அழைப்பு

**இன்ஷா அல்லாஹ் வருகிற 25.09.2010 ஷவ்வால் பிறை 16 சனிக்கிழமையன்று கல்வியாண்டிற்கான அட்மிஷன் நடைபெறுகிறது. இங்கு சில்சிலா நிஜாமிய்யாவின் முழுமையான பாடத்திட்டத்தினை ஒரு நாளைக்கு 7 பீரியடுகள் வீதம், ஆங்கிலம், கணிப்பொறி மற்றும் அப்ஜலுல்உலமா அரசுத் தேர்வுடன் சேர்ந்து 7 வருடப் படிப்பை ஐந்தே வருடங்களில் பூர்த்தி செய்து ஸனது (DIPLOMA) வழங்கப்படும்.**

**இது முற்றிலும் இலவச சேவையாகும்.**

**தொடர்புக்கு:**

*நாஜிர் : மல்லவி அல்ஹாஜ்*

**பி.எம். ஜியாவுத்தின் அஹ்மது பாகவி**

**தலைவர் - செயலாளர்**

**தொலைபேசி : 9443306269**

---

2010 ஆம் வருட 15 ஆண்டு சேவை

# புனித ஹஜ் பயணம்

## இன்ஷா அல்லாஹ் புறப்படும் தேதி 09.11.2010

MOULANA
Since 1996

**V.I.P. குரூப்**
**40 நாட்கள் மக்கா,**
**மதீனாவில் டபுள் பெட் ரூம்**
**ரூ. 2,17,000/-**

**மக்கா, மதீனாவில் தொடர்ந்து ஆறு வருடங்களாக நமது ஹாஜிகள் தங்கி வரும்**

**மக்காவில் :**

**அல் கரீம் ***ஹோட்டல்(ஹில்டன் டவல் அருகில்)**

**மதினாவில் :**

**அன்வார் அல் அமல் *** ஹோட்டல் (No.1 கேட் அருகில்)**

**குறைந்த இடங்களே உள்ளதால் உடன பதிவு செய்யுங்கள் – குறைந்த செலவில் மனதிற்கு நிறைவான சேவையில்**

MOULANA
Since 1996

## மவ்லானா ஹஜ் சர்வீஸ் (பதிவு பெற்றது)

**இந்திய - சவுதி அரசின் அங்கீகாரம் பெற்றது.** (Regn./PTO/MH/136/2009-2010)

65, பொன்னப்பா தெரு, புரசைவாக்கம், சென்னை - 84

Phone: 044-26414692, 26611650, 42174912 Cell: +91-9444158283, 9791126263/4/5

www.moulanahajservice.com E-mail : moulana_imdadullah@yahoo.com




1992 டிசம்பர் 6ம் தேதி அயோத்தியில் வரலாற்று முக்கியத்துவம் கொண்ட பாபர் மஸ்ஜித் இடிக்கப்பட்டது. அதன் பின்னணியில் இந்தியாவின் பல பகுதிகளில் கலவரங்கள் கட்டவிழ்க்கப் பட்டு கூட்டங் கூட்டமாக முஸ்லிம்கள் கொலை செய்யப் பட்டனர்.

2002ம் ஆண்டு குஜராத்தில் கோத்ரா ரயில் எரிப்பு சம்பவத்தை தொடர்ந்து நடந்த கலவரத்தில் நரேந்திர மோடியின் தலைமை யில் ஆர்.எஸ்.எஸ்., பி.ஜே.பி, விசுவ இந்து பரிஷத், பஜ்ரங்தள் போன்ற இந்துத்துவா அமைப்புகள் ஆயிரக்கணக்கான முஸ்லிம் களை கொன்று குவித்தன. பின்னர் கோத்ரா ரயில் எரிப்பை அது ஒரு விபத்து என இரயில்வே துறை ஆய்வறிக்கை வெளியிட்டது. குஜராத் கலவத்தை தொடர்ந்து மனித உரிமை ஆர்வலர்களும் நடுநிலையான இந்துக்களும் இவர்களை, பற்றி எழுப்பிய விமர்சனங்களையும், ஏச்சுக்களை யும், பேச்சுக்களையும் தொடர்ந்து இவர்கள் பெரிய கலவரங்கள் மூலம் முஸ்லிம்களை கொலை செய்வது என்ற நிலையிலிருந்து சற்றுபின் வாங்கி வேறு புதிய சதிகளையும் உபாயங்களையும் கையாண்டனர்.

முஸ்லிம்களைப் பற்றி தவறான கண்ணோட்டத்தை மக்கள் மத்தியில் எழுப்பி அவர்களை சமூகத்தை விட்டு ஒதுக்கி வைத்து, அவர்களுடைய மனோ தைரியத்தை குறைத்து தாங்களெல்லாம் குற்றவாளிகள் என நம்ப வைத்து பின்னர் அவர்களை களை எடுக்க வேண்டும் என்பதே அந்த புதிய சதி.

**பழைய குண்டு வெடிப்புகள்**

இச்சதித் திட்டத்தின் படி நாட்டின் பல பகுதிகளிலும் குண்டு வெடித்ததன. பல அப்பாவிகள் குறிப்பாக முஸ்லிம்கள் இதில் கொல்லப்பட்டனர்.

19 பிப்ரவரி 2007ல் சம்ஜவ்தா எக்ஸ்பிரஸ் இரயிலில் குண்டு வெடித்தது.

18 மே 2007ல் ஐதராபாத் மெக்கா மஸ்ஜிதில் குண்டு வெடித்தது.

11 அக்டோபர் 2007ல் அஜ்மீர் தர்கா ஷெரீஃபில் குண்டு வெடித்தது (நோன்பு திறக்கும் போது).

11 ஜூலை 2006ல் மும்பை இரயிலில் குண்டு வெடித்தது.

26 ஜூலை 2008ல் அஹமதாபாத்தில் குண்டுகள்

வெடித்தன. சூரத்தில் வெடிக்காத குண்டுகள் கைப்பற்றப்பட்டன.

8 செப்டம்பர் 2008ல் மாலேகானில் பள்ளிவாசலில் குண்டு வெடித்தது.

இந்த குண்டு வெடிப்புகள் அனைத்திலும் முஸ்லிம்களே குறிப்பாக கொல்லப்பட்டனர். ஆனால் ஆச்சரியப்படும் விதமாக இதில் இந்து அமைப்புகள் எதுவும் தொடர்புபடுத்தப் படவில்லை. விசாரிக்கப்பட வில்லை. பதிலாக குண்டு வெடிப் புகள் நடந்த சில மணி நேரங் களிலேயே இந்திய உளவுத் துறையினர் இதனை செய்தது சிமி என்ற முஸ்லிம் அமைப்பினர் தான், பாகிஸ்தானின் உளவுத் துறையான ஐ.எஸ்.ஐ. தான், இந்திய முஜாஹிதீன்கள் என்ற அமைப்பினர் தான், லஷ்கரே தொய்பா அமைப்பினர் தான், வங்காள தேசத்திலிருந்து செயல் படும் ஹுஜி என்கிற முஸ்லிம் அமைப்பினர் தான் என அறிக்கை விட்டு வந்தது.

பத்திரிகைகளும், ஊடகங் களும் முஸ்லிம்கள் தான் இதனை செய்தனர் என்ற செய்தியை பிரபல்யமாக்கி அதனை மக்கள் அனைவரும் ஏன் முஸ்லிம்களும் நம்பும்படி செய்து வந்தனர். இவ்வாறு செய்வதற்கு இந்திய உளவுத்துறைக்கு உறுதுணையாக கே.பி. ரகுவன்ஷி, ராகேஷ் மரியா போன்ற மஹாராஷ்டிராவின் ATS (Anti Terrorism Squad) அதிகாரிகள் கண்ணும் கருத்துமாக உதவி வந்தனர். அதாவது ஜிஹாதை கொள்கையாக கொண்ட சில முஸ்லிம் தீவிரவாதிகள் பல இடர் களை கடந்து பல ஏற்பாடுகளை செய்து சில இடங்களை தேர்ந்தெடுத்தனர். அது அந்த ஜிஹாதி தீவிரவாதிகள் அதிகமான நம்பிக்கை வைத்துள்ள அல்லாஹ் வை தொழுமிடமான பள்ளிவாசல் கள் மற்றும் முஸ்லிம்கள் கூடுமிட மான தர்காக்கள். அதுவும் நோன்பு மாதத்தில். இப்படி தான் உளவுத் துறையும் ஊடகங்களும் பிரச் சாரம் செய்தன. பச்சைப் பொய் யை சொல்லி வந்தன. இந்த பொய் களை அடிப்படையாகக் கொண்டு பல நூறு முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டு பல வருடங்கள் சிறையிலடைக்கப்பட்டனர்.

அக்டோபர் 30, 2006 அன்று மஹாராஷ்டிராவின் ATS பத்திரிக் கையாளர் கூட்டத்தில் மாலேகான் குண்டு வெடிப்பில் துப்பு துலங்கிவிட்டதாக அறிவித்தது. இந்த குண்டு வெடிப்பிற்கு மூல காரணம் சிமி, இதனை செய்தது நூருல் ஹுதா என்பவர். இவர் ஷபீர் அஹ்மது அன்சாரி என்ப வரின் பேட்டரி கடையில் வேலை பார்த்து வந்தார். ஷபீர் சவூதி வழியாக பாகிஸ்தான் சென்று பயிற்சி பெற்றவர் என்று அறிவித்தனர். (Maharastra Times Mumbai 3 October 2006, The Times of India, Pune 4th November 2006).

இதன் பின் மாலேகானில் உள்ள முஸ்லிம்கள் ஒற்றுமையாக இதனை எதிர் கொண்ட விதத்தில் மஹாராஷ்டிராவின் தீவிரவாத தடுப்பு படை அதிகாரியாக (ATS) ஹேமந்த் கர்கரே நியமிக்கப் பட்டார்.

### உண்மை குற்றவாளிகள்

ஏப்ரல் 5, 2006ல் நந்தேத்தில் லக்ஷ்மன் குண்டய்யா ராஜ்கோண்டு வார் என்பவரின் இல்லத்தில் (இவன் அரசு பொதுப்பணித் துறையில் பொறியாளராக பணி யாற்றி ஓய்வு பெற்றவன்) அவனது மகனும் இன்னும் சில விசுவ இந்து பரிஷத் மற்றும் பஜ்ரங்தள் இயக்க தொண்டர்களும் வெடி குண்டுகளை தயாரித்துக் கொண்டிருந்த போது குண்டு வெடித்தது. இதில் லக்ஷ்மன் குண்டய்யா ராஜ்கோண்டுவாரின் மகன் நரேஷ் ராஜ் கோண்டு வாரும், ஹிமான்சு பன்ஸேவும் சம்பவ இடத்திலேயே செத்தனர். தேஷ்பாண்டே, குருராஜ், துபேத் வார் மற்றும் ராகுல்பாண்டே என்ற நான்கு பேர் படுகாய மடைந்தனர். முதலில் இவர்கள் மீது பட்டாசு பதுக்கி வைத்தது வெடித்தது என வழக்குகள் பதியப்பட்டாலும் பின்னர் உண்மை வெளிவந்தது. இவர்கள் மீது பல பிரிவுகளில் வழக்குகள் பதியப்பட்டன.

ஹேமந்த் கர்கரே ஒரு நேர்மையான அதிகாரி. ஒரு பிராமணராக இருந்தும் அவர் வழக்கின் புலன் விசாரணையை நேர்மையாக மேற்கொண்ட விதத்தில் பல மர்மங்கள் வெளிப் பட்டன. நாட்டின் பல பகுதி களிலும் நடந்த அனைத்து குண்டு வெடிப்புகளின் பின்னணியிலும் இந்துத்துவா சக்திகளே இருந் ததை இவர் கண்டுபிடித்தார். அதனை உலகறிய செய்தார். அவர் ஒரு பிராமணராக இருந் தும் தம் பணியில் மிக நேர்மை யாளராக இருந்த காரணத்தால் நாட்டின் ஒற்றுமையை குலைத்து அமைதியை நாடும் இந்து முஸ்லிம் சகோதரர்களை பிரிக்க சதி செய்திட்ட இந்துத்துவா சக்திகளை அடையாளங் காட்டி னார்.

### கர்கரே கொலை செய்யப்பட்டார்

மாலேகான், அஜ்மீர் ஷரீப், ஹைதராபாத் மெக்கா மஸ்ஜித்,

அஹமதாபாத், சூரத் என நாட்டின் அனைத்து பகுதிகளிலும் நடந்த குண்டுவெடிப்புகளை ஒரே கூட்டமே செய்து வந்ததை நாடறிய செய்த அவர் அதன் பின்னணியில் இயங்கி அக்கூட்டத் தலைவன் இந்திய இராணுவ கர்னல் பிரசாத் புரோகித் என்பவனையும் பெண் சாமியார் பிரக்யா சிங் சாத்வி என்பவளையும் சாமியார் தயானந்த பாண்டே என்பவனையும் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தினார். இவர்கள் தங்கள் கூட்டத்தினரை எப்படி பயிற்றுவித்தனர். இஸ்ரேல், நேபாளம் போன்ற நாடுகளிடம் எப்படி உதவி பெற்றனர். இவர்கள் இந்திய நாட்டிற்கெதிராக எத்தகையதொரு போரை தொடங்க உள்ளனர் என்பதை உலகறிய செய்தார். தயானந்த பாண்டே மற்றும் பிரசாத் புரோகித்துடன் இணைந்து இச்சதிகளில் பங்கேற்றிருந்த பிரவீன் தொகாடியாவை கர்கரே கைது செய்ய சில அங்குலங்களே இருந்திட்ட நேரத்தில் மர்மமான முறையில் மும்பை தாக்குதலில் 26 நவம்பர் 2008 அன்று கொல்லப்பட்டார். அத்துடன் இச்சதிகாரர்கள் பற்றிய விசாரணைக்கு முட்டுக்கட்டை போடப்பட்டது.

## இந்திய உளவுத்துறைக்கு கட்டுப்பாடு

ஒவ்வொரு குண்டு வெடிப்பிற்கு பின் இந்த குண்டு வெடிப்பு வழக்குகளில் பல நூற்றுக்கணக்கான முஸ்லிம்கள் கைது செய்யப்பட்ட பின்னரும் நிற்காத குண்டு வெடிப்புகள் இந்துத்துவா சதிகாரர்கள் புரோகித், பெண் சாமியார் பிரக்யா சிங் சாத்வி, சங்கராச்சாரியார் தயானந்த பாண்டே மற்றும் இவர்களின் கூட்டாளிகள் கைது செய்யப்பட்ட பின்னர் நின்றது. இதன் பின் விழித்துக் கொண்ட நடுநிலையாளர்களும் சமூக ஆர்வலர்களும் இம்மாதிரியான வழக்குகளில் எந்தவித ஆதாரமுமின்றி முஸ்லிம்கள் மீது குற்றஞ் சுமத்தக் கூடாது என மத்திய அரசை வலியுறுத்தினர். **கர்கரேயை கொலை செய்தது யார்?** என்ற தலைப்பில் வெளியான மஹாராஷ்டிராவின் முன்னாள் காவல்துறை ஐ.ஜி. எஸ்.எம். முஷ்ரிஃப் அவர்கள் எழுதியுள்ள புத்தகத்தில் (இவர் முத்திரை தாள் மோசடி வழக்கை விசாரித்த நேர்மையான அதிகாரி, கர்கரே கொலை செய்யப்பட்ட பின் தன் பணியை துச்சமென எண்ணி இராஜினாமா செய்து விட்டு இப்புத்தகத்தை எழுதியவர்) இந்திய உளவுத்துறையின் இந்துத்துவா தொடர்புகளையும் முஸ்லிம்களுக்கெதிரான நடவடிக்கைகளையும் பற்றி பல சந்தேகங்களை எழுப்பினார். இன்னும் ஒரு படி மேலே சென்று கர்கரேயை கொலை செய்தவர்களே இந்திய உளவுத்துறையில் உள்ள பிராமண இந்துத்துவா தீவிரவாதிகள் தான் என்று தன் எழுத்தாணியைக் கொண்டு நிருபித்துள்ளார்.

இந்த பின்னணியில் மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் அவர்கள் இனி ஊடகங்களோ உளவுத்துறையோ தீவிரவாதத் தடுப்பு படையோ தெளிவான ஆதாரமின்றி எந்த அறிக்கையையும் வெளியிடக்கூடாது என்று கட்டளையிட்டார். கர்கரே கொலை செய்யப்பட்ட பின்னர் அந்த கொலையில் சம்பந்தமுடைய கே.பி. ரகுவன்ஷி என்பவர் (கர்கரேயை கொலை செய்தது யார் என்ற நூலை படிக்கவும்) ஜெர்மன் பேக்கரி வழக்கில் முஸ்லிம்கள் தான் இதனை செய்தனர் என உடனே அறிக்கை விட்டார். உள்துறை அமைச்சகம் வேகமாக செயல்பட்டது. அவரை மாற்றியது. ஆனால் அவருடைய இடத்தில் அவருக்கு சற்றும் குறையாத ராகேஷ் மரியா என்பவரை பணியமர்த்தியது. இவையெல்லாம் பழைய கதைகள்.

## மீண்டும் பழைய வேலை

தற்போது மீண்டும் ஐ.பி. தன்னுடைய வேலையை ஆரம்பித்துவிட்டது. அதற்கு ராகேஷ் மரியாவும், நன்றாகவே ஒத்து ஊதுகிறார். ஏனெனில் தற்போது கர்கரே உயிருடன் இல்லை. கடந்த செப்டம்பர் 19 ஞாயிற்றுக்கிழமையன்று டெல்லி ஜும்மா மஸ்ஜித் மூன்றாவது நுழைவாயில் அருகே துப்பாக்கி சூடு நடத்தப்பட்டு இரண்டு வெளிநாட்டவர் சுடப்பட்டனர். கார் குண்டு வெடித்தது. அதே நாளில் இதற்கு பொறுப்பேற்று கொள்வதாக இந்தியன் முஜாஹிதீன்? என்ற அமைப்பு மின்னஞ்சல் (ஈமெயில்) ஒன்றை அனுப்பியுள்ளது.(இந்திய உளவுத்துறைக்கு இந்த ஆதாரம் ஒன்றே போதுமானது. யார் வேண்டுமானாலும் குண்டு வைத்துவிட்டு அடுத்தவர் பெயரில் மின்னஞ்சல் அனுப்பினால் அதை வைத்துக் கொண்டே இவர்கள் விசாரணையை முடித்து விடுவார்கள்)

## டெல்லி ஜும்மா மஸ்ஜித் குண்டு வெடிப்பு கற்பனை செய்திகள்

இதனடிப்படையில் பல பத்திரிக்கைளும் ஊடகங்களும் பழைய பாணியில் தங்களுக்கு

தோன்றிய கதைகளையெல்லாம் உளவுத்துறையையும் காவல் துறையையும் மேற்கோள் காட்டி முஸ்லிம்களுக்கு எதிராக எழுத ஆரம்பித்துவிட்டன.

காமன்வெல்த் போட்டி களை சீர்குலைக்க நடத்தப்பட்ட சதி (என்.டி.டிவி.) 21 செப்டம்பர் 2010.

பாட்லாஹவுஸ் எதிர் சண்டையில் கொல்லப்பட்ட இரண்டு இந்திய முஜாஹிதீன் உறுப்பினர்களுக்காக இரண் டாம் ஆண்டு நினைவாக நடத்தப் பட்ட தாக்குதல் (இந்தியா டுடே 20, செப்டம்பர் 2010. தி ஹிந்து புதுடெல்லி 20 செப்டம்பர் 2010).

புனே ஜெர்மன் பேக்கரி வழக்கில் ராகேஷ் மாரியாவால் முஸ்லிம்கள் அதிகமாக கைது செய்யப்பட்டதை எதிர்த்து இந்த தாக்குதல். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, 21, செப்டம்பர் 2010)

தீவிரவாதிகளின் உண்மை யான இலக்கு காவல்துறையினர் (DNA Daily News and analysis - 21 Sep 2010 New Delhi, தி டைம்ஸ் ஆஃப் இந்தியா 22, செப்டம்பர் 2010)

குஜராத் நவராத்திரி விழாவினை ஒட்டி தாக்குதல் நடத்தப்படலாம். (டைம்ஸ் ஆஃப் இந்தியா 21 செப்டம்பர் 2010)

மும்பை பிள்ளையார் ஊர்வலத்தில் அசம்பாவிதம் நடக்கலாம் (மும்பை மிரர், செப்டம்பர் 22, 2010)

பாபரி மஸ்ஜித் தீர்ப்பு வர இருப்பதையொட்டி இந்த தாக்குதல் நடத்தப்பட்டது. (ஒன் இந்தியா நியூஸ், புதுடெல்லி, செப்டம்பர் 19 2010)

**டெல்லி ஜும்மா மஸ்ஜித் குண்டு வெடிப்புஉண்மை செய்திகள்**

ஒரு சில பத்திரிக்கைகளும் இணையதள செய்திகளும் இந்த செய்திகளுக்கு எதிராக செய்தி களை வெளியிட்டன.

சமீப காலத்தில் இந்தியன் முஜாஹிதீன்களின் நடவடிக்கை அவ்வளவாக இல்லை. இந்த தாக்குதல் அவர்கள் நடத்தியதை போன்று தெரியவில்லை. (டெல்லி காவல்துறையை மேற்கோள் காட்டி ஹிந்துஸ்தான் டைம்ஸ், 22 செப்டம்பர் 2010)

டெல்லி ஜும்மா மஸ்ஜித் குண்டு வெடிப்பில் தீவிரவாத குழுக்களுக்கு தொடர்பிருப்பதாக தெரியவில்லை. கோபமடைந்த சில உள்ளூர் குற்றவாளிகளின் செயல் போலவே இது தோன்றுகிறது. (டெல்லி காவல்துறையை மேற்கோள் காட்டி Rediffmail.com இணையதள செய்தி 19 செப்டம்பர் 2010, சி.என்.என் ஐ.பி.என். இணைய தள செய்தி 19 செப்டம்பர் 2010, ஹிந்துஸ்தான் டைம்ஸ் 24 செப்டம்பர் 2010)

al.arbi.999123@gmail.com என்ற முகவரியில் இருந்து இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் பி.பி.சிக்கு அனுப்பப் பட்ட இமெயில் மும்பையில் இருந்து அனுப்பப்பட்டாலும் அந்த இமெயில் முகவரி அமெரிக் காவில் உள்ள கலிபோர்னியாவில் உள்ள IP முகவரியில் உருவாக்கப் பட்டது. (Yahoo India News -23 September 2010, MSN News 23 September 2010, The Financial Express 27 September 2010, Indian Express.com 23 September 2010, Flashnewstoday.com 21 September 2010 and etc.)

**ஊடகங்களின் இருட்டடிப்பு**

ஆனால் அனைத்து பார் வை ஊடகங்களும் (Visual Media) இச்செய்திகளை மறைத்துவிட்டு தங்களை பொய்களை பரப்பவே முயன்றன. ஆக ஊடகங் களும் உளவுத்துறையினரும் முஸ்லிம்களுக்கு எதிரான இந்த சதி நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பித்துவிட்டனர். அதிக மான பார்வைஊடகங்களில் (Visual Media) வரும் செய்தி பாட்லா ஹவுஸ் படுகொலைக் கான பழிவாங்குதல் இது என்று தான். இதற்கு அவர்கள் தரும் ஒரே ஆதாரம் இந்தியன் முஜாஹிதீன் என்ற பெயரில் வந்துள்ள மின்னஞ்சல். டாடா டோகோமா சிம் கார்டை பூர்வா ஷிண்டே என்பவர் பெயரில் வாங்கி பயன்படுத்தி போரிவாலா என்ற இடத்திலிருந்து ஒரு மடிக்கணினியிலிருந்து அனுப்பப்பட்டுள்ளது இந்த மின்னஞ்சல்.

**பாட்லா ஹவுஸ் படுகொலை உண்மைகள்**

பாட்லா ஹவுஸ் என்கவுன்டர்கள் போலியானவை என்பது கர்கரேயை கொலை செய்தது யார்? என்ற நூலில் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கப் பட்டுள்ளது. ஏனெனில் இதில் கொல்லப்பட்டவர்கள் ஆதிஃப் மற்றும் சாஜித் என்ற இரண்டு சிறந்த மாணவர்கள். ஆதிஃப் உள்ளூர் காவல்நிலையத்தில் தன்னுடைய அடையாள அட் டை வாடகை ஒப்பந்தப் பத்திரம் ஆகியவற்றை காவல்துறையிடம் சமர்ப்பித்து அதில் காவல் துறையின் முத்திரையை பெற்று வாடகைக்கு இருந்தார். இவரை கொலை செய்தவர்களுக்

கெதிராக போராடுவேன் என் கிறார் இவருடைய பேராசிரியர் (மராத்தி வார இதழ் ஷோதான் 14-20 நவம்பர் 2008). ஆக பாட்லாஹவுசில் இவர்கள் கொலை செய்ததே அப்பாவி களை தாம். இந்த அப்பாவிகள் இந்திய முஜாஹிதீன் என்ற அமைப்பை சேர்ந்தவர்களாம். ஆகவே இவர்களுடைய கொலைக்கு பழிவாங்க டெல்லி துப்பாக்சிச் சூடு நடத்தப்பட்ட தாம். எவ்வளவு துணிச்சலான பொய் இது என்பது இப்போது உங்களுக்கு புரிந்திருக்கும். (உண் மையிலே இந்தியன் முஜாஹிதீன் என்ற அமைப்பு கிடையவே கிடையாது என்பது பல இடங் களில் நிருபிக்கப்பட்டுள்ளது. (படிக்க கர்கரேயை கொலை செய்தது யார்?)

அடுத்ததாக இவர்கள் முஸ்லிம்களுக்கு எதிராக ஆதாரம் காட்டுவது பி.பி.சி என்ற செய்தி தொலைகாட்சி நிலையத்திற்கு வந்த மின்னஞ்சலை. அஹ்மதா பாத், ஜெய்ப்பூர், தில்லி, பெங்க ளூர் குண்டுவெடிப்புகளுக்கு பிறகு இந்தியமுஜாஹிதீன் என்ற அமைப்பு பொறுப்பேற்று கொண்டதாக இதே போன்ற இமெயில்கள் வந்தன. பின்னர் அந்த இமெயில்களை ஆராய்ந்த போது அது அமெரிக்க சி.ஐ.ஏ. ஏஜெண்டான டேவிட் கோல் மேன் கென் ஹேவுட் ஹெட்லி என்பவனின் கணினியிலிருந்து அனுப்பப்பட்டது தெரியவந்தது. ஆனால் அவன் மத்திய உளவுத் துறையால் பத்திரமாக அமெரிக் காவிற்கு அனுப்பப்பட்டான்.. ஹேவுட்டின் கணினியை Hack செய்து அபுஸ் சுப்ஹான் (எ) தவ்பீக் பிலால் (எ) தவ்கீர் தான் இந்த மின்னஞ்சலை அனுப்பியது என்று முதலில் ஐ.பி. கூறியது. 13 செப்டம்பர் 2008 இந்து நாளிதழ் தவ்கிரீன் செயல்பாடுகள் குறித்து விவரித்தது. இந்த செய்திகள் உளவுத்துறையின் மூலம் கிடைத் ததாக கூறியது. டெல்லி பத்திரிகை கள் தவ்கீரை இந்தியாவின் ஒசாமா பின் லாதன் என கூறின. ஆனால் 19 பிப்ரவரி 2009ல் மும்பை காவல் துறையின் குற்றப்பத்திரிகையில் தவ்கீரின் பெயர் கூட வரவில்லை. (இந்தியன் எக்ஸ்பிரஸ் புனே 19-பிப்ரவரி 2009)

தற்போது ஹேவுட் ஹெட்லி தான் தீவிரவாதி என்பது உறுதி யாகியுள்ளது. வேறு வழியின்றி ஊடகங்களும் இதனை வெட்க மின்றி காட்டி வருகின்றன. அவ னை அனுப்பித் தருமாறு அவனை மாப்பிள்ளை போல உபசரித்து அனுப்பிய இந்திய அரசு அமெ ரிக்க அரசை தாங்கிக் கொண்டி ருக்கிறது. அவனை அனுப்ப இய லாது என மறுத்து வருகின்றனர் தீவிரவாதத்திற்கு எதிரான போர் செய்யும் அமெரிக்கா?. இது தான் அஹமதாபாத், ஜெய்ப்பூர், டெல்லி, பெங்களூர் குண்டு வெடிப்புகளில் தாங்கள் பொறுப் பேற்று கொள்வதாக சொல்லி இந்தியன் முஜாஹிதீன்கள் என்ற பெயரில் அனுப்பப்பட்ட மின் னஞ்சல்களின் நிலை. இதனை இப் போது வந்துள்ள மின்னஞ்சலோடு ஒப்பிட்டு பார்த்துக் கொள்ளுங் கள்.

**நாம் செய்ய வேண்டியது**

ஆகவே முஸ்லிம்களே, பொதுமக்களே, பொதுவான உண் மை அறிய விரும்பும், இந்துக்களே நாங்கள் உங்களுக்கு சொல்வதெல் லாம் இந்த புரளிகளையெல்லாம் நம்பாதீர்கள். முஸ்லிம்கள் ஒரு போதும் இத்தகைய காரியத்தில் ஈடுபடக்கூடியவர்கள் அல்ல. இவ்வழக்கிலும் உண்மை ஒரு நாள் வெளிவரும். அன்று வேறு எந்த ஹெட்லி அல்லது வேறு எந்த புரோகித் மாட்டுவான் என்பதை தற்போது சொல்ல முடியவில்லை. ஆனால் அதற்கு முன் பணத்திற்கு சோரம் போகும் பத்திரிக்கைகளும் ஊடகங்களும் முஸ்லிம்களுக்கெதிரான இந்த பொய்யான செய்திகளை அதிக விளம்பரப்படுத்தி வருகின்றன. உளவுத்துறை மற்றும் இந்துத் துவா சக்திகளால் முஸ்லிம்கள் மீது மீண்டும் ஒரு தாக்குதல் தொடங்கப்பட்டு விட்டதாகவே தெரிகிறது. இதில் எத்தனை பொதுமக்களை கொன்று இவர் களின் தாகத்தை தணித்து கொள் ளப் போகிறார்களோ தெரிய வில்லை. இவர்களை அடை யாளங்காட்டக் கூடிய கர்கரே போன்ற நேர்மையான அதிகாரி களும் தற்போது நம்மிடையே இல்லை. ஆகவே பொது மக்களாகிய நமக்குள்ள கடமை பொறுமையுடனும் பொறுப்பு டனும் தெளிவான அறிவுடனும் மனோ தைரியத்துடனும் இந்த பிரிவினை சக்திகளை அடை யாளங்கண்டு எதிர்த்து நின்று அதனை விரட்டியடிப்பதே. இந்து முஸ்லிம் சகோதரர்களின் ஒற்றுமைக்கு ஊறுவிளைவிக்கும் எந்த ஆதாரமற்ற செய்திகளையும் நம்ப மாட்டோம். அனுமதிக்க மாட்டோம். அதனை ஒற்றுமை யுடன் எதிர் கொண்டு புறங்காண செய்வோம்.

**வைகறை வெளிச்சத்தில்**
**விளம்பரம்செய்யுங்கள்**




# கர்கரேயை கொலை செய்தது யார் ?

## நிலை (GEARS CHANGE) மாற்றம்

**வகுப்புவாதத்திலிருந்து முஸ்லிம் தீவிரவாதத்தை நோக்கி...**

2002 குஜராத் கலவரத்திற்குப் பின் நிலைமை தலைகீழாகி விட்டது. ஆர்.எஸ்.எஸ்.ம் பி.ஜே.பி.யும் உலகத்தின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானது. கடந்த 50 வருடங்களாக மந்திரக்கோலாக அவர்கள் கையிலிருந்த மதக் கலவரமென்னும் ஆயுதம் தற்போது பூமராங் போல அவர்களை நோக்கி திரும்பியிருப்பதை அவர்கள் உணர்ந்தார்கள். இந்த முறை அவர்கள் எதிர்பார்த்த அரசியல் இலாபத்தையும் அது தரவில்லை. பதிலாகப் பாபர் மஸ்ஜித் இடிப்பைப் போலல்லாமல் அது இந்த முறை வேறு விதமாக திரும்பி விட்டது. எனவே அவர்கள் தற்போது வேறு விதமாகச் சிந்தித்தாக வேண்டும். அதன் புது கண்டுபிடிப்பே இஸ்லாமியத் தீவிரவாதம். மதக்கலவரத்திற்கு பதிலாக இதனை IB என்ற மத்திய உளவுத்துறையின் துணை கொண்டும் ஊடகங்களின் துணை கொண்டும் செய்யத் தீர்மானித்து வேலைகளை ஆரம்பித்தார்கள்.

IB இதில் ஒரு முக்கியமான பணியாற்றியது. தீவிரவாதத்தை ஓர் ஆயுதமாக பயன்படுத்த வேண்டுமென இந்த பிராமணீய சக்திகள் முடிவு செய்தவுடன் IB "பொதுவான உளவுத் தகவல்கள்" என்ற பெயரில் சில புரளிகளைப் பரப்ப ஆரம்பித்தது. அந்த செய்திகள் முஸ்லிம்களின் தீவிரவாத செயல்கள் நாட்டில் பெருகி வருவதாகவும் சில பெயர் தெரிந்த மற்றும் பெயர் தெரியாத முஸ்லிம் தீவிரவாத குழுக்களின் பெயரைச் சொல்லி அவை மிகமிக முக்கியமான ஆட்களை கொலை செய்யவும், மிக முக்கிய கட்டிடங்களைத் தகர்க்கவும், வணக்க வழிபாட்டுத் தலங்களை தகர்க்கவும் திட்டமிட்டிருப்பதாகத் திட்டமிட்டு வதந்திகளைப் பரப்பியது. உண்மையில் "பொதுவான உளவுத் தகவல்கள்"என்று எதுவுமே கிடையாது. உளவு என்றாலே இரகசியமாக பெறப்பட்ட தீர்க்கமான, குறிப்பிட்ட தகவல்கள் என்று தான் அர்த்தம். அது எக்காரணம் கொண்டும் கசியக் கூடாது. யாருக்கும் தெரியக் கூடாது. இரகசியமாக வைக்கப்பட வேண்டும். அதன் மீது செயல்பட்டு தகுந்த நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

ஆனால் IB என்ற மத்திய உளவுத்துறை சங்பரிவாரத்தின் உத்தரவின் படியும் மற்ற காவல் நிலையங்கள் IB என்ற மத்திய உளவுத்துறையில் மேற்கோளின் படியும் ஊடகங்களுக்கு உதவி செய்து குறைந்த பட்சம் வாரத்திற்கொருமுறை என்ற அடிப்படையில் இத்தகைய விஷமத்தனமான புரளிகளை தொடர்ச்சியாகப் பரப்பி வருகின்றன.

பின்வரும் பத்திரிக்கை உதாரணங்களைப் படித்தால் இது தெள்ளத் தெளிவாகும்.

1. **தீவிரவாதிகளால் தவறாக கையாளப்படும் மதரஸாக்கள் : IB (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே, 13 ஜூன் 2006)**
2. **தீவிரவாதிகளின் இலக்காக முக்கிய கோயில்கள் (மராத்திய நாளிதழ் மஹாசட்டா, கோலாப்பூர் 21, ஜூன் 06)**
3. **புனே விநாயகர் விழாவில் குண்டு வெடிப்பு நடத்த திட்டம் (சாகல், மராத்திய நாளிதழ், புனே 26 ஜூலை 06)**

4. மும்பையையும், டெல்லியையும் சுதந்திர தினத்தன்று அல் கொய்தா தாக்கக்கூடும் - அமெரிக்கா எச்சரிக்கை (டைம்ஸ் ஆஃப் இந்தியா, IB என்ற மத்திய உளவுத்துறையால் ஊடகத்திற்கு தரப்பட்ட இச்செய்தி மறுநாளே அமெரிக்காவால் மறுக்கப் பட்டது).

5. டெல்லி, UKயில் பதுங்கி யுள்ள ஜெய்ஷ் தலைவர் களுடன் தொடர்புடைய கார்குண்டு தீவிரவாதிகள் (சண்டே டைம்ஸ் ஆஃப் இந்தியா 13 ஆகஸ்ட் 2006) (நியூயார்க் டைம்ஸ் இந்த செய்தியைப் பற்றி விசாரித்து இது ஒரு வெத்து வேட்டு என அறிவித்தது - சாகல் தினசரி 31 ஆகஸ்ட் 2006)

6. ஏழு மனித வெடிகுண்டு கள் சுற்றிக் கொண்டிருக் கின்றன - ஏ.டி.எஸ். தலைவர் (புதாரி மராத்தி நாளிதழ் 4.09.2006)

7. காவல் துறை உடை யணிந்து தீவிரவாதிகள் பிள்ளையார் ஊர்வலத் தினுள் நுழைந்து தாக்கு தல் நடந்த திட்டம் (புதாரி நாளிதழ், கோலாப்பூர் 5 செப்டம்பர் 06 IB என்ற மத்திய உளவுத்துறை தகவல்களை மேற்கோள் காட்டி)

8. முக்கிய அணு நிலையங் களை தீவிரவாதிகள் தாக்க வாய்ப்பு : பிரதம மந்திரி IB என்ற மத்திய உளவுத்துறை தகவல்களை மேற்கோள் காட்டி (எல்லா பத்திரிக்கை களிலும் 6 செப் 06)

9. “எல்லாம் முடிந்து விட வில்லை” ATS தலை வரின் எச்சரிக்கை, முக்கிய கட்டி டங்களை தீவிரவாதிகளைக் கொண்டு தாக்க லஷ்கரே தொய்பா திட்டம் (டைம்ஸ் ஆஃப் இந்தியா புனே 4 அக்டோபர்)

10. அணு (நியூக்ளியர்) நிலை யங்கள் தாக்கப்படும் அபா யம் - உளவுத் தகவல்களை மேற்கொள் காட்டி சிவ ராஜ் டைம்ஸ் ஆஃப் இந்தி யா பாட்டீல் புனே 23 நவம்பர் 06)

11. தீவிரவாதத்திற்கு எதிராக போராடுபவர்களுக் கெதி ரான சட்டப்பூர்வமான நடவடிக்கைகளை தடை செய்ய வலியுறுத்தி IBயின் தலைவர் ESL நரசிம்மன் மாநில அரசுகளின் DGP, IGP மாநாட்டில் பிரதம மந்திரி முன்னிலையில் வலியுறுத் தல் (அப்பாவி முஸ்லிம் களை கொல்லுதல் என்ற பத்தியை படிக்க) (சாகால் தினசரி மற்றும் எல்லா முக்கிய பத்திரிக்கைகளிலும் 24 நவம்பர் 06)

12. ஸ்ரீ அர்விந்த் ஈமான்தார், மஹாராஷ்டிராவின் முன் னாள் DGP, ஆர்.எஸ். எஸ்.ன் அடிவருடி ஐ.பியின் தலை வர் மேலே சொன்ன கோரிக்கையை ஆதரித்து மேலும் தீவிரவாதத்தை எதிர்த்து போராட பொடா போன்ற சட்டத்தின் அவ சியத்தை யும் வலியுறுத் தினார். (சாகால் தினசரி புனே 2 டிசம்பர் 2006)

13. அல்கொய்தாவின் குறியில் கோவா சுற்றுலா பயணி கள் - (சாகால் தினசரி புனே 15 டிசம்பர் 2006. IBயை மேற்கோள் காட்டி)

14. பாகிஸ்தான் ISI யால் பயிற்றுவிக்கப்பட்ட அல் கொய்தா தீவிரவாதி களால் சோனியாவின் உயிருக்கு ஆபத்து - (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 22 டிசம்பர் 2006 - உளவுத் தகவல்களை மேற் கொள்காட்டி உள்துறை அமைச்சகம் தந்த தகவல்)

15. டிசம்பர் 25, 26 கிறிஸ் துமஸ் தினவிழாவில் மும்பையில் பிரதம மந்திரி யின் வருகையின் போது தீவிரவாதிகள் தாக்க திட்டம் - உச்சகட்ட எச்சரிக்கை. மும்பை ஆணையாளர் அனைத்து காவல் நிலையங்களுக்கும் எச்சரிக்கை. துபாயிலுள்ள ஓர் ஐந்து நட்சத்திர ஹோட்டலின் வெயிட்டர் ஒரு சந்தேகப்படும் தீவிர வாதிகளுக்கு இடையே நடந்த பேச்சை ஒட்டுக் கேட்டதாக வந்த தொலை பேசித் தகவலைத் தொ டர்ந்து இந்த முன்னெச் சரிக்கை. (மிட்டே மும்பை 20, 2006).

16. ரிமோட் கன்ட்ரோல் களைக் கொண்டு இயங் கும் விளையாட்டுப் பொம் மை விமானங்களைக் கொண்டு மோதி வெடிக் கச் செய்து தலைவர் களைத் தாக்க திட்டம். UP, பஞ்சாப், உத்ரகாந்த் தேர்தலின் போது

இவ்வாறு செய்ய திட்டம். திருமதி சோனியா காந்தி மற்றும் திரு. ராகுல் காந்தி இலக்குகள் - தீவிரவாதி களின் பேச்சை இடை மறித்த போது கிடைத்த தகவல்கள் - உளவுத்துறை (மராத்திய நாளிதழ் புதாரியில் 22 ஜனவரி 2007)

17. இந்திய அணியைத் தீவிர வாதிகள் தாக்கும் அபாயம் - சச்சின் டெண்டுல்கர், சவுரவ் கங்கூலி, டிராவிட் முக்கிய இலக்குகள் தீவிர வாதிகளின் உரையாடலை இடைமறித்து கேட்ட போது உளவுத் துறைக்கு கிடைத்த தகவல். உள்துறை செயலர் ஸ்ரீ துக்கால் ஒரிஸ்ஸாவின் தலைமைச் செயலருக்கு அனுப்பிய கடிதத்தில் எச்சரிக்கை. (புதாரி நாளிதழ் 23 ஜனவரி 07) இதே செய்தியை வெளியிட்ட சாகால் நாளிதழ் இதனை உளவுத் துறை தகவல்களை மேற் கோள் காட்டி டைம்ஸ் நவ் தொலைக்காட்சி வெளி யிட்டதாகக் கூறியது (27 ஜனவரி 2007).

18. சம்ஜவ்தாவில் கண்டெடுக் கப்பட்ட டைமர்கள் மாலேகானைப் போன்ற வையே. (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே - 24 பெப்ரவரி 2007 - பாட்டி யாலாவில் தங்கியிருந்த குஜராத் காவல் அணி யினர், "இந்த வழக்கை நாங்கள் விசாரிக்கவில்லை ஆனாலும் இதை செய்தது லஷ்கரே தொய்பாவும் சிமியும் தாம்", என்று குற்றம் சாட்டியதை மேற்கோள் காட்டி).

19. அக்டோபரில் தீவிரவாதி கள் இரசாயன ஆயுதங் களைக் கொண்டு தாக்க திட்டம் (புதாரி கோலாப் பூர் காவல் துறை தகவல் களை மேற்கோள் காட்டி).

20. பங்கு சந்தையில் தீவிரவாத இயக்கங்களின் விளையாட்டு - தேசிய பாதுகாப்பு ஆலோசகர் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 15 செப் 2007)

21. திரவ குண்டுகள் தற்போ தைய புதிய ஆயுதமாக (டைம்ஸ் ஆஃப் இந்தி யா,புனே 27 மே 2007 பாது காப்பு ஏஜென்சிகளை மேற் கோள் காட்டி)

22. தற்போது ஹர்கத்தின் கவனம் குஜராத்தில்? (சா கால் நாளிதழ் மே 2007 உளவுத்துறை தகவலை மேற் கோள் காட்டி)

23. இந்தியாவிற்கெதிராக போர் தொடங்க அல்கொய் தா சபதம் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 9 ஜீன் 2007 மற்றும் சாகால் நாளிதழ்) அல்கொய்தா ஹிந்த் என்ற பெயர் தெரியாத தீவிரவாத இயக்கத்திலிருந்து CNS என்ற உள்ளூர் செய்தி நிறுவனத்திற்கு வந்த ஒரு கடிதம் மற்றும் குறுந்தகடின் அடிப்படையில் IB என்ற மத்திய உளவுத்துறையால் பரப்பப்பட்ட செய்தி).

24. மாநிலங்களை எச்சரிக்கை யாயிருக்கும்படி மத்திய அரசு அறிவுறுத்தல் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 4 செப். 2007) அதிகாரிகள் பின்னர் இது எதையும் பற்றி குறிப்பிட்ட செய்தியல்ல, எந்த அதி காரபூர்வமான செய்தியின் அடிப்படையில் சொல்லப் படவில்லை என தெளிவுப் படுத்தினர். ஜன்மாஷ்டமி மற்றும் விநாயகர் விழா வை முன்னிட்டு செய்யப் பட்ட எச்சரிக்கை என்றும் கூறினர்.

25. சிருடி திரும்ப கேஷ்வர் தீவிரவாதிகளின் கொலைப்பட்டியலில் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே, 17 செப். 2007 IBயின் தகவலின் அடிப்படையில், நாசிக்கின் சிறப்பு IGPயின் செய்தியை மேற்கோள் காட்டி)

26. மனித வெடிகுண்டைப் பற்றிய தகவலின் பின் மும்பையும் ஹைதராபாத் தும் உச்சக்கட்ட எச்சரிக் கையில் (சாகால் நாளிதழ் புனே 6 அக்கோடபர் 07 உளவுத்துறை தகவலை மேற்கோள் காட்டி)

27. ராகுல்காந்தியின் மீது கையெறி குண்டுகள் எறிந்து தாக்க ஜெய்ஷ் சதி காவல்துறை (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 23 நவம்பர் 2007, IB என்ற மத்திய உளவுத்துறை மற்றும் U.P காவல்துறை யின் தகவலை மேற்கோள் காட்டி)

28. மஹந்த் நிருத்ய கோபால் தாஸிற்கு அல்கொய்தா

வின் மிரட்டல் (நவ்பாரத் மும்பை 23 நவம்பர் 07 இஸ்லாத்தை உங்கள் கூட்டத்துடன் ஏற்றுக் கொள், அல்லது மரணத் தை எதிர்கொள் என்று மஹந்திற்கு வந்த அல் கொய்தாவின் கடிதம். ஆனால் அடுத்த நாளே அந்த கடிதத்தை மஹந்தின் தொண்டர் சந்தோஷ் ஜயிஸ்வால் என்பவர் மஹந்தின் பாதுகாப்பை அதிகப்படுத்தும் நோக்கில் எழுதியது தெரியவந்தது).

29. நிவாரண வேலைகள் என்ற பெயரில் பங்களா தேஷிலிருந்து அல்கொய் தாவிற்கு ஆட்கள் தேர்வு (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 27 நவம்பர் 2007, உளவுத்துறை அதிகாரி களை மேற்கோள் காட்டி)

30. ISIயின் பின்னணியில் இயங்கும் தீவிரவாதி களுக்கு உத்திர பிரதேசம் ஒரு நல்ல விளைநிலம்: அரசாங்கம் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 26 நவம்பர் 07 ராஜ்யசபாவில் அளிக்கப்பட்ட பதிலை யும், பாதுகாப்பு, மற்றும் உளவுத்துறைத் தகவல் களையும் மேற்கோள் காட்டி)

31. தீவிரவாத அச்சுறுத்தலைத் தொடர்ந்து டெல்லிக்கு எச்சரிக்கை (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே டிசம்பர் 07, மற்றும் சாகால் புனே 4 டிசம்பர் 07 உளவுத்துறையிட மிருந்து தகவல் பெற்ற தாகக் கூறிய ஒரு மூத்த காவல்துறை அதிகாரியை மேற்கோள் காட்டி)

32. மாயாவதி ஏன் தீவிர வாதிகளின் கொலைப் பட்டியலில்? (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 25 டிசம்பர் 07) இந்த செய்தியை கவனமாக படித்தாலே இது IB என்ற மத்திய உளவுத்துறை பரப்பிய செய்தி என்பது விளங்கும். மாயாவதி ஏன் தீவிரவாதிகளின் கொலைப் பட்டியலில் என்றால் அவர் ஒரு முறை முஸ்லிம்களை அடிப்படைவாதிகள் என்று கூறினராம். IB என்ற மத்திய உளவுத்துறை இவ்வாறு மாயாவதியை முஸ்லிம் களுக்கு எதிராக திருப்ப முயற்சித்தது.

33. கைது செய்யப்பட்ட தீவிரவாதிகள் இந்திய தலைவாசலை (Gateway of India) தகர்க்க சதி (லோக் மாத் மராத்திய நாளிதழ் புனே 1 ஜனவரி 2008 உ.பி யில் முந்தைய மாதம் நடந்த குண்டு வெடிப்பில் தொடர் புடைய 5 தீவிரவாதிகளை குறுக்கு விசாரணை செய்த போது கிடைத்த தகவல்).

34. அத்வானியையும், மோடி யையும் கொல்ல தாவூத் ஒப்புக் கொண்டார். (சா கால் நாளிதழ் புனே மற்றும் சாம்னா நாளிதழ் புனே 30, ஜனவரி 2008 தொலைக் காட்சியில் ராவிடம் இருந்து கிடைத்ததாக சொல்லி ஒளிபரப்பப்பட்ட தகவல்களை மேற்கோள் காட்டி)

35. குற்றவாளி அமெரிக்கா வைத்தான் தாக்க விரும்பி னார். ஆனால் தீவிரவாத தலைவர்கள் சொன்ன தோ, "நமக்கு இந்தியாவில் செய்ய வேண்டியது அதிகம் உள்ளது". (சன்டே டைம்ஸ் ஆப் இந்தியா - புனே 3 பிப்ரவரி 2008 தேவ நகரி கர்நாடகா காவல் துறை அதிகாரிகள் சில வழக்குகளில் கைது செய் யப்பட்ட தீவிரவாதிகளை விசாரித்த போது கிடைத் ததாக சொல்லப்பட்ட தகவல்களை மேற்கோள் காட்டி)

36. கோவாவின் முக்கியச் சுற்றுலாத் தலங்களைக் குண்டு வைத்து தகர்க்க கர்நாடக தீவிரவாதிகள் திட்டம் (டைம்ஸ் ஆப் இந்தியா புனே 8, கர்நாடக போலீசார் சில தீவிரவாதி களை குறுக்கு விசாரணை செய்த போது கிடைத்த தாக சொல்லப்பட்ட தகவல்களை மேற்கோள் காட்டி)

37. a) .S.T.F வலையில் 6 லஷ்கர் தீவிரவாதிகள். தீவிரவாதி களின் கண்காணிப்பில் மும்பை பங்கு சந்தை க்ஷளுநு (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 11, 2008

b) மும்பை காப்பாற்றப் பட்டது. (புதாரி நாளிதழ் புனே 11, 2008 இந்த 2 பத்திரிகைகளும் கர்நாடக DGP விக்கிரம்சிங்கின் கூற்றின்படி தீவிரவாதிகள் மும்பை பங்கு சந்தையை யும் சர்ச் கேட் நிலையத் தையும் மும்பையின் புகழ்

பெற்ற கோயிலையும் தாக்க திட்டமிட்டிருப்ப தாகக் கூறியதை மேற் கோள் காட்டியது.

38. மும்பையை தாக்கும் இரகசியத் திட்டத்தில் ஃபஹீம் அன்சாரிக்கு முக்கிய பாத்திரம் (சாகால் நாளிதழ் புனே 13, பிப்ரவரி 2008 உ.பி. காவல்துறை யை மேற்கோள் காட்டி)

39. மும்பையில் 13 இடங்களில் குண்டு வெடிப்பு நடத்த இரகசிய திட்டம் (புதாரி நாளிதழ் புனே கைது செய்யப்பட்டத் தீவிரவாதி களை விசாரித்த போது கிடைத்த தகவல் என மும்பை போலீசார் கூறியதை மேற்கோள் காட்டி)

40. RDX பயமுறுத்தலுக்குப் பின் சோனியாகாந்தி ஜம்மு காஷ்மீர் கூட்டத் தை ரத்து செய்தார். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, 23 பிப்ரவரி 2008 புதாரி நாளிதழ் அதே தேதி) அடுத்த நாளே இந்த தகவல் தவறானது என்று தெரிய வந்தது டைம்ஸ் ஆஃப் இந்தியா, 26 பிப்ரவரி 2008-ல் இவ்வாறு பிரசுரித்தது (RPF-ன் இந்த தவறான RDX புரளியால் சோனியா காந்தியின் J & K கூட்டம் ரத்தாகி விட் டது. ஆனால் இதன் பாதிப்பு ஏற்கெனவே உண்டாகி விட்டது. சோனியா காந்தியின் இந்த வெகு முக்கியமான பொது கூட்டத்தை தடுத்து நிறுத்தியதற்கு யார் பொறுப்பாளி? - இத்தகைய தவறான தகவலை தந்த CRPF-M அல்லது உண்மை களை ஆராயாமல் இந்த கூட்டத்திற்கு தடையில்லா சான்றிதழ்களை தர மறுத்த IB என்ற மத்திய உளவுத்துறையா?

41. தாவூத்தின் நிறுவனம் தற்போது லஷ்கரின் ஒரு பகுதி (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 28 மார்ச் 2008 மற்றும் புதாரி நாளிதழ் மார்ச் 29, 2008 உளவுத்துறை தகவல்களை மேற்கோள் காட்டி)

42. மும்பையில் தற்போது 32 பெண் சிமி தீவிரவாதிகள் (புதாரி நாளிதழ் புனே 21, மே 2008 மும்பை காவல்துறை தகவல்களை மேற்கோள் காட்டி)

43. ஜகன்நாத் கோயில் தீவிர வாதிகளின் பட்டியலில்.. சாகால் நாளிதழ் புனே 18, மே 2008, உளவுத்துறைத் தகவல்களை மேற்கோள் காட்டி)

44. 2025 - வரை ISIன் அச்சு றுத்தல் இருக்கும் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 9 ஜூன் 2008 தனிச்சுற்றுக்கு விடப்பட்ட இரகசிய அறிக் கையை மேற்கோள் காட்டி. பாதுகாப்பு துறையின் 5 அதிகாரிகள் கொண்ட கமிட்டியால் இந்த அறிக்கை தயாரிக்கப்பட் டது.

45. கூடுதல் தீவிரவாத தாக்குதல் கள் குறித்து காவல் துறை யின் பயம். இந்திய முஜா ஹிதீன் இயக்கத்தை சேர்ந்த வர்கள் கைது. ஆனாலும் பிடி படாதவர்களின் வேலைகள் தொடர் கின்றன. ( சன்டே டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 28, செப்டம்பர் 2008 பாது காப்புதுறை தகவல்களை மேற்கோள் காட்டி)

46. அல்கொய்தாவும், சிமியும் கோவாவின் பாகா கடற் கரையை தாக்க கோவா வின் மொத்த தீவிரவாத வலைகளின் பக்கம் கவனம் சன்டே டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 12 அக் டோபர் 2008 உளவுத் துறை மற்றும் காவல்துறை தகவல்களை மேற்கோள் காட்டி

47. I. சச்சின் டெண்டுல்கரை கடத்தத் திட்டம் (சாகால் நாளிதழ் - கோலாப்பூர் 3, நவம்பர் 2008 நாக்பூர் காவல் துறை தகவல்களை மேற்கோள் காட்டி)

II. சச்சின் டெண்டுல்கரை கடத்த ஜெய்ஷ் திட்டம். ஆனால், உளவுதுறை இந்த தகவல்களை மறுத்தது. (புதாரி நாளிதழ் கோலாப் பூர் 4, நவம்பர் 2008 நாக்பூர் காவல்துறை ஆணையரை மேற்கோள் காட்டி.)

III. ஜெய்ஷ் இடமிருந்து சச்சினுக்கு ஆபத்து தருண் பாரத் நாளிதழ் கோலாப் பூர் 4 நவம்பர் 2008. நாக்பூர் காவல்துறை ஆணையரை மேற்கோள் காட்டி. பின்னர் IB என்ற மத்திய உளவுத்துறை இந்த

தகவல்களை மறுத்தது. அப்போது அவர் உள் துறை அமைச்சகத்திட மிருந்து தனக்குத் தொலை பேசி மூலம் இந்த தகவல் வந்ததாகக் கூறினார்.

48. பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குப் பரவி வரும் தீவிரவாதத்தைப் பற்றி இந்தியா மறு மதிப்புச் செய்ய வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப் பட்டுள்ளது (டைம்ஸ் ஆஃப் இந்தியா, டெல்லி 31, மார்ச் 2009)

49. கடல் வழியாகத் தீவிர வாதம் உஷார் நிலையில் கேரளா டைம்ஸ் ஆஃப் இந்தியா, டெல்லி 31 மார்ச் 2009)

50. வருண் காந்தியைக் கொல்லச் சோட்டா ஷகில் திட்டம் (டைம்ஸ் ஆஃப் இந்தியா, டெல்லி, 1, ஏப்ரல் 2009. லக்னோ வைச் சேர்ந்த பெயர் தெரியாத உளவுத் துறையின் தகவல்களை மேற்கோள் காட்டி.)

51. இலக்கு வருண் காந்தி அல்ல சேனாவின் தலை வர் (இந்துஸ்தான் டைம்ஸ் டெல்லி 1, ஏப்ரல் 2009.)

52. பயிற்றுவிக்கப்பட்ட விமானிகளைக் கொண்டு தீவிரவாதத் தாக்குதல் நடத்த திட்டம். மூத்த உளவுத்துறை அதிகாரி கூறும் போது "எந்த வாய்ப்பையும் எடுத்துக் கொள்ள முடியாது என்று கூறினார். (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 2, ஏப்ரல் 2009.)

53. 11 முதல்வர்களுக்கு பாதுகாப்பு அதிகரிப்பு - மத்திய அரசு (உள்துறை அமைச்சகத்திடமிருந்து) முக்கியமான தலைவர்களுக்கு தேர்தலின் போது தீவிரவாதிகளால் ஏற்படக்கூடிய அபாயத்தை முன்னிட்டு எச்சரிக்கை என்ற தகவல் களை மேற்கோள் காட்டி. (டைம்ஸ் ஆஃப் இந்தியா, புனே 8 ஏப்ரல் 2009).

தொடரும்


## வைகறை விஷன் - வீடியோ -சி.டி., டி.வி.டி

1. நாளைய முஸ்லிம் பெண்கள் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
2. இஸ்லாம் தாக்கப்படுவது ஏன்? (மு.குலாம் முஹம்மது)
3. இஸ்லாமிய நாகரிகம் (மு. குலாம் முஹம்மது)
4. முஸ்லிம்கள் பலமும், பலவீனமும் (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
5. இஸ்லாம் சோதனைகள், சவால்கள், சாதனைகள் (எம்.ஜி.எம்)
6. எதிர்காலம் இஸ்லாத்திற்கே (கா.மு. இல்யாஸ் ரியாஜி)
7. கர்கரேயை கொன்றது யார்? புத்தக வெளியீட்டு விழா (மதுரை)

தொடர்புக்கு : **வைகறை விஷன்**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் - 7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909



M.I. Raseen Hameed
(Partner)

கனவில் கண்ட

காணி நிலம் வேண்டும் இறைவா !

அதில் நாங்கள் கலங்காமல்

இருக்கவேண்டும் இறைவா !!!



Autoor Haji.

S.H. Mohamed Iqbal
(Chief Executive)

இதோ எங்களிடம் மக்களின் நம்பிக்கை நாணயம் பெற்ற நிறுவனம்

**RICHFIELD PROPERTIES** LAND DEVELOPERS

Neelankarai, Chennai - 41. Cell: 93821 50535 / 9841487891 e-mail: richfield786@gmail.com



# பாபரி மஸ்ஜித்

# தீர்ப்பு இந்து ராஷ்டிராவை நோக்கி. . .

இ ரகசியமாக இந்தியாவில் ஓர் சதி அரங்கேறிக் கொண்டிருக் கின்றது. இதைத் தெரியாதவர்கள் தாம் இப்போது வந்துள்ள அலகாபாத் நீதிமன்றத்தின் தீர்ப்பில் நடந்த பித்தலாட்டங்களை பற்றிக் கவலைப்படுவார் கள்.

இந்தியா வெகுநாள்களுக்கு முன்னரே இந்து ராஷ்டிரா என்ற ஆரிய ராஷ்டிராவை நோக்கிப் போய் கொண்டிருக்கின்றது.

இதைப் பச்சையாக ஷர்மாக்களின் சொற்களால் சொன்னால், குருக்ஷேத்திர போர் தொடங்கி வெகு நாட்களாகி விட்டன.

இதில் ஒரு பகுதிதான். நாளொன்றுக்கு மூன்று வகுப்புக் கலவரம், என நடந்துகொண்டிருக்கும் வகுப்புக் கலவரங்கள், பாகல்பூர் படுகொலைகள், நெல்லி படுகொலைகள், பாபரி மஸ்ஜித் இடிப்பு - மும்பாய் படுகொலைகள், குஜராத் இன சுத்திகரிப்பு, நாடெங்கும் முஸ்லிம்களின் பெயரால் நடத்தப்பெற்ற குண்டு வெடிப்புகள்.

7000 முஸ்லிம் பட்டதாரிகள், டாக்டர்கள், பொறியியல் வல்லுநர்கள், இவர்கள் சிறையில் என்கவுண்டர் என்ற பெயரில் (முஸ்லிம் இளைஞர்கள்) கொலை.

நாடாளுமன்றத்தையே தாக்கினார்கள் என்ற பழி.

மும்பை தாக்குதல் சதி.

இப்படி தொடரும் குருக்ஷேத்திர போரின் வழி இந்தியா இந்து ராஷ்டிராவை நோக்கிப் போய்கொண்டிருக்கின்றது.

இந்த நீண்ட பயணத்தின் ஒரு சிறு கட்டம் தான், அலகாபாத் நீதிமன்றத்தின் பிரகடனங்கள்.

இந்த இந்து ராஷ்டிர சதியை வெளிக்கொணர்ந்த ஹேமந்த் கர்கரே கொலை. அவர் ஒரு பிராமிணர் என்ற போதிலும் விட்டு வைக்கப்படவில்லை. கொலை செய்யப்பட்டார்.

இந்த இந்து ராஷ்டிராவுக்கான ஏற்பாட்டில் இஸ்ரேலின் முழு உதவிப் பெறப்பட்டுள்ளது. இஸ்ரேலின் தலைநகர் டெல் அவீவில் அலுவலகம் கட்டப்பட்டு இந்து ராஷ்டிரா இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது டெல்லியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது.

அமெரிக்க உளவுத் துறையின் வழி அமெரிக்காவின் உதவியும் பெறப்பட்டுள்ளது.

நேப்பாள் மன்னர் இதற்கு முன் பணம் தந்திருக்கின்றார்.

இங்குள்ள இந்துத்துவ தன வந்தர்கள் பணத்தை அள்ளிக் கொட்டியுள்ளனர்.

வெளிநாடுகளிலிருந்து லட்சக் கணக்கான கோடிகள் வந்து குவிந்து கொண்ட இருக்கின்றன.

இந்தப் பணங்களையெல்லாம் இஸ்ரேல் பெற்றுக் கொண்டு ஆயுதமும், பயிற்சியும், தந்து கொண்டிருக்கின்றது.

இந்துக்கள் இராணுவ மயமாக்கப்பட்டு வருகின்றார்கள். இராணுவம் இந்து மயமாகி வருகின்றது. இதனால் இந்த குருஷேத்திர போருக்கான பட்டாளம் தயார் படுத்தப்பட்டு விட்டது. இத்தனை ஏற்பாடுகளும் நிறைவாகவே திட்டமிட்டப்படி செய்யப்பட்டு விட்டன.

**ஊடகங்களின் உதவி:**

இங்குள்ள ஊடகங்கள், இந்து ராஷ்டிர வாதிகளின் சதிகளை மக்கள் மன்றத்திலிருந்து மறைக்கின்றன. அது மட்டுமல்லாமல், இந்து ராஷ்டிராவை உருவாக்கிடும் அளவில், மக்கள் மனதை உருவாக்கி வருகின்றன.

இந்து ராஷ்டிராவின் முதல் எதிரியாகக் காட்டப்படும் முஸ்லிம்களை தீவிரவாதிகளாக சித்தரிக்க, எல்லாப் பொய்களையும் உண்மைகள் போல் சித்தரித்து மக்கள் மன்றத்தில் வைத்து வருகின்றன. பொய்யும், கற்பனையும் நிறைந்த கட்டுரைகளைப் பிரசுரித்து வருகின்றன.

நீட்டி முழங்காமல் சொன்னால், இந்த ஊடகங்களும் இந்து ராஷ்டிராவுக்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்து வருகின்றன.

அபிநவ் பாரத் - இன் திட்டப்படி ஒரு இரத்த புரட்சியின் வழிதான் இந்து ராஷ்டிரா இங்கே வர வேண்டும்.

அதற்கான அத்தனை ஏற்பாடுகளும் பாங்குற செய்யப்பட்டு வருகின்றன. அனைத்துத்து தரப்புகளும் உதவுகின்றன.

நாட்டில் நடப்பிலிருக்கும் அரசியல் நிர்ணயச் சட்டத்தை தூக்கி வீசி விட்டுத்தான், அபிநவ் பாரத் ஆரிய ராஷ்டிரா என்ற இந்து ராஷ்ராவை கொண்டுவந்திட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

ஆனால் அதைத்தடுக்க அந்த அபிநவ் பாரத் - ஐ தடை செய்ய அரசு முன் வரவில்லை.

ஓர் இராணுவ புரட்சியின் மூலம் இந்நாட்டின் அரசியல் நிர்ணயச் சட்டம் தூக்கி வீசப்பட்டு விடுவதைத் தடுக்கத்தான் மராட்டிய காவல் துறை அதிகாரி ஹேமந்த் கர்கரே முயற்சிகளை மேற்கொண்டு வந்தார். ஆனால் அவரை கொலை செய்து விட்டார்கள் அரசிடம் சம்பளம் வாங்குபவர்கள்.

இந்த முழுப் பின்னணியையும் புரிந்து கொண்டவர்களுக்கு இந்தத் தீர்ப்பு ஆச்சர்யத்தைத் தராது.

**தீர்ப்பின் பின்னால்**

பாபரி மஸ்ஜித் வழக்கில், வழங்கப்பட்ட தீர்ப்பு, இந்து ராஷ்டிராவுக்கு எழுதப்பட்ட, அரசியல் அமைப்புச் சட்டபடி வழங்கப்பட்டதே.

இதையே 2.10.2010இல் தி.இந்து பத்திரிகையில் கட்டுரை எழுதிய ரோமிலா தாப்பூர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டி இருந்தார். அதையே 4.10.2010 இல் தி இந்து பத்திரிக்கையில் கட்டுரை எழுதி இருந்த, மாலினி பார்த்தசாரதியும் சுட்டிக் காட்டி இருந்தார்.

இந்த தீர்ப்பு இன்று புராணங்கள், கற்பனைகள், இவற்றின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தாலும் இது 'Theocracy' என்ற தேவ சட்டங்களின் வழியே வழங்கப்பட்டுள்ளது. இது தற்கால ஜனநாயக அடிப்படையில் வழங்கப்பட்ட தீர்ப்பு அல்ல.

தீர்ப்பில் அடிக்கடி "as per faith and belief of the Hindus" இந்துக்களின் மத நம்பிக்கையின் அடிப்படையில் என்ற சொற்களை அடிக்கடி பயன்படுத்துவதாலும், இது ஒரு மதவெறி தீர்ப்பு என்று அடித்துக் கூறுகின்றார்கள் ரொமீலா தாப்பூரும், மாலினி பார்த்தசாரதியும். இவர்கள் நம்மைப்போல் நேரடியாக இதைச் சொல்லவில்லை. சுற்றி வளைத்துச் சொல்லுகின்றார்கள். 8000 பக்கங்கள் கொண்ட தீர்ப்பில் பாபரி மஸ்ஜித் என்ற சொல்ல எங்குமே இல்லை என்கிறார் மாலினி (T.H. 4.10.10). நாளைய உலகில் இந்தியா இந்து ராஷ்டிரம் அதில் சிறுபான்மையினருக்கு இடமில்லை. அப்படி இருந்தாலும் அவர்கள் இரண்டாந்தர குடிமக்களாக நடதத்தப் படுவார்கள்.

சிறுபான்மை முஸ்லிம்கள் அன்னாளில் இருப்பார்களா? இருந்தால் எப்படி இருப்பார்கள் என்பதே கேள்விக்குறியாக இருக்கும்போது இவர்கள் ஏன் இந்தத் தீர்ப்பைப் பற்றி இப்படி ஆதங்கப்படுகின்றார்கள் என்றே ஷர்மாக்கள் நினைக்கின்றார்கள். (ஷர்மா : 17,28000 ஆண்டுகளுக்கு முன் பிறந்த ராமரின் பிறப்பிடத்தை கண்டுபிடித்த நீதிபதி).

இதைப் புரிந்து கொண்டு இந்து ராஷ்டிரமாக நமது இந்தியா ஆகிவிடாமலிருப்பதற்கு நிரந்தர நடவடிக்கைகளை எடுப்போம்.

அந்த முயற்சியில் பாபரி மஸ்ஜிதையும் இவர்கள் இடித்த சைவ, வைணவ வழிபாட்டுத் தலங்களையும், புத்த விகாரங்களையும் மீட்போம்.

**எம்.ஜி.எம்.**



# ஒரு மொடக்கு தண்ணீர்

## (Hydro Therapy – நீரியல் மருத்துவம்)

அல்குர்ஆனின் அறிவியல் அத்தாட்சிகள்
ரஹ்மத் ராஜகுமாரன் (கைபேசி: 9443446903)

உணவுக்கு அடுத்தபடியாக மனிதனின் முக்கியமான தேவை தண்ணீர். அதாவது குடிநீர்! பசியைப் போலவே தாகமும் மனிதனை வாட்டும் ஓர் இயற்கை உணர்வாக உள்ளது! தண்ணீர் மனிதனுக்கு உயிர் கொடுக்கும் உணவாகவும் குணமளிக்கும் மருந்தாகவும் பயன்பட்டு வருகிறது.

தண்ணீர்தான் நம்முடைய சருமம், நகங்கள், கேசம் ஆகியவற்றைப் பராமரித்து பாதுகாப்பதோடு, நம் உடலில் இருக்கும் நுன்கிருமிகளை உடலிருந்து வெளியேற்றுவதற்கும் பயன்படுகிறது.

நம் உடலுக்கு எப்போதெல்லாம் தண்ணீர் தேவைப்படுகிறதோ அப்போதெல்லாம் தாகம் ஏற்படுகிறது என்பது ஒரு பொதுவான நம்பிக்கை. பெரும்பாலான நேரங்களில் இது உண்மையாக இருந்தாலும், தாகம் ஏற்படுவதற்கு வேறு பல காரணங் களும் உள்ளன.

போதுமான அளவு தண்ணீர் அருந்தாத போது தாகம் ஏற்படுவது மட்டுமன்றி நம் உடலின் பல்வேறு உறுப்புகளிலும் வேறுசில பாதிப்புகள் ஏற்படுகின்றன. அவற்றின் அறிகுறிகள் தென்படும்போது நாம் கவனிக்காமல் விட்டுவிட்டால், “டிஹைட்ரேஷன்” எனப்படும் வறட்சியும், முற்றும்போது வேறு நோய்களும் ஏற்படவும் வாய்ப்புண்டு!

பொதுவாக நம் உடலுக்கு தேவையான தண்ணீரில் மூன்றில் இரண்டு பகுதி நம்முடைய உணவிலிருந்தே கிடைக்கிறது. மீதமுள்ள ஒரு பகுதியைப் பெறுவதற்கு ஒவ்வொரு நாளும் 8முதல் 10 குவளைகள் வரை தண்ணீர் அருந்த வேண்டும் என்று சுகாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

சில நோய்களைக் குணப்படுத்துவதற்கும் தண்ணீர் ஒரு மருந்தைப் போல பயன்படுத்தப்படுகிறது. பல நூற்றாண்டுகளாக தண்ணீர் நோய்போக்கும் மருந்தாகவே பயன்படுத்தப்பட்டு வருகிறது. நாம் எந்த சிகிச்சை செய்து கொண்டிருந்தாலும் அதன் மூலம் முழுமையான பலனை நாம் அடைய வேண்டுமானால் நாம் போதுமான அளவு

தண்ணீர் அருந்த வேண்டும். ஏனெனில் தண்ணீர்தான் நம் உடலைத் தூய்மைப்படுத்துகிறது. “ஹேமடோ பாசில்”என்று மருத்துவ உலகில் குறிப்பிடப் படும் புதிய ரத்தத்தை உற்பத்தி செய்யவும் உதவுகிறது. பெருங் குடலிலுள்ள மடிப்புகளும் சிறு குடலும் தீவிரமாக செயல்பட தண்ணீர் உதவுகிறது.

பெருங்குடல் சுத்தம் செய்யப்படும் போது நாம் உண்ட உணவில் இருக்கும் ஊட்டச் சத்துக்கள் கிரகிக்கப்படுகின்றன. அவையே புதிய ரத்தமாக உருவாகிறது.

நிறைய அளவு தண்ணீரை அடிக்கடி சாப்பிடுவதன் மூலம் நோய்களை குணப்படுத்தும் முறைக்கு தண்ணீர் தெரபி (Hydro Therapy) என்று பெயர். அதாவது சுமார் 8 மணி நேரம் முதல் 10 மணி நேரம் வரை ( நாம் நோன்பு நோற்கும் நேரம் சுமார் 13 மணிநேரம்) எதுவும் சாப்பிடா மல் இருந்து விட்டு 5 முதல் 10 நிமிடங்கள் இடைவெளிவிட்டு விட்டு நிறைய தண்ணீர் அருந்தும் போது, அந்த தண்ணீர் குடலில் ஒரு பிடிப்பை ஏற்படுத்தி அதை வழக்கத்தை விட சிறப்பாகச் செயல்பட வைக்கிறது!

திடீரென்று தண்ணீர் அழுத்தம் கொடுக்கும் போது, குடல் சுவர்களில் ஒட்டிக் கொண்டிருக்கும் உணவுத் துணுக் குகளும், ஜீரணமாகாதப் பொருட்களும் உடலிருந்து வெளியேற்றப்படுகின்றன. இதன் மூலம் குடலின் அணுக்களுக்கு புத்துயிர் அளிக்கப்படுகிறது. நாம் நோற்கும் பர்ளான 30 நோன்பு தண்ணீர் தெரபிக்கு நல்லதொரு உதாரணமாக திகழ்கிறது!

சிறு நீரகங்கள் தண்ணீ ருடன் தொடர்புடையவை. எனவே சிறுநீரகம் சிறுநீரகக் குழாய்களில் ஏற்படும் எரிச்சல், வலிபோன்றவற்றை தண்ணீர் தெரபி போக்குகிறது. மேலும் சிறுநீரக் குழாய்களில் இருக்கும் பேக்டீரியாக்களைக் கொல்வ தோடு கற்கள், மற்றும் நீடித்த அஜீரணம், மூட்டு வலிகள், உயர் ரத்த அழுத்தம், கொலஸ்ட்ரால் உடல் பருமன் நீரிழிவு இருதயப் பிரச்சனைகள், மயக்கம், மூளை, தண்டு வடத்தைப் பாதிக்கும் நோயான மெனிங்கிடிஸ், கர்ப்ப ப்பை புற்றுநோய், மூலம், வயிற்றுப் பிரச்சனைகள், பித்தநீர், இருமல், பக்கவாதம், பிராங்கிடிஸ், ஆஸ்து மா, லியூகோரியா, அசிட்டிடி, வீக்கம், காய்ச்சல், தலை வலி, சோகை, டி.பி., நுரையீரல் பிரச் சினைகள், வாயு கோளாறுகள், மாதவிடாய், பிரச்சனைகள், மலச்சிக்கல், போன்ற அநேக நோய்களுக்கு நிறைய தண்ணீர் குடிப்பது குணமளிக்கும் என்று வல்லுநர்கள் கூறியுள்ளனர்.

போதுமான தண்ணீர் அருந்தியிருக்கிறோமா என்று தெரிந்து கொள்வதற்கு ஒரு சோதனை இருக்கிறது! உங்கள் உள்ளங்கையை விரித்து, ஒரு மேஜை மீது வைத்து அழுத்திக் கொண்டு மேல் பகுதியை மற்றொரு கையால் கிள்ளுங்கள்! கிள்ளிய பகுதி உடனே மீண்டும் சேர்ந்து விட்டால் போதுமான தண்ணீர் அருந்தியிருக்கிறீர்கள் என்று அர்த்தம். அதற்கு சிறிது நேரம் பிடித்தால் இன்னும் அருந்த வேண்டும்.

உங்கள் சிறுநீர் லேசான வைக்கோல் நிறத்தில் இருந்தால் போதுமான தண்ணீர் அருந்தி யிருக்கிறீர்கள் என்று புரிந்து கொள்ளலாம்.

ஆக தண்ணீர் தெரபி என்பது நிறைய அளவு தண் ணீரை அடிக்கடி சாப்பிடு வதன் மூலம் நோய்களைக் குணப் படுத்தும் என்பது மருத்துவ உலகம் ஒப்புக் கொண்ட ஆய்வு ஆகும்.

ஆனால் குர்ஆன் அதே தண்ணீர் தெரபி சில சூழ்நிலை யில் மிக குறைவாக குடித்துக் கொள்ள கட்டளையிடுகிறது. ஆச்சரியமாக இருக்கிறதா. . . ? இந்த வகையான தண்ணீர் தெரபியையும் மருத்துவ உலகம் ஆய்வுகள் செய்து உண்மை தான் என்பதையும் ஒத்துக் கொள்கிறது. முதலில் திருக் குர்ஆன் கூறும் வசனத்தை பார்ப்போம்.

“தாலூத் படைகளைத் திரட்டிக் கொண்டு புறப்பட்ட பொழுது, அவர் தன் படையை நோக்கி “நிச்சயமாக நீங்கள் செல்லும் வழியில் அல்லாஹ், ஓர் ஆற்றைக் கொண்டு உங்களைச் சோதிப்பான். உங்களில் எவன் அதிலிருந்து தன் கையளவு கொண்ட ஒரு சிறங்கை நீரைவிட அதிகமாகக் குடிக்கவில்லையோ. அவன்தான் என்னைச் சார்ந்த வன். எவன் அதிலிருந்து அதற் கதிகமாகக் குடிக்கிறானோ அவன் என்னைச் சார்ந்தவன் அல்ல” எனக் கூறினார். ஆனால் ஆற்றை நெருங்கவே அவர்களில் சிலரைத் தவிர பெரும்பாலோர் அதிலிருந்து அதிகமாகக் குடித்து விட்டார்கள். பின்னர் அவர், தம்முடன் இருந்த விசுவாசி களுடன் அதனைக் கடந்து சென்றபொழுது, அதிகமாக தண்ணீர் குடித்த அவர்கள் ஜாலூத் (Goliath) துடனும்,

அவனுடைய படைகளுடனும், இன்று யுத்தம் புரிய எங்களுக்குச் சக்தியில்லை என்று கூறி விலகிவிட்டார்கள். ஆனால் அவர்களில் எவர்கள் நிச்சயமாக அல்லாஹ்வைச் சந்திப்போம் என்று உறுதி கொண்டிருந்தார் களோ அவர்கள் மற்றவர்களை நோக்கி" எவ்வளவோ பெருங் கூட்டத்தினரை எத்தனையோ சிறு கூட்டத்தினர் அல்லாஹ் வின் உதவியைக் கொண்டு வென்றிருக் கிறார்கள். அல் லாஹ் பொறுமை யாளர்களுடன் இருக்கின்றான்" என்று கூறினார்கள்"

**குர்ஆன் (2:249)**

பாலஸ்தீனத்திற்கும், எகிப் திற்கும், இடையிலுள்ள கடற் கரை பிரதேசத்தில் வசித்து வந்த 'அமாலிக்கா' என்ற கூட்டத்தினர் இஸ்ரவேலர்களின் மீது படை யெடுத்த, அரச குடும்பத்திலுள்ள 440 ஆடவர்களை அடிமை களாக்கி தங்களின் இடத்திற்கு இழுத்து சென்றனர்.

இந்நிலையில் அரசர் இல்லாத பனீஇஸ்ரவேலர் களுக்கு தாலூத் என்பவரை அரசராக நியமித்தார் அஸ்மாவீல் (அலை) என்கிற நபியவர்கள். தாலூத் மன்னரும் அமாலிக்கா கூட்டத்தினரை வெற்றி கொள்ள நல்லப்பிராயமுள்ள வாலிபர் களாக 30 ஆயிரம் பேர்களை சேர்த்து படை அமைத்தார். அக்காலம் முது வேனிற் காலமாக இருந்தது. இவர்கள் ஒரு வனாந்திர காட்டை கடக்க வேண்டியிருந்தது. அவர்கள் கோடையின் மிகக் கொடிய வெப்பத்தால் ரொம்பவும் தாகம் எடுத்து அவர்கள் கொண்டு வந்த நீரும் காலியானது. எனவே இஸ்ர வேலர்கள் நபி அஸ்மாவீல் (அலை)யிடம் தங்களுக்கு ஒரு நதியை உண்டாக்கி தரும்படி கேட்டுக் கொண்டனர்.

இவர்களின் வேண்டு கோளுக்கு இணங்க நபி அஸ்மா வீல் (அலை) அவர்கள் இறைவனி டம் பிரார்த்தனை செய்து, "உங்களை அல்லாஹ் ஒரு நதியைக் கொண்டு சோதிப்பான். அந்த நதியில் உங்கள் தாகத்திற்காக ஒரு மொடக்குக்குஅதிகமாக தண்ணீர் அருந்தக் கூடா. அப்படி தண்ணீர் அருந்துபவர் நம்மைச் சேர்ந்த வரல்லர்" என்று கூறிவிடும்படி சொல்ல வேண்டும் என்பதாக தாலூத் திடம் நபி கூறினார்கள்.

இவ்வண்ணம் இறைவன் சோதித்ததற்குக் காரணம், பெரும் படையுடன் வருவதால், தங்களுக்கு வெற்றியே கிடைக்கும் என்ற பேராசையின் பேரில் அநேகர் படையில் சேர்ந்திருந்தனர். இவர் கள் அநேகர் யுத்தத்திற்கு ஆசைப் படாமல் ஆனால் வெற்றியை மட்டும் கருத்தில் கொண்டி ருந்தனர். எனவே இத்தகையவர் களால் யுத்தம் நடைபெறும் போதும் பலஹீனம் ஏற்பட்டு விடும். இதனால் இவர்கள் தோல்வி யை சந்திக்க வேண்டியது வரும் என இறைவன் எண்ணி இவர் களை படையைவிட்டுப் பிரித்து, பகைவர்களை எதிர்த்து மார்க்க யுத்தம் செய்ய உண்மையான எண்ணத்துடன் இருப்பவர்களைக் கொண்டு போர்களம் அனுப்ப வேண்டும் என்பதற்காக இறைவன் இவர்களை சோதித்தான்.

பனீஇஸ்ரவேலர்களில் 313 பேர்களைத் தவிர மற்றவர்களெல் லாம் தாலூத் அரசரின் கட்டளை யை மீறி அதிகம் அதிகமாக தண்ணீர் அருந்தி விட்டனர். ஆகவே நமக்குக் கீழ்படிபவர் எவர் என்பதை அரசர் அறிந்து கொண்டார். மேலும் அதிகமாக தண்ணீர் அருந்தியவர்களுக்கு மென்மேலும் தாகவறட்சி ஏற்பட்டு அவர்கள் ஆற்றங்கரை யிலேயே தங்கிவிட்டார்கள். அவர்கள் இப்படி தங்கியதைக் குறித்துத் தான்குர்ஆன் வசனத்தில், "இன்று யுத்தம் புரிய எங்களுக்குச் சக்தியில்லை" என்று கூறி விலகி விட்டார்கள் என்று கூறப்பட்டுள் ளது.

இதன்பிறகு தாலூத் அரசர் தனது படையில் போர் வீரர்கள் குறைவாக இருப்பதாலும் அதே நேரத்தில் ஜாலூத் படையினர் அதிகமாக இருப்பதை எண்ணி,

"எங்கள் இறைவனே! நீ எங்கள் மீது பொறுமையைச் சொரிவாயாக! எங்கள் பாதங் களை உறுதிப்படுத்தி வைப் பாயாக! அன்றி நிராகரிக்கும் இந்த மக்கள் மீது வெற்றி பெற எங்களுக்கு நீ உதவிபுரிவாயாக" என்று பிரார்த்தனை செய்தார்கள்.

**(குர்ஆன் (2.250))**

இந்த 3 விஷயங்களை வரிசையாகக் கேட்டிருப்பது கவனித்தக்கது. யுத்தத்திற்கு செல் பவருக்கு இம் மூன்று காரியங் களும் இன்றியமையானதாகும் என்பதாக கூறப்பட்டுள்ளது.

விஞ்ஞான ரீதியாக ஆய்வு செய்யும் போது குறைவாகவும் தண்ணீர் குடிக்க வேண்டும் அதாவது மிக அதிகமாக தாகித்து இருக்கும் போது பசியைக்காட்டி லும் தாகம் மிக அதிகமாக இருக்கும். அந்நேரத்தில் உண வைக் காட்டிலும் மனம் தண் ணீரையே நாடும். அந்நேரத்தில் அளவுக்கு மீறி தண்ணீர் குடிக்கும் போது, இந்த அதிகமான தண்ணீர் உடலுக்கு தேவையான சோடியம் உள்ளிட்ட தாதுப் பொருட் களை நீர்க்கச் செய்து

வீரியத்தை குறைத்து விடும். அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சுதானே! எனவே எல்லையை மீறி தண்ணீர்அருந்தும் போது, உடலிலுள்ள தாதுப் பொருட்கள் நீர்த்து உடம்பு ரொம்பவும் களைப்பாகி விரைவில் சோர்வடைகிறது. இதைத்தான் பனீ இஸ்ரவேலர்கள் செய்தார்கள்.

மேலும் உணவோ, தண்ணீரோ இரைப்பையைச் சென்றடையும்போது ரத்தம் இரப்பைக்குச் சென்று உணவை செரிக்க வைக்கும் வேலையில் ஈடுபடுகிறது. இந்த நிலைமை யில் மற்ற உறுப்புகளுக்கு குறைவான ரத்தம் போகிறது. இதனால் அந்த உறுப்புகளெல்லாம் தன்னோட இயக்கத்தை வழக்கத்தைவிட மெதுவாக செய்கிறது. அதனால் தான் களைப்பு உண்டாகிறது.

மிக அதிகமான தாகத்தில் நீரையோ, அல்லது பசிக்காக சாப்பிட்ட உடனேயோ புத்தகத்தை எடுத்துப் படித்தால், நாம் கண்ணால் பார்த்துதான் படிப்போம். அவ்வளவுதான். படித்தது எதுவுமே மனதில் பதியாது இதற்குக் காரணம் மூளைக்குத் தேவையான ரத்தம் கிடைக்காது. மேலும் உடனே சோர்வைடைந்து களைப்படையும்.

மிக அதிகமாக தண்ணீர் குடிப்பது நல்லது என்று தண்ணீர் தெரபியான நீரியல் மருத்துவம் கூறுகிறது. அதே நேரத்தில் களைப்படையக் கூடாது, சோர்வையடைந்து விடக்கூடாது. எடுத்த காரியத்தை முடிக்க வேண்டும் என்று எண்ணும் போது மிக அளவாகத்தான் தண்ணீர் குடிக்க வேண்டும். வேலையோ யுத்தமாக இருந்தால் அதனை முடித்தபிறகே முழுமையாக தண்ணீர் அருந்தலாம் என்பதை விளங்க முடிகிறது.

# பட்டியல் ஜாதியினரும், பழங்குடியினரும் கோரிக்கை!



தலீத் அதிகாரி (ஐ.ஏ.எஸ்.) சி. உமாசங்கர் என்ற தலீத் அதிகாரி தற்காலிகப்பணி நீக்கம் செய்யப் பட்டுள்ளது. சில நாள்களாகவே விவாதமாகி வருகின்றது. அவர் தவறான முறையில் தான் ஒரு தலீத் என்ற சான்றிதழை பெற்றுக் கொண்டார் என்பதே குற்றச்சாட்டு. ஆனால் இப்போது தலீத் மக்களின் அமைப்புகளே அவருக்காகப் போராடிட முன் வந்துள்ளன.

டெல்லியைச் சார்ந்த தலீத் தலைவர் உதித் ராஜ் அவர்கள், சென்னையில் பல்வேறு தலீத் அமைப்புகளையும் ஒன்றிணைத்து முன் வைத்தக் கோரிக்கையில் உமா சங்கர் அவர்களை உடனேயே பதவியில் அமர்த்திட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டுள்ளார்.

**தி நியூ இன்டியன் எக்ஸ்பிரஸ், 15.8.2010**

# பிரபல தலீத் கவிஞர் மரணம் : Narayan Surve

நாராயன் செர்வே என்பவர் “மராத்தி” மொழிக் கவிஞர். இவர் 16.8.2010 இல் தானே என்னுமிடத்தில் மரணித்தார்.



தலீத் மக்களுக்கு மறுக்கப்படும் கல்வி இவருக்கும் மறுக்கப்பட்டது. எனினும் சுயமாகவே கல்வியைக் கற்றுக் கொள்ளும் ஒரு அதீத சாதனையை நிகழ்த்தி தன்னையொரு புலவர் என்ற நிலைக்கு உயர்த்திக் கொண்டார்.

1962 முதலே புரட்சிமிக்க கருத்துக்கள் எழுதினார். சேரிவாழ்வின் அவலங்களை அனைவரும் அறிந்திட செய்தார்.

பொதுவுடமைக் கருத்துக்களுக்குப் பலியானார் என்றாலும், பல தலீத் கவிஞர்களுக்கும் தலீத் இயக்கங்களுக்கும் முன்னோடியாக அமைந்தார். பல விருதுகளையும் பெற்றார்.

**எம்.ஜி.எம். -ஆதாரம் : தி டைம்ஸ் ஆஃப் இந்தியா, 17.8.2010**



# உணவு பெறும் உரிமைச் சட்டம் ஓர் இஸ்லாமியப் பார்வை!

இப்போது ஒரு பெரும் விவாதம் நமது நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கின்றது.

அது நமது இந்தியாவின் 150 மாவட்டங்களில் மக்கள் இலைகளையும் தழைகளையும் உண்டு வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். உண்மையைச் சொன்னால் மடிந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த மக்களுக்கு உணவு பெறும் உரிமை என்றொன்றை வழங்கிட வேண்டும் என்பதே!

இதனை ‘Right to Food’ உணவு பெறும் உரிமை எனக் கூறுகின்றார்கள். இந்த உரிமையை உறுதி செய்ய Right to Food Act, உணவு பெறும் உரிமைச் சட்டம் என்றொன்று இயற்றப்பட வேண்டும் என்ற கோரிக்கை நாடு முழுவதும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

2010 ஆகஸ்ட் 3ஆம் நாள் முதல், ஆகஸ்ட் 10 ஆம் நாள் வரை ஒரிசாவின் தலைநகர் புபனேஷ்வரில் நடந்த மாநாடு ஒன்றில் நாடெங்கிலுமிருந்து 1500, உணவு உரிமைகோரும் ஆர்வலர்கள் கலந்து கொண்டார்கள். விவாதங்கள் நடத்தினார்கள்.

அங்கே உணவு பெறும் உரிமையை உறுதி செய்யும் சட்டம் கொண்டு வரப்பட வேண்டும் என்று அழுத்தம் தரப்பட்டது.

அடுத்த நாள் மத்திய நிதி அமைச்சர் பிரனாப் முகர்ஜி இந்தச் சட்டம் நிச்சயமாக கொண்டு வரப்படும். அத்தோடு Right to Health Act. ஆரோக்கியத்தைப் பெறும் உரிமை சட்டமும் கொண்டு வரப்படும் என அறிவித் தார்.

நாடு விடுதலை அடைந்து 64 ஆண்டுகளுக்குப் பின் அறிவிக்கப்பட வேண்டிய சட்டமல்ல இது.

அறுபத்து நான்கு ஆண்டுகளுக்கு முன் அறிவிக்கப்பட்டு அறிவிப்போடு நின்று விடாமல், செயலில் கொண்டு வந்திருக்க வேண்டிய சட்டம் இது.

ஏன் இப்படியொரு சட்டத்தைக் கொண்டு வந்திட 64 ஆண்டுகளாயின. அதுவும் இந்திய குடிமக்களில் பலர் உயிரிழந்த பின் பேராட்டம் ஒன்றை நடத்திய பின் இஃது

சட்டமாக ஆக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் போராட்டங்களில் லட்சக் கணக்கான மக்களின் மரணத்திற்குப் பின்னரே சட்ட மாக ஆகி இருக்கின்றது.

ஓர் அரசு அமைக்கப்பட்டவுடன் மக்களின் முதல் உரிமையாக இந்த உரிமை அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும்.

அத்தோடு உடை, உறையுள் இவற்றிற்கான உத்திர வாதங்களும் வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இஸ்லாமிய ஆட்சியில், ஆட்சியாளரின் முதல் பொறுப்பே உணவு, உடை, உறையுள் ஆகியவற்றிற்கான உத்திரவாதத்தை வழங்கிடுவதாகவே இருந்தது. உண்மையைச் சொன்னால் அது ஆட்சியாளரின் முதல் கடமை.

உணவுக்கான உத்திர வாதம்,உரிமை இவற்றிலேயே ஆரோக்கியத்திற்கான உத்திர வாதமும் அடங்கி இருந்தது. இஸ்லாமிய ஆட்சியில் - வரலாறு இதற்குச் சாட்சி.

நடந்து கொண்டிருக்கும் (2010)நாடாளும்மன்றம் குளிர் காலக்கூட்டத் தொடரில் இது பற்றிய விவாதம் ஒன்று நடந்து கொண்டிருக்கின்றது.

இந்த விவாதத்தில் எந்த நாடாளும்மன்ற உறுப்பினரும் இந்தச்சட்டம் நாட்டு மக்கள் அனைவருக்கும் செல்லத்தக்க சட்டமாக அமைந்திட வேண்டும் என்பதை வலியுறுத்தவில்லை.

இது குறித்து 10.8.2010 இல் தலையங்கம் எழுதிய இந்து பத்திரிகை நாடெங்கும் எல்லா மக்களுக்கும், செல்லத் தக்க சட்டமாக இது ஆக்கப் படவேண்டும் என அரசை கோரி இருந்தது.

இதில் வேடிக்கை என்னவெனில் இஸ்லாமியச் சட்டவியலில் மிகவும் அதிகமாக, முஸ்லிமல்லாத சட்ட வல்லுநர்கள் பயன்படுத்தும் சொல்லாட்சி யொன்றை இந்து பத்திரிகை பயன்படுத்தி இருந்தது.

அந்தச் சொல்லாட்சி தான் “Universal Rights” அகிலத்தார். அனைவருக்கும் உள்ள உரிமை. எனினும் அதிலும் உலகம் முழுவதும் நம் இந்திய அரசு ஆட்சி செய்து கொண்டிருக்கவில்லை, என்பதனால் இதனை இந்திய குடிமக்கள் அனைவருக்கும் உரிமை தரும் சட்டம் என எடுத்துக் கொள்ளலாம். அதைக் கூட சொல்லவில்லை.

ஆனால் இந்துப் பத்திரிகை Universal Rights என்ற சொல்லாட்சியைத் தவிர்த்து National Rights. நாட்டு மக்கள் அனைவருக்கும் உணவிலும் உரிமை வழங்கப்பட்ட வேண்டும் எனக் கூறிஇருக்கலாம். அல்லது Right of All Citizens. எல்லா குடிமக்களுக்கும் உள்ள உரிமை எனச் சொல்லி இருக்கலாம். ஆனால் Universal Rights என்ற இஸ்லாமிய சட்ட வாக்கலின் அடிப்படையைப் பயன்படுத்தி இருக்கின்றது. இப்படிச் சொல்வதன் மூலம் இந்தச் சட்டம் வேண்டும் அது இந்திய குடிமக்கள் அனைவருக்கும் செல்லுபடியாக வேண்டும் என வலியுறுத்தி உள்ளது.

இதில் வேதனை என்னவெனில், இப்போது நம் நாட்டில் கொண்டு வரப்பட்டிருக்கும் சட்டம் மக்களில் நான்கில் ஒரு பகுதி அளவுக்கும் கூட உணவு பெரும் உரிமையைத் தந்திடாது. 560 மாவட்டங்களைக் கொண்ட இந்தியாவில் 150 மாவட்டங்கள் என்பது மூன்றில் ஒரு பகுதியாகக் கூட இல்லை.

இவை இஸ்லாம் ஏற்படுத்தித் தந்த அடிப்படைகளுக்கே எதிரானவை. இஸ்லாம் வழங்கிடும் உரிமைகள் அனைத்தும் Universal எல்லோருக்கும் சொந்தமானது என்பதை சி.ஜி. வீரமந்திரி உலக நீதிமன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதி அவர்கள் எழுதியுள்ளார்கள். அவர்கள் எழுதிய இஸ்லாமியச் சட்டவியலில், ஒரு அத்தியாயம் The Notion of Universalism “சட்டங்களின் உலகளாவிய தன்மை ” அதனை அப்படியே இங்கே தருகின்றோம்.

**“இஸ்லாமிய சட்டங் களின் உலகளாவிய தன்மை”**

“இறுதி ஹஜ்ஜின் போது இறைவனின் அறுதி தூதர் (ஸல்) அவர்கள் ஆற்றிய உரையில், இப்படிப் பிரகடனப்படுத்தினார்கள்.”

பிறப்பு, நிறம், குலம், கோத்திரம் இவற்றால் கற்பிக்கப் பட்ட பேதங்களை இதோ என்னுடைய காலடியில் போட்டு மிதித்து விட்டேன்.

வெள்ளை நிறமுடையவர்கள் நிறத்தால் கறுப்பாய் போய் விட்டவர்களை விட உயர்ந்தவர்களல்ல.

அரபுக்கள் - அரபுக்கள் அல்லாதவர்களைவிட உயர்ந்தவர்களல்ல.

அதே போல் அரபுகளல்லாதவர்கள் அரபுக்களைவிட உயர்ந்தவர்களல்ல.

அனைவரும் சகோதரர்களே! அனைவரும் ஆதம்(அலை) அவர்களின் கிளைகளே!

இங்கே நாம் கவனிக்க வேண்டியது மனிதர்கள் அனைவரும் இறையாட்சியில் சகோதரர்களே சமமானவர்களே என்ற அடிப்படையில் சட்டங்கள் அதே அடிப்படையின் கீழ்தான் செயல்படுத்தபடும்.

முஸ்லிமல்லாதவர்கள் இஸ்லாமிய ஆட்சியில் மனிதர்கள் என்ற அடிப்படையில் எல்லாச் சட்டங்களிலும் முழு அங்கீகாரத்தையும் உரிமைகளையும் பெறுவார்கள்.

இஸ்லாமியச் சட்டங்கள் எல்லோருக்கும் மட்டுமல்ல எல்லாவற்றையும் தழுவி நிற்கும். இது நாம் சாதாரண சட்டங்களின் செயல்பாடுகள் பற்றி புரிந்து வைத்திருப்பதை விட விசாலமானது.

**“மனிதர்களல்லாத உயிரினங்களும் படைப்புகளும் அன்போடும் பரிவோடும் நடத்தப்பட வேண்டும் என்பது அவற்றின் உரிமை எனப் பிரகடனப்படுத்தியது இஸ்லாம்.”**

**“உலகில் கீழாக நடத்தப்பட வேண்டியவை எவையுமில்லை என்கின்றது இஸ்லாம்”**

**“பூமியில் ஊர்ந்து திரியும் பிராணிகளும், தம் இறக்கைகளால் பறக்கும் பறவைகளும், உங்களைப் போன்ற இனமேயன்றி வேறில்லை. (இவற்றில்) எதையும் நம் பதிவு புத்தகத்தில் நாம் குறிப்பிடாமல் விட்டுவிடவில்லை. இன்னும் அவை யாவும் அவற்றின் இறைவனிடம் ஒன்று சேர்க்கப்படும்”**

***(அல்அன் ஆம் 6:38)***

**“அதே போல் இறைவனின் தூதர் அவர்களின் பொன்மொழிகளில் இந்த உயிரினங்களின் உரிமையை நிலை நாட்டிடும் மொழிகள் ஏராளம், தாராளம். பெருமானார் (ஸல்) அவர்கள் சொன்னார்.”**

**“மிருகங்களைக் குறித்தும் அல்லாஹ்வுக்குப் பயந்து கொள்ளுங்கள். அவை பயணத்திற்குத் தகுந்தவையாக இருக்கும் போது பயணம் செய்யுங்கள். அவைகளைப்புற்றால் அவற்றிலிருந்து கீழே இறங்கி விடுங்கள். பேச முடியாத பிராணிகளுக்கு நாம் செய்யும் நல்லனவற்றிற்கு நிச்சயமாக அல்லாஹ்விடம் நற்கூலிகள் உண்டு. அவற்றிற்கு தண்ணீர் தந்தால் அதற்கும் நற்கூலிகள் உண்டு.”**

மேலே நாம் தந்தவை இஸ்லாமிய சட்டவியல் என்ற நூலில் சி.ஜி. வீரமந்திரிகள் சொன்ன விளக்கத்தின் தமிழாக்கம். (Source : Islamic Juristprudence: An International Perspective : Pages: 62/63. Chapter, Some Basic Legal Ideas.)

இப்படி சட்டங்கள் குறிப்பாக மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றிடும் சட்டங்கள் அனைவரையும் தழுவி யதாக இருந்திட வேண்டும் என்ற இஸ்லாமிய வழிகாட்டுதல்களை எட்டிக் கூடப் பார்த்திடவில்லை.

**நம் நாட்டு விசித்திரம்**

புபனேஷ்வரில் கூடி உணவு பெறும் உரிமையைச் சட்டமாக ஆக்கிட வேண்டும் எனக் கேட்டவர்கள் ஒரு விசித்திரமான முழக்கத்தை முன் வைத்தார்கள்.

அது உணவு மற்றும் தானிய கிடங்குகளில் உணவுப் பொருள்கள் அழுகி அழியும் போது, மக்கள் பட்டினிக் கிடக்கின்றார்கள். இதற்கு அரசு பொறுப்பேற்க வேண்டும் என்பதே அந்த முழக்கம்.

உணவு கிடங்குகளில் கிடக்கும் பொருள்களை பட்டினியால் சாகும் மக்களுக்கும் கொண்டு சேர்த்திட முடியாத அரசு என்ன அரசு?

இவர்களுக்கு இஸ்லாமிய வரலாற்றில் நிரம்ப பாடங்கள் இருக்கின்றன. படிப்பினைப் பெற்றிட அவற்றை பார்ப்போம்.

**தொடர்ச்சி *-62-ம்* பக்கம். . .**

# உணவு உரிமைச் சட்டம் : ஓர் இஸ்லாமிய பார்வை

உலகில் வாழும் மனிதர்களுக்கும் இனி வாழ்ந்திட வரும் தலைமுறையினருக்கும் அருள் கொடையாக அருளப் பட்ட மார்க்கமே இஸ்லாம்.

இந்த மார்க்கத்தின் வழி காட்டுதல்களை மனிதராக வாழ்ந்து காட்டிய இறைவனின் இறுதி தூதர் அவர்களை இறைவன் மனிதர்களுக்கெல்லாம் அனுப்பப் பட்ட அருட் கொடை என அறிவிக்கின்றார்கள்.

இறைவன் ஒருவனே! அவனுக்கு இணையோ துணையோ இல்லை என்ற பிரகடனங்களை மக்கள் மன்றத்தில் வைத்திட வந்த மார்க்கமே இஸ்லாம்.

இந்த இஸ்லாத்தின்

கைகளில் இறைவன் ஆட்சியையும் அதிகாரத்தையும் ஒப்படைத்தான்.

ஆட்சியும் அதிகாரமும் தன்கையில் வந்தபோது இந்த மார்க்கம் மனிதர்களுக்கெல்லாம் ஓர் அருள் கொடையாக எப்படி இயங்கிற்று என்பதை எண்ணிலடங்கா எடுத்துக்காட்டுகள் வழி எடுத்துச் சொல்லலாம்.

ஆட்சியும், அதிகாரமும் அந்த ஆட்சியில் குடிமக்களாக வாழ்வோரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதற்குத்தான்.

குறிப்பாக அதிகாரம், தனது அதிகாரத்திற்குட்பட்டவர்களை அடக்கி ஒடுக்கி போட்டிடுவதற்கல்ல. மாறாக, வலிமைமிக்கவர்கள் மெலியவர்களை அநியாயங்களுக்கும், அடக்குமுறைகளுக்கும் ஆளாக்கி விடக்கூடாது என்பதற்காகத் தான்.

இதையே இஸ்லாத்தின் சொற்களில் சொன்னால் எல்லா நிலைகளிலும் நீதியை நிலைநாட்டுவதற்கே!

இஸ்லாம் ஒரு காலக் கட்டத்தில் அரபு நிலங்களுக்கு உள்ளேயே அமுங்கிக் கிடந்தது. பின்னர் அஃது உலகெங்கும் வியாபித்து விரிந்தது.

இஸ்லாத்தின் கைகளில் ஆட்சி ஒப்படைக்கப்பட்ட நாள்களில் அஃது மக்கள் அனைவரும் அனைத்து வசதிகளையும் பெறுகின்றார்கள் என்பதை ஊர்ஜிதம் செய்து கொண்டது.

இறைவனின் இறுதி தூதர் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆட்சி செய்தபோது அரசின் பொது நிதி கருவூலத்திற்கு எட்டு லட்சம் திர்ஹம் - என்ற அரபு நாணயம் வருவாயாக வந்தது. அதனை இறைவனின் இறுதி தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் அங்கேயே மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

அதே போல், அவர்களை அடியொற்றி, அவர்களுக்குப் பின் ஆட்சியில் அமர்ந்த ஆட்சித் தலைவர் அபூபக்கர் (ரலி) அவர்களும், தான் ஆட்சியில் வீற்றிருந்த நாள்களில் பொது நிதி கரூவூலத்திற்கு வந்த அத்தனை வருவாயையும் ஒரே மூச்சில் செலவிட்டு விட்டார்கள். அதாவது குடிமக்களுக்கு வழங்கி விட்டார்கள்.

இவற்றால் பொதுமக்களும் ஆட்சியாளர்களும் பைத்துல்மால், என்ற பொது நிதி கருவூலத்தைப் பற்றி ஒரே மனநிலையைப் பெற்றிருந்தார்கள்.

அந்த மனநிலையை வரலாறு இப்படிப் பதிவு செய்கின்றது.

“பொது நிதி கருவூலம், ‘கஜானா’ பொதுமக்களின் சொத்து என்றே எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனை செலவு செய்யும் சரியான வழி மக்களுக்காக செலவிடுவதே அல்லாமல் அவற்றைக் கட்டடங்கள் என்ற பெயரில் செங்கல்களிலும் மண்ணிலும் அள்ளிக் கொட்டுவதல்ல. இந்த மனநிலை இஸ்லாமிய ஆட்சியில் கீழிருந்த மக்கள் மனதிலும் அழுத்தமாகப் பதிந்திருந்தது. இதனால் பிந்தைய இஸ்லாமிய ஆட்சியாளர். வலீத் பின் அப்துல் மாலிக் (ரஹ்) அவர்கள் பொதுநிதி கருவூலத்திலிருந்து ஆடம்பரமான ஓர் பள்ளிவாசலை டெமாஸ்கஸ் இல் கட்டியபோது (Jama - Masjid Damascuss) பொது மக்கள் தங்கள் அதிருப்தியை தவறாமல் வெளிப்படுத்தினார்கள். இதுபோன்று கற்களிலும் மண்ணிலும் (அதாவது கட்டங் கட்டுவதற்கு) பொதுநிதி கருவூலத்தைப் பயன்படுத்திடக் கூடாது என்பதை எடுத்துச் சொன்னார்கள்.” (Futah- Ul-Buldar P.: 347)

நீண்ட இஸ்லாமிய ஆட்சியில் வரையிட்டுக் காட்டப்படும் பல அத்தியாயங்களைப் படைத்த ஆட்சியாளர் உமர் பின் அல் ஹத்தாப் (ரழி) அவர்களின் ஆட்சி காலத்தில் புதிய நகரங்கள் பல இஸ்லாத்தின் ஆட்சியின் கீழ் வந்தன. இவற்றில் சுமார் 4000 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டன. இந்த 4000 பள்ளிவாசல்களும் மிகவும் குறைந்த செலவுகளில் மிகவும் எளிமையாகவே கட்டப்பட்டன. ஆடம்பரமாகக் காட்டுவதற்கு அரை திர்ஹம் கூட செலவிடப்படவில்லை.

கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சிக்காலத்தில் பொது நிதி கருவூலத்திற்கு வந்து குவிந்த நிதி ஏராளம். பெஹ்ரைனிலிருந்து மட்டும், ஐந்து லட்சம் ‘திர்ஹம்’ கஜானாவுக்கு வந்தது. நிகர வருமானமாக பதினைந்து லட்சம் ‘திர்ஹம்’ வந்தது.

அதே நேரத்தில் மக்களின் தேவை அந்த அளவுக்கு இருக்கவில்லை. ஏழைகளாகவும், வறியவர்களாகவும் ஒரு காலத்தில் வாழ்ந்தவர்கள் இப்போது வசதிமிக்கவர்களாக ஆகி இருந்தார்கள். ஆகவே யார், யாருக்கு பொது நிதி கருவூலத்திலிருந்து பணம் வழங்கப்பட வேண்டும் எவ்வளவு வழங்கப்பட வேண்டும் என்பதை அறிந்திட வேண்டிய அவசியம் வந்தது.

அகன்டு விரிந்த கலீபா உமர் (ரழி) அவர்களின் ஆட்சியில் இப்படியொரு கணக்கெடுப்பது மிகவும் கடினம். ஆனால் தேவை உடையோர் விட்டுப் போய்விடக் கூடாது. அதே நேரத்தில் அளவுக் கதிகமாகவும் வழங்கிவிடக் கூடாது.

இதனால் மக்களில் தேவை யுடையோரையும் அவர்கள் தேவையையும் கணக்கெடுக்கும் பெரும் பணியொன்று மனித வரலாற்றில் முதன் முறையாக கலீபா உமர்(ரலி) அவர்களின் ஆட்சிக் காலத்தில் அறிமுகப் படுத்தப் பட்டது.

இதனை, இஸ்லாத்தின் வரலாற்றை எழுதிய பிலிஃப் ஹிட்றி என்ற வரலாற்று ஆய் வாளர் இப்படிக் குறிப்பிடு கின்றார்.

"In order to accomplish the distribution a census became necessary, the first census recorded in history for the distribution of state revenue".

(Source: History of the Arabs, Philip Hilti Page:: 172) (பத்தாம் பதிப்பு)

அதாவது,

அரசின் வருவாயை பகிர் ந்து தருவதற்கு மக்கள் கணக் கெடுப்புத் தேவைப்பட்டது. அரசின் வரு வாயை பகிர்ந்து தருவதற்கு வரலாற்றில் அறிமுகப் படுத்தப் பட்ட முதல் கணக்கெடுப்பு அறி முகமானது"

இப்படி அரசு வருவாயைப் பெறுபவர்களின் பதிவேடு ஒன்றும் இஸ்லாமிய ஆட்சி செய்த அத்தனை நிலபரப்புகளிலும் அத்தனை ஆண்டுகளிலும் பாதுகாக்கப்பட்டுவந்தன.

இப்படி மக்களின் அடிப் படை தேவைகளை நிறைவேற் றிடும் போது நெருக்கடியான காலங்களில் இஸ்லாமிய ஆட்சி யில் தலைவர் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை இஸ்லாத்தின் வரலாறு இப்படி வழிகாட்டுகின்றது.

"கலீபா அபூபக்கர் (ரலி) அவர்களின் ஆட்சிகாலத்தில் பஞ்சம் மக்களைப் பீடித்துக் கொண்டது. பொது நிதி கருவூலத் திலிருக்கும் பணத்தை யார் யாருக்குத் தந்திட வேண்டும், என்பது குறித்த ஆலோசனை ஒன்று கோரப்பட்டது. ஆலோ சனை வழங்கிய முஸ்லிம்கள் பலரும், இஸ்லாத்திற்காகத் தங்கள் இருப்பிடங்களையும் இல்லங் களையும் துறந்து மதீனா வந்தவர் களுக்கே முதலிடம் தரவேண்டும் அவர்கள் இஸ்லாத்திற்கு செய்த தியாகங்கள் கணக்கில் கொள்ளப் பட்ட வேண்டும் என்றனர். இஸ் லாத்தின் எதிரிகளைப் போர்களத் தில் சந்தித்தவர்களுக்கே முத லிடம் தந்திட வேண்டும் என்று சிலர் கூறினார்கள். இஸ்லாமிய வரலாற்றில் சந்தித்த முதல்போரில் கலந்து கொண்டவர்களுக்கு ஆலோசனை கூறினார்கள்.

அனைத்தையும் விடுத்து கலீபா - இஸ்லாமிய ஆட்சித் தலைவர் - அபூபக்கர் (ரழி) அவர் கள் இப்படி அறிவித்தார்கள். "இஃது பசியின் விவாகரம். இங்கே யார் பசியால் வாடுகின்றா ரோ அவரே முதலில் பொதுநிதி கருவூலத்திலிருந்து உதவிகளைப் பெறுவார் என அறிவித்தார்கள்" அதன் படி யூத மதகுரு ஒருவரே (ரப்பியூன்) முதல் உதவியை நிதியைப் பெற்றார்."

(Encyclopedia Seerah)

இப்படி வறுமையும், வாட்டமும் மக்களை கவ்விடும் போது பொது நிதி கருவூலம் பயன்பட்டது இஸ்லாமிய ஆட்சியில்.

---

**60ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .**

### உணவுப் பஞ்சங்களைத் தீர்க்க முன்னேற்பாடுகளை செய்வது அரசின் முதல் கடமை

இஸ்லாமிய ஆட்சி நிலை கொண்ட இடங்களில் கூட பல நேரங்களில் வறட்சியும், வாட்ட மும் எட்டிப் பார்த்தது உண்டு.

கலீபா - இஸ்லாமியக் குடியரசு தலைவர் - உமர்பின் அல் ஹத்தாப் அவர்களின் ஆட்சியின் போது இஸ்லாம் ஆட்சி செய்த இடங்கள், பாரசீகம், ரோம், ஆகிய இடங்களையெல்லாம் எட்டிப் பிடித்தது.

'ஷாம்' என்று அன்றும் சிரியா பாலஸ்தீன் ஜெரூசலம் என்றெல்லாம் இன்றும் அழைக்கப்படும் ஷாம் தேசம் முற்றாக இஸ்லாமிய ஆட்சியின் கீழ் வந்தது.

உமர் பின் அல்ஹத்தாப் (ரழி) அவர்களின் ஆட்சிக்கு உட்பட்ட இடங்களில் ஒரு பக்கம் பாலை வனம் ஒரு பக்கம் சோலை வனம்.

ஒரு பகுதியை வறட்சி பீடித் திருக்கும்போது இன்னொரு பகுதியில் வளம் கொழித்துக் கொண்டிருந்தது.

பைத்துமால் என்ற பொது நிதி கருவூலம் களஞ்சியங்களை வைக்கும் காப்பறைகளும் நிரம் பியே நின்றன. அவற்றில் பல அரபு பாலைவனத்திற்கு அப்பால் இருந்தன. அரேபியாவை வறட்சி

பீடித்தால் அவை அரேபியா நோக்கிக் கொண்டு வரப்படும். வறட்சி பீடிக்கும் இடங்களுக்கும் களஞ்சியங்களின் கருவறையிலிருந்து தானியங்கள், அந்த இடங்களுக்குச் சென்றிட தேவையான ஏற்பாடுகளை செய்து தந்தார்கள். கலீபா உமர் (ரலி) அவர்கள். தேவையான இடங்களுக்கு உணவுப்பொருள்கள் சென்றிட எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

இதற்காக அவர்கள் தொடங்கிய பொதுப்பணித் துறை கால்வாய்களை வெட்டிக் கொண்டே இருந்தது.

இப்படி வெட்டப்பட்ட கால்வாய்களில் வரலாற்றை வழைத்து நிற்கும். கால்வாய்தான் அமீருல் முஃமினூன் கால்வாய். இதுதான் நைல் நதியை செங்கடலோடு ஒன்று சேர்க்கும் கால்வாய். அறுபத்து ஒன்பது (69) மைல் நீளம் உள்ள இந்தக் கால் வாய் ஆறே மாதத்தில் வெட்டி முடிக்கப்பட்டது. இன்றிருந்து 1400 ஆண்டுகளுக்கு முன்னால் இத்துணை வேகமாக ஒரு கால்வாய் வெட்டப்பட்டது நடந்த நிகழ்வு என்பதுதான் ஆச்சர்யம்.

இன்றைய நாள்களைப் போல் இயந்திரங்களோ இதர வசதிகளோ அன்று இருந்ததில்லை.

ஏதோ ஒரு ஓடையை வெட்டினார்கள் என்பதல்ல, கப்பல்கள் அவற்றில் பயணித்தன. முதல் வருடத்திலேயே 12 கப்பல்கள் பயணித்தன. பல ஆயிரம் டன் உணவு பொருள்கள் எகிப்திலிருந்தும் இதர பகுதி களிலிருந்தும் அரேபிய பெரு நிலத்தை வந்தடைந்தன இந்தக் கால்வாய் வழி. அந்த அளவுக்கு ஆழமும், அகலமும் கொண்டது.

இந்தக் கால்வாய் கலீபா உமர்(வழி) அவர்களின் பெயராலேயே அமீருல் முஃமினூன் கால்வாய் என அழைக்கப்பட்டது.

கலீபா என்ற பெயரை விட அமீருல் முஃமினூன் எனதான் அழைக்கப்படுவதையே கலீபா உமர் (ரழி) அவர்கள் விரும்பினார்கள்.

இந்தப் பின்னணியில் வெட்டப்பட்ட இதர கால்வாய்கள்.

**அபூ மூஸா கால்வாய் :**

மாகுவல் கால்வாய் ஸாத் கால்வாய் என்பவை முக்கியமானவை. இதில் பல கால்வாய்களை வெட்டிடும் பொறுப்பை சுமந்து சாதித்தவர்கள் நபித் தோழர் அமர்-பின்-அல் ஆஸ் (ரழி) அவர்கள். இவர் மத்திய தரை கடலையும் செங்கடலையும் ஒன்றிணைக்கும் அகண்ட கால் வாய் ஒன்றை வெட்டிட இஸ்லாமியக் குடியரசு தலைவர் உமர்-பின்-அல்ஹத்தாப் (ரழி) அவர்களிடம் அனுமதி கேட்டார்கள். சில பாதுகாப்புக் காரணங்களுக்காக உமர் (ரழி) அவர்கள் அனுமதி மறுத்தார்கள். இந்த அனுமதி வழங்கப்பட்டிருக்குமேயானால் இன்று பெருமையோடு பேசப்படும் சூயஸ் கால்வாயை வெட்டிய பெருமை முஸ்லிம்களைச் சார்ந்திருக்கும். (Al Farook: by: Shibili Numani)

தொடர்ச்சி - 66ம் பக்கம்

# வறுமையில் வாடிடும் குடிமக்களிடம் அரசு அக்கறை!
# இஸ்லாம் தரும் முன்மாதிரி

இஸ்லாமிய ஆட்சியாளர் சுமக்கும் மிகப்பெரிய சுமை தன் ஆட்சியின் கீழ் வாழ்ந்திடும் குடிமக்கள் எப்படி வாழவைக்கப் பட்டார்கள் என்பது குறித்து இறைவனிடம் பதில் சொல்லி யாக வேண்டும் என்பதே. (Accountability before the Almighty)

மறுமை என்ற இறப்பிற்குப் பின்னால் வரும் வாழ்க்கையில் இந்தக் கேள்வி கணக்கிலிருந்து அவர்கள் தப்பித்திட இயலாது.

இதற்காக இறைவன் குறித்த நாளே இறுதி தீர்ப்பு நாள் என இஸ்லாத்தில் வழங்கப் படுகின்றது. எல்லாப் பொறுப்புகளுக்கும் ஆட்சியில் நடந்த அத்தனை அசைவுகளுக்கும் நாம் இறைவனிடம் பதில் சொல்லியாக வேண்டும் என்ற அச்சம் இஸ்லாமிய அரசின் பொறுப்பைச் சுமந்த அத்தனை பேரிடமும் மிகையாகவே இருந்தது. குடிமக்கள் அந்த இறுதி தீர்ப்பு நாளில் அங்கே சாட்சியாக நிறுத்தப்படுவார்கள்.

இறுதி தீர்ப்பு நாளில் குடிமக்களை விட ஆட்சியாளரே அதிகமான கேள்விகளுக்கு உள்ளாக்கப்படுவார்கள் என அஞ்சினார்கள் இஸ்லாமிய ஆட்சியாளர்கள்.

இதனால் மிகவும் அகண்டு விரிந்த நிலபரப்பை ஆட்சி

செய்து கொண்டிருந்த இஸ்லாமியக் குடியரசுத் தலைவர் உமர்(ரழி) அவர்களிடம் உங்களுக்குப்பின் அறிவும் அல்லாஹ்வைப் பற்றி அச்சமும் (குடி மக்களை வாழவைத்த நிலை குறித்து அல்லாஹ்விடம் பதில் சொல்லிட வேண்டுமே என்ற அச்சமும்) நிறைந்த உங்கள் மகனை ஆட்சியில் அமர்த்திட லாமா? எனக் கேட்டபோது, வேண்டாம், நிச்சயமாக வேண் டாம். ஆட்சிப் பொறுப்பை சுமந்ததற்கு அல்லாஹ்விடம் கணக்கு ஒப்படைக்க கத்தாப் குடும்பத்திலிருந்து நான் ஒருவன் மட்டும் போதும், என் மகன் மீது அந்தச் சுமையைச் சுமத்தி விடாதீர்கள்" எனக் கூறி தடுத்துவிட்டார்கள்.

இந்தக் கலீபா - இஸ் லாமியக் குடியரசுத் தலைவர் அவர்களின் ஆட்சியின் போது ஒரு நிகழ்ச்சி. அதனை இந்த ஆட்சியாளரின் தனிசெயலாளர் அஸ்லம் (ரழி) அவர்களே சொல்லக் கேட்போம்.

"ஒரு நாள் இரவு உமர் (ரழி) அவர்களுக்கும் நானும் மதீனாவுக்கு வெளியே போய்க் கொண்டிருந்தோம். மதீனாவுக்கு வெளியே பரவிக் கிடக்கும் கிராமங்களில் என்ன நடந்து கொண்டிருக்கின்றது என்பதைக் அறிந்திடவே நாங்கள் சென் றோம்"

"தொலை தூரத்தில் நெருப்பு எரிந்து கொண்டிருப் பதைக் கண்டோம்."

உமர்(ரழி) அவர்கள் என்னிடம், "ஏதோ பயணிகள் வந்திருக்கின்றார்கள் போலும். இருளும், குளிரும் அவர்களை அங்கே தங்கிடச் செய்துவிட்டது போலும். நாம் சென்று பார்ப் போம்" என்றார்கள்.

"விரைந்தோம், அந்த இடத்தைச் சென்றடைந்தோம்."

"நாங்கள் அங்கே ஒரு பெண்மணியைக் கண்டோம். அந்தப் பெண்மணியைச் சுற்றி சில குழந்தைகள் அமர்ந்திருந் தார்கள்."

"அதே போன்று கூட்டப் பெற்று தீ மூட்டப்பட்டு எரிந்து கொண்டிருந்தது. அதில் ஒரு பாத்திரத்தில் ஏதோ கொதித்துக் கொண்டிருந்தது. சுற்றி இருந்த குழந்தைகள் அழுது கொண்டி ருந்தனர்."

"அந்தப் பெண்ணுக்கு பக்கத்தில் வந்த உமர்(ரழி) அவர்கள் அந்தப் பெண்ணுக்கு சலாம் சொன்னார்கள். நலம் விசாரித்தார்கள்."

அத்தோடு அந்தப் பெண் ணிடம் அங்கே என்ன நடந்து கொண்டிருக்கின்றது? எனக் கேட்டார்கள்.

அந்தப் பெண்மணி இப் படிப் பதில் சொன்னாள்.

"இரவின் இருட்டும் கடுங் குளிரும் என்னை இங்கே தங்கிடச் செய்துவிட்டன" என்றார்.

அடுத்து அவர் பேசுவதற்குள் கலீபா ஆட்சித்தலைவர் உமர் அவர்கள்.

"குழந்தைகள் ஏன் அழுது கொண்டிருக்கின்றார்கள்? எனக் கேட்டார்கள்."

அந்தப் பெண்மணி "அவர் கள் பசியோடிருக்கின்றார்கள்" எனப்பதில் சொன்னாள்.

"அந்தப் பாத்திரத்தில் என்ன வெந்து கொண்டிருக்கின்றது?" எனக் கேட்டார்கள் உமர்(ரழி) அவர்கள்.

"தண்ணீர் மட்டுந்தான் கொதித்துக்கொண்டிருக்கின்றது. இதனை பார்க்கும் அந்தக் குழந்தைகள் என்னவோ வெந்து கொண்டிருக்கின்றது என்ற நினைப்பில் அழுகையை நிறுத்து வார்கள். அதே நினைப்பில் அயர்ந்து விடுவார்கள் தூங்கவும் செய்துவிடுவார்கள். அதன் பின் அல்லாஹ் எங்களுக்கும் உமருக்கு மிடையில் தீர்ப்பு வழங்குவான்" என்று கூறி தன் வறுமையையும் ஆதங்கத்தையும் வெளிக் காட்டினார். (அந்தப்பெண் மணிக்கு தன்னிடம் பேசிக் கொண்டிருப்பது ஆட்சியாளர் உமர்(ரழி) அவர்கள் என்பது தெரியாது.)

குத்திக் கிழிக்கும் தன் னுடைய பதிலில் அந்தப் பெண் மணி ஆட்சித்தலைவர் பொது களஞ்சியம் - அதாவது பைத்துல் மாலிருந்து தங்களுக்குத் தர வேண்டியதை தரவில்லை எனக் கூறிவிட்டாள்.

சற்றும் கோபப்படாமல் அதே நேரத்தில் மனம் கலங்கிய வராய் உமர் (ரலி) அவர்கள் இப்படிக்கேட்டார்கள்.

"என தருமை பெண்மணி யே உமருக்கு உங்கள் நிலைமை எப்படித் தெரியும்?"

உமர் (ரழி) அவர்களின் இந்தக் கேள்விக்கு அந்தப் பெண் மணி,

"எங்கள் நிலைமையைத் தானாகத் தெரிந்திட முடியாத உமர் ஏன் கலீபஃா என்ற பெரிய பொறுப்பை ஏற்றிட வேண்டும்?" எனக் கேட்டாள்.

"இந்தக் கேள்விக்குப் பதிலாக உமர் (ரழி) அவர்கள் என்னிடம் "வாருங்கள் போக லாம்" என்றார்கள்.

நாங்கள் அங்கிருந்து திரும்பினோம். உமர்(ரழி) மிகவும் வேகமாக பயணித்தார்கள்.

உமர் (ரழி) அவர்கள் நேரே பைத்துல்மாலில் தானியங்கள் இருந்த இடத்திற்கு வந்தார்கள். ஒரு மூட்டை மாவு கொஞ்சம் கொழுப்புஆகியவற்றை எடுத் தார்கள். தன்னுடைய முதுகில் ஏற்றிடும்படி என்னைப் பணித் தார்கள்.

அவர்களின் பணியாளனா கிய நான், "நானே அந்த மூட்டை களை எனது முதுகில் சுமந்து வருகின்றேன்" எனக் கோரினேன்.

"வேண்டாம்! எனத் தழுத முத்தக் குரலில் கூறினார்கள். வேகமாக என் கைகளைத் தடுத்து விட்டார்கள்"

நான் என் கோரிக்கையை மீண்டும் வலியுறுத்தினேன். அப்போது உமர்(ரழி) அவர்கள் என்னிடம், "நியாயத் தீர்ப்பு நாளிலும் என்னுடைய சுமையை நீ சுமப்பாயா?" எனக் கேட் டார்கள்.

கண்கள் குளமாகும் நிலையில் கலீஃபா உமர் (ரலி) அவர்களைக் கண்ட நான் அதற்குமேல் பேசிட விரும்ப வில்லை.

அந்த மாவு மூட்டை யையும், அந்தக் கொழுப்பையும் கலீஃபா உமர்(ரழி) அவர்களின் முதுகிலேயே ஏற்றினேன்.

அந்தச் சுமையைத் தூக்கிக் கொண்டுஅந்த தாயிருக்குமிடம் நோக்கி விரைந்தார்கள் (கலீஃபா உமர் (ரழி) அவர்கள்).

தாயின் பக்கத்தில் மூட்டை யை இறக்கி வைத்தார்கள்.

தானே அந்த மூட்டையை அவிழ்த்தார்கள். மாவை ரொட்டி யாக மாற்றிடும் அத்தனை பணிகளையும் செய்தார்கள்.

அடுப்பை மூட்டினார்கள்.

குளிரிலிருந்து தீயை பாதுகாக்கும் பொறுப்பை தானே ஏற்றுக் கொண்டார்கள்.

ரொட்டிகள் தயாராகி அது உணவாக அந்தக் குழந்தை களுக்கும் கிடைத்திடும் வரை கலீபா உமர் (ரழி) அவர்கள் நெருப்பைப் பாதுகாத்தார்கள். பின்னர் அந்தப் பெண்ணிடம் ஒரு பாத்திரத்தைக் கொண்டு வரச் சொல்லி கலீபா அவர்களே ரொட்டிகளைப் பரிமாறினார்கள்.

ரொட்டிகள் சூடாக இருந்த தால் அந்தக் குழந்தைகளால் அந்த ரொட்டிகளை உண்டிட இயல வில்லை.

ரொட்டிகளின் சூட்டை குறைக்கும் முகமாக கலீபா அவர்களே அந்த ரொட்டிகளுக்கு வீசி கொடுக்கத் தொடங்கி னார்கள்.

சூடாறிற்று. குழந்தைகள் உண்டார்கள்.

அவர்கள் பசியாற உண்ணும் அழகைப் பார்த்து ரசித்தார்கள் உமர் (ரழி) அவர்கள்.

மீதமிருந்தவற்றை அந்தப் பெண்ணிடம் ஒப்படைத்துவிட்டு, கலிஃபா உமர்(ரழி) அவர்கள் திரும்பினார்கள்.

நானும் அவர்களைப் பின் தொடர்ந்தேன்.

நாங்கள் புறப்பட தொடங்கி யதும் அந்தப் பெண்மணி "அல்லாஹ் உங்கள் மீது அருளைப் பொழியட்டும். ஆட்சிப் பொறுப் பில் இப்போது இருப்பவரை விட நீங்களே அந்தப் பதவிக்குப் பொருத்தமானவர்கள்" என்றாள்.

பதிலாக உமர் (ரலி) அவர்கள், "நல்லதையே பேசுங் கள் அல்லாஹ் நாடினால், நாளை நீங்கள் நம்பிக்கையாளரின் தலை வரை (ஆட்சித் தலைவரை) காண வரும்போது, அந்த இடத்தில் என்னைக் காண்பீர்கள்" என்றார் கள்.

அந்தப் பெண்மணி கண்ணீர் மல்க அங்கே நின்று கொண்டிருந்தாள்.

உமர்(ரழி) அவர்கள் தொலை தூரத்தில் நின்றபடியே அவர்கள் நிம்மதியாக தூங்கு வதை பார்த்துவிட்டு என்னிடம் இப்படிக் கூறினார்கள்.

"அவர்கள் அனைவரும் நிம்மதியாகத் தூங்குகின்றார்கள். இதற்கு நீயும் சாட்சி."

(இதுபோல் இன்னும் பல நிகழ்வுகளைக் காண படியுங்கள் இஸ்லாமிய நாகரிகம்: முஸ்தபா அல் சிலாய்: தமிழில் மு.குலாம் முஹம்மத்)

**வரலாறு தரும் படிப்பினை:**

இந்த நிகழ்ச்சி பல பாடங்களைப் புகட்டும் பண் பாளர்களுக்கு

1.ஆட்சியில் அமர்ந்திருப் போரின் அடிப்படை கடமையே, அந்த மக்களின் அடிப்படை தேவைகளை நிறைவு செய்வது தான்.

"எங்கள் தேவைகளைத் தானாக தெரிந்திடாத உமர் ஏன் ஆட்சி பொறுப்பை ஏற்க வேண்டும்?" என்ற அந்தப் பெண் மணியின் கேள்வி குடிமக்களின் தேவைகளையும் குறைகளையும்

தெரிந்திடுவது ஆட்சியாளரின் பொறுப்பு அல்லாமல் மக்கள் தங்களிடம், வந்து மன்றாட வேண்டும், கொடி பிடிக்க வேண்டும், கோஷம் போட வேண்டும் என ஆட்சியாளர்கள் எதிர்பார்க்கக் கூடாது.

இதே கேள்வி இன்னொரு உண்மையையும் பறைசாற்றும், அது,குடிமக்கள் இஸ்லாமிய ஆட்சியின் நாள்களின் போது அத்தனை உரிமைப் பிரஞ்சை யோடிருந்தார்கள்.

ஆனால் இங்கே அடுத் தொரு கேள்வி எழும். அது,

அன்றைய நாள்களில் வேண்டுமானால் ஆட்சியாளர் கள் இப்படி நகருக்கு வெளியே வந்து குடிமக்களின் வாழ்க்கைத் தரத்தையும் தேவைகளையும் தெரிந்திட முடியும். அதே போல் பன்மடங்கு மக்கள் தொகைக் கூடிவிட்ட இன்றைய நாள்களில் அது சாத்தியப்படுமா?

இது சாத்தியமே! உண்மை யில் ஒரு முதலமைச்சரோ, ஒரு பிரதம அமைச்சரோ இதனை செய்திட வியலாது.

ஆனால் நிச்சயமாக நமது உளவுத்துறைகள் இந்தப் பணியைச் செய்திட இயலும்.

உளவுத்துறைகளை உருவாக்குவதன் நோக்கம் மக்களின் குறைகளைத் தெரிந்து அரசுக்கு முன்னரே அறிவிப்பது தான். மக்களின் உள்ளம் குமுறல் கள் என்பதை அறிந்திட நம்பகர மான தகவல்களைத் திரட்டித் தந்திடத்தான் உளவுத்துறைகள் அமைக்கப்பட்டன. ஆனால் அவை அரசியல்வாதிகளால் தங்களுடைய எதிர்பாளர்களை இனங்கண்டு அழிக்கவும், அவ தூறு வழக்குகளை புனையவும் பயன்படுத்தப்படுகின்றன.

இன்று இன்னொரு படி மேலே போய், சிறுபான்மை யினருக்கு எதிராக செயல்படவும், இர்ஷத் ஜஹான் போன்ற அப்பாவி களைக் கொலை செய்யவுமே பயன்படுத்தப்படுகின்றன. கர்கரேயைப் போன்ற நேர்மை யாளர்களை நடுரோட்டில் போட்டு சுட்டுக் கொலை செய் வதற்குப் பயன்படுகின்றது.

உண்மையைச் சொன்னால் உளவுத்துறை ஒரு கொலைகார கும்பலாக மாற அரசு செய்வத றியாது திணறிக் கொண்டிருக் கின்றது.

உளவுத்துறை அல்லாமல், மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அனைத்து அதிகாரி களையும் மக்கள் சந்திக்க முடியும். அதிகாரிகள் வந்து மக்கள் குறைகளைக் கண்டறிய வேண்டும். ஆனால் அவர்கள் அதைச் செய்வதில்லை ஒவ்வொரு அரசு அதிகாரியும் தன்னை ஒரு சிற்றரசர் என்றே நினைக்கின்றார்கள். மக்கள் பிரச்னைகளைக் கண்டு கொள்வதே இல்லை.

இந்த நிலைமாறிட வேண்டும் என்றால் இறைவனை அஞ்சி, பதவிகளை நாம் சுமக்கும் சுமை, நாம் நமது அதிகாரம் ஆட்சி, பதவி, இவை குறித்து நிச்சயமாகப் பதில் சொல்லியாக வேண்டும். இறைவனிடம் என்ற நம்பிக்கையுடையோரின் கைகளில் ஆட்சி ஒப்படைக்கப்பட வேண்டும்.

வேறு வார்த்தைகளில் சொன் னால் இறைவனை நம்புகின்றவர் கள்,அந்த இறைவனையும் அவனது வழிகாட்டுதல்களையும் மக்க ளிடம், விளக்கிச்சொல்லி, அத் தகையதொரு ஆட்சியை கொண் டும் வந்திட முயற்சிகளை மேற் கொள்ள வேண்டும். அது ஒன்றே அறுதி வழி!

*63ம் பக்கத்தின் தொடர்ச்சி. . .*

## இஸ்லாமிய ஆட்சியில் குழந்தைகளின் உணவு பெறும் உரிமை

வறுமையும், வாட்டமும் இன்றைய நாள்களில் எந்த அளவுக்கு மக்களை ஆட்டிப் படைக்கின்றன என்றால் பெற்றக் குழந்தையை தாயே கொலை செய்யும் கோரங்கள் நாள் தவறாமல் நடந்து கொண்டி ருக்கின்றன.

இந்தக் பெருமைக்குப் பலியாகின்றவர்கள், பெண் குழந்தைகள் தாம்.

அன்றைக்கு குழந்தைகளை அரபு நாட்டு மக்கள் பிறந்தவுடன் புதைத்தார்கள் என்றால் அது பெண்குழந்தைகளை அவமானம் என நினைத்தார்கள். அந்தக் காலக்கட்டத்தை இஸ்லாம் ஐயாமுல் ஜஹிலிய்யா அஞ்ஞான காலம், முட்டாள்களின் உலகம் எனப் பெயர் வைத்து அழைத்தது.

ஆனால் விஞ்ஞான உலகம், என அறியப்படுகின்ற இன்றைய நாள்களில் அது வறுமைக்குப் பயந்து நடக்கின்றது.

இதனால்தான் இஸ்லாம் ஆட்சி அதிகாரத்தைப் பெற்ற வுடன், குழந்தைகளின் உணவு உரிமைகள் பிரகடனப்படுத்தப் பட்டன. ஒரு பொது விதியாக தாயிடம் பால் குடிக்கும் பழக்கம் நின்றவுடன் குழந்தையின் நலனை பெற்றோர்கள் பாது காத்திட இயலவில்லை என்றால் அரசு பைத்துல்மால் பொறுப்பை ஏற்கும் என்றிருந்தது. பின்னர் இந்த நிலையையும் மாற்றிட வேண்டிய நிலை வந்தது மாற்றினார்கள்.

இந்த மாற்றமும் இஸ் லாமிய ஆட்சியின் தலைவர் உமர்(ரழி) அவர்களின் காலத்தில் தான் நடந்தது.

கலீபா உமர்(ரழி) அவர்கள் பெண்ணொருத்தியை எதிர் கொண்டார்கள். அந்தப் பெண் குழந்தை தாய்ப் பாலை மறந்திட செய்ய முயற்சி செய்து கொண்டிருப்பதைக் கண்டார்கள்.

தாயிடம் நடத்திய பேச்சில் அரசின் உதவிகளைப் பெற்றிடவே தான் தன் குழந்தையைப் பால் குடிமறக்கச் செய்ததாகக் கூறினார்கள்.

இது ஆட்சியாளர் உமர்(ரழி) அவர்களிடம் பயங்கர அதிர்வுகளை ஏற்படுத்தியது.

உடனேயே ஓர், அறிவிப்பைச் செய்தார்கள் அரசின் உதவிகள் பால் குடி மறந்த குழந்தைகளுக்கும் பால் குடித்துக் கொண்டிருக்கும் குழந்தைகளுக்கும் உண்டு என்பதே அந்த அறிவிப்பு.

இப்படி மக்களின் அவலங்களை அறிந்து அவற்றை அகற்றிட ஆவன செய்திடும் அரசைத் தான் மக்கள் நல்வாழ்வு கூறும் அரசு என ஏற்றிட இயலும்.

இந்த நல்லாட்சி இந்தியாவில் மலர வேண்டும் என ஆவலுற்றார்கள் காந்தியடிகள்.

**கலைஞர் சாதனை!**

உணவு பெறும் உரிமை என்ற பேச்சுவரும் போதெல்லாம் தமிழகத்தின் ஒரு கிலோ - அரிசி ஒரு ரூபாய் திட்டம் திறம்பட செயல்படுகின்றது என்பதை எல்லோரும் பாராட்டுகின்றார்கள்.

உண்மைதான் இந்தத் திட்டம் பல மக்களுக்கு வெகுவாகப் பயன்பட்டிருக்கின்றது.

கிராமப்புறங்களில் இந்தத் திட்டம் மக்களை பண்ணையார்களுக்கு உணவுக்காக அடிமைப்படும் நிலையிலிருந்து விடுவித்து மாற்றி இருக்கின்றது. உண்மையைச் சொன்னால் அவர்களுக்கு அலாதியானதொரு நெஞ்சுரத்தைக் கொடுத்திருக்கின்றது.

அதே போல் விவசாயிகளின் தற்கொலைகள் விவகாரத்திலும் கலைஞர் இருக்கும் முதலமைச்சர் களில் அவர்தான் விவசாயிகள் கடன்களை ரத்து செய்வதில் முன்னே நின்றார்.

ஆகவே ஒரு மாநிலத்தில் முடியும் என்பது எல்லா மாநிலத்திலும் முடியும்.

இது ஒன்றே இஸ்லாம் சொல்லும் இதர வழிகாட்டுதல்களும் இன்றைய நாள்களிலும் நிறைவாக நடைமுறைப்படுத்த முடியும் என்பதைப் பறைசாற்றும். இஸ்லாத்தின் வழிகாட்டுதல்கள் தாம் வறியவர்கள் விவசாயிகள் ஆகியோரைக் காக்கும் என்பன வற்றை அறைகூவல்களோடு வெளியிட்டிருந்தோம். வாசகர்கள் வைகறை வெளிச்சம் ஆகஸ்ட் 2008 இதழை வாங்கிப்படிக்கும் படி கேட்டுக் கொள்கின்றோம்.

**எம்.ஜி.எம்.**

# சர்வதேசிய ஒப்பந்தத்தின் பிரிவு.11

(Article 11 of International Covenant on Economic Social and Cultural Rights)

உலக அரங்கிலே உணவு பெறும் உரிமை 1966களில் தான் உருவம் பெற்றது.

பல ஆண்டுகால விவாதங்களுக்குப் பின்னர் உலகநாடுகளின் சபையால் 16 டிசம்பர் 1966 இல் ஓர் ஒப்பந்தம் கொண்டு வரப்பட்டது. (Covenant கட்டுப்படுத்தும் ஒப்பந்தம்) அது ஜனவரி 3, 1976 இல் ஏறத்தாழ 10 ஆண்டுகளுக்குப் பின் செயலில் வரும் என அறிவிக்கப்பட்டது.

இந்த சர்வதேச ஒப்பந்தம் இன்னும் செயலில் வரவில்லை என்பதை 10.8.2010 இல்-தனது தலையங்கத்தில் வருத்தத்துடன் தெரிவிக்கின்றது Thed Hindu பத்திரிக்கை.

இந்த ஒப்பந்தத்தில் உணவு பெறும் உரிமை Freedom From Hunger என சுட்டிக் காட்டப்படுகின்றது. பசியிலிருந்து விடுதலை. இந்த விடுதலையை அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக அறிவிக்க வேண்டும் என்றும் கூறுகின்றது.

ஆனால் இன்றளவும் இஃது செயலில் வந்திடவில்லை. இஸ்லாம் ஆட்சி செய்த இடங்களில் அமர்த்தப்படுவோரின் முதல் உரிமையே இது என்கின்றது.

இந்த உரிமையை நமது உலக நீதிமன்றம் பலமுறை இஸ்லாத்தையும் இஸ்லாமிய ஆட்சியையும் சுட்டிக்காட்டியே கூறி இருக்கின்றது. 'Islamic Juris prudence by C.G. Veeramantry'.

இஸ்லாமிய ஸ்பெயினிலிருந்து அமெரிக்காவும் ஐரோப்பாவும் பெற்ற முதல் பாடமே இதுதான் என அமெரிக்காவின் வாழ்வுக்கு வழிகாட்டிய முன்னாள் குடியரசுத் தலைவர் John F. Kennedy குறிப்பிட்டார் தன்னுடைய வாஷிங்டன் D.C. உரையில் (The Glory and Burden : By: John F. Kennedy)

# முஸ்லிம் மாணவர்களுக்கு அரசு வழங்கும் உதவிகள் வழிமறிக்கும் அதிகார வர்க்கம்?

முஸ்லிம்களின் ஆதங்கங்களில் நியாயங்கள் நிரம்பவே உண்டு என்பதை காங்கிரஸ் அரசு உணரவே செய்கின்றது.

இதை நாம் சிறுபான்மையினருக்கென மத்திய அரசு ஓர் அமைச்சரகத்தைத் தொடங்கியதிலிருந்து புரிந்து கொள்ளலாம். அதனை மைனாரிட்டிகளின் விவகாரத்துறை அமைச்சகம் என்றழைக்கலாம்.

இந்த அமைச்சகத்தின் வழியாகவும், அதே போல் மத்திய மாநில அரசுகள் நேரடியாகவும் சிறுபான்மையினருக்கு பல நல்வாழ்வுத் திட்டங்களை அறிவித்து வருகின்றது.

இப்படி அறிவிக்கப்பட்ட திட்டங்களுள் ஒன்றுதான் முஸ்லிம் மாணவர்களுக்கு அரசு வழங்கிடும் (Scholarships) என்ற கல்வி ஊக்கத்தொகை. இது கடன் அல்ல.

ஆனால் இந்த ஊக்கத் தொகையை வங்கிகள் வழியாகத்தான் அரசு மாணவர்களுக்கு கிடைக்கச் செய்கின்றது.

இதனால் மாணவர்கள் இந்தக் கல்வி ஊக்கத் தொகையைப் பெறுவதற்கு வங்கிகணக்கொன்றை அவசியம் திறந்தாக வேண்டும்.



இந்த நிபந்தனையை நமது அதிகாரவர்க்கம் வாகாய் பயன்படுத்திக் கொள்கின்றது. ஆமாம்! முஸ்லிம் மாணவர்களுக்கு நமது அரசு வழங்கிடும் இந்த ஊக்கத் தொகையை எப்படியும் மறுத்தாக வேண்டும் என்பது அவர்களின் முடிவு. அதற்கிருக்கும் எளிதான வழி முஸ்லிம் மாணவர்கள் வங்கிகளில் கல்வி ஊக்கத் தொகையைப் பெறுவதற்காக கணக்கு என வந்தால் அதை மறுத்துவிடுவது.

இப்படி கொஞ்சம் நஞ்சமல்ல 90,000/= ஏறத்தாழ ஒரு லட்சம் மாணவர்களுக்கு வங்கி கணக்கை மறுத்திருக்கின்றார்கள். இது ஆந்திராவில் மட்டும் நடந்த அநீதி.

பீகார் மாநிலத்திலும் இதுவே நடந்திருக்கின்றது. அங்கே 50,000/= அரை லட்சம் மாணவர்களுக்கு வங்கி கணக்குகள் மறுக்கப்பட்டுள்ளன.

ஆந்திர மாநில முஸ்லிம்கள் மிகவும் அறிவுபூர்வமாகக் காய்களை நகர்த்துவார்கள். மொத்த முஸ்லிம்களும் ஓர் உறுதியான சமூதாய அமைப்பாக வாழ்ந்து வருகின்றார்கள்.

அதனால் அவர்கள் எல்லாத்துறைகளிலும் மிகவும் வேகமாக முன்னேறி வருகின்றார்கள்.

ஆந்திர முஸ்லிம்கள் முன்னேறி வருகின்றார்கள் என்றால் அது ஒரு பெரும் எதிர்நீச்சல்.

முஸ்லிம் இளைஞர்கள் ஆந்திர மாநிலத்தில் பயங்கரமான கெடுபிடிகளுக்கு உள்ளாக்கப்பட்டார்கள்.

பல முஸ்லிம்கள் இளைஞர்கள் என்கவுண்டர் என்ற பெயரால் காவல்துறையினரால் கொலை செய்யப்பட்டார்கள்.

நமது உளவுத்துறை இரண்டு போலி அமைப்புகளை ஆந்திர மாநில முஸ்லிம்களின் பெயரால் தொடங்கியது.

ஒன்று இந்திய முஜாஹிதீன்கள், இன்னொன்று டெக்கான் முஜாஹிதீன்கள்.

இந்த அமைப்புகளின் பெயரால் ஆலிம்கள், மதரஸா என்ற அரபுக் கல்லூரி மாணவர்கள், நன்றாக கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் பாமர முஸ்லிம்கள் இப்படி எண்ணற்றோரை கைது செய்தது. ஒரு பெரும் பகுதியினரைக் கொலை செய்தது.

பலநூறு முஸ்லிம் இளைஞர்கள் எந்த விசாரணையுமின்றி, பத்தாண்டுகள் சிறையில் அடைக் கப்பட்டார்கள்.

ஆர்பாட்டம், போர்ப் பாட்டங்களின்றி ஆந்திர வழக் கறிஞர்கள் நீதிமன்றங்களின் வழியாகவே இந்த இளைஞர்களை மீட்டார்கள். இந்த இளைஞர்களுக்கு அரசிடம் இழப்பீடும் வாங்கித் தந்தார்கள்.

'YSR' என்ற இராஜ சேகர ரெட்டி அவர்கள், முதலமைச்சராக இருந்த வரை இந்த இழப்பீடுகளைத் தயக்கமின்றி தந்தார்கள். (இதற்காகவே, அவர் இறந்தபோது நாம் அவரது சேவைகளைப் பாராட்டி வைகறை வெளிச்சத்தில் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தோம்) அல் ஹம்ந்துலில்லாஹ். பார்க்க வைகறை வெளிச்சம்.

ஆந்திர முஸ்லிம்கள், அநியாயத்திற்கும்,அழிவுக்கும் உள்ளாக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்களுக்காகவும் முஸ்லிம் குடும்பங்களுக்காகவும், நீதிமன்றங்களில் போராடிக் கொண்டிருந்த போது வங்கிகளும் அதன் அதிகாரிகளும் செய்த துரோகங்களைக் கண்டு கொள்ள அவர்களால் முடியவில்லை.

அநீதிகளுக்கு ஓரளவு நீதி கிடைக்கவே, அவர்கள் மாணவர்கள் பக்கம், தங்கள் கவனத்தை திருப்பினார்கள். அப்போதுதான் 90,000 மாணவர்கள் வங்கி அதிகாரிகளால் ஏமாற்றப் பட்டிருக்கின்றார்கள் என்ற உண்மை வெளிச்சத்திற்கு வந்தது. உடனேயே இந்த அநீதிக் கெதிராகத் தங்கள் போராட்டத்தை திருப்பினார்கள்.

வழக்கம் போல் சட்டப் படியான நடவடிக்கைகள்தாம். முஸ்லிம் மாணவர்களுக்கு வங்கிக் கணக்குகளை மறுத்த அதிகாரிகள் ஏன் மறுத்தார்கள்? என்பதை ஆய்வு செய்தார்கள். அதிகார வர்க்கம் முஸ்லிம் மாணவர்கள் அந்த உதவிகளைப் பெறுவதிலிருந்து தடுக்கவே இதைச் செய்தார்கள் என்பதைக் கண்டு கொண்டார்கள். நாட்டிலிருக்கும் வங்கிகளையெல்லாம் கட்டியாளும் தலைமை வங்கியாம் ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியாவிடம் முறையிட்டார்கள்.

ரிசர்வ் பேங்க் ஆஃப் இந்தியா ஆந்திராவிலுள்ள வங்கிகளுக்கு ஆணை ஒன்றைப் பிறப்பித்தது. அதில் வங்கிக் கணக்குகளை முஸ்லிம் இளைஞர்களுக்கு திறப்பதில் வீணான சாங்கியங்களைப் புகுத்த வேண்டாம் எனக் கூறியது.

ஆனால் அதிகார வர்க்கம் விட்டுக்கொடுக்கவில்லை. வேறு சில "சாக்குப் போக்குகளைச்" சொன்னது.

இந்த முறை சிறுபான்மையினர் நல்வாழ்வு அமைச்சகத் திற்கும், சிறுபான்மையினர் ஆணையத்திற்கும் புகார்களை அனுப்பிக் கொண்டு இருக்கின்றனர் ஆந்திர முஸ்லிம்கள்.

பீகாரிலும் இதுவே நடந்தது. அங்கே 50,000 அரை லட்சம் மாணவர்களுக்கு இந்த அநியாயம் நடந்துள்ளது. அங்கேயுள்ள முஸ்லிம்களும் ஆந்திர முஸ்லிம் களோடு சேர்ந்து மத்திய ரிசர்வ் வங்கிக்கும், சிறுபான்மையினர் நலவாழ்வு அமைச்சகத்திற்கும், ஆணையத் திற்கும் புகார்களை அனுப்பி உள்ளார்கள்.

இந்தப் பெரும் அநீதிகளுக் கெதிராக நடக்கும் இந்தப் போரிலும் அவர்கள் வெற்றி பெற வேண்டும் (இன்ஷா அல்லாஹ்)

டாக்டர் மன்சூர் ஆலம் அவர்கள் ஐ.ஓ.எஸ். இன்ஸ்டிடியூட் ஆஃப் அப்ஜெக்டிவ் ஸ்டடீஸ் என்ற ஆய்வுக் கழகத்தையும், மில்லி கவுன்சில் என்ற மக்கள் அமைப்பையும் அமைத்து இஸ்லாமிய பணிகளையும் முஸ்லிம்களின் நல்வாழ்வுப் பணிகளையும் ஒருசேர செய்து வருகின்றனர். டாக்டர் மன்சூர் ஆலம் அவர்கள் முஸ்லிம் மாணவர்களுக்கெதிராக நடக்கும் இந்த அதிகார வர்க்கத்தின் அநீதிகளை மிகையாக எதிர்த்து வருகின்றார்கள்.

இதில் இப்போது நாடெங்கும் பத்திரிகையாளர்கள் சந்திப்புக்களை நடத்தி, இந்த அநீதியை வெளிச்சம் போட்டு வருகின்றார்கள்.

நடக்கும் அநியாயத்தை மத்திய மாநில அரசுகளுக்குத் தெளிவுபடுத்தி வருகின்றார்கள்.

இப்படி பல வகையாலும் இந்த அநியாயம் எதிர்க்கப் பட்டு வருகின்றது.

**எம்.ஜி.எம்.**

# அப்துல் நாசர் மதானி கைது ஏன்?



குஜராத் - இல் ஷேராப் தீன் என்ற முஸ்லிம் தன வந்தரும் அவருடைய மனைவி கவ்சர்பீவி என்ற வீராங்கனையும் கொலை செய்யப்பட்டார்கள்.

கொலையைச் செய்தது குஜராத் காவல்துறையினர். எல்லா திட்டங்களையும் போட்டுத் தந்தவர் அமித்ஷா என்ற நரேந்திர மோடியின் ஆருயிர் தோழர். இவர் குஜராத்தின் உள்துறை அமைச்சர்.

குஜராத்-இன் உள்துறை அமைச்சர் கைது செய்யப்பட்டவுடன் இந்துத்துவ தீவிராதத்தின் இன்னொரு முகம் வெளிச்சத்திற்கு வந்தது.

குஜராத்தில் அரசு இயந்திரமே கடந்த பத்து ஆண்டுகளாக அப்பாவி முஸ்லிம்களுக்கெதிராக செயல்பட்டிருக் கின்றது.

ஊடகங்களில் இந்தச் செய்தி மிகவும் பிரபலமாகவே மொத்த இந்துக்களும் தலை குனிந்திடும்நிலை. இந்துத்துவ தீவிரவாதிகள் பேசும் கொள்கைகள் இந்தியாவிற்கெதிரானவை. என்பதை நாட்டு மக்கள் புரிந்து கொண்டார்கள்.

ஷேராப்தீன் போன்ற பல முஸ்லிம்களின் படுகொலைக்குக் காரணமான தீவிரவாத அமைச்சர் அமித்ஷா கைது செய்யப்படுவதற்கு முன் மூன்று நாள்கள் தலைமறைவாக இருந்தார்.

தீவிரவாதி அமைச்சர் அமித்ஷா தலைமறைவாக இருந்த மூன்று நாள்களும் ஊடகங்கள் செய்திகளை வெளியிடவேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாகின. மொத்தத்தில் இந்துத்துவ தீவிரவாதம் பாரெங்கும் பளிச்சிட்டது.

அதே போன்றதொரு நிலையை ஏதேனும் ஒரு முஸ்லிம்-ஐ சுற்றி ஏற்படுத்திட வேண்டும் என்பது குஜராத் முதலமைச்சர் மோடியின் விருப்பம். உடனே இந்தச் செய்தியை தனது உற்ற நண்பர் கன்னட முதலமைச்சர் எடியூரப்பாவிடம் தெரிவித்தார்.

ஏற்கெனவே கணன்று கொண்டிருந்த 2008 கன்னட மாநில தொடர் குண்டுவெடிப்போடு அப்துல் நாசர் மதானியைத் தொடர்பு படுத்தினார்கள்.

நமது உளவுத்துறையும், காவல்துறையும் ஒருவரைக் குண்டு வெடிப்போடு தொடர்பு படுத்திட வழக்கமாகச் கை யாளும் முறையையே இங்கேயும் கடைபிடித்தனர்.

ஆமாம்! குண்டு வெடிப்பில் சம்மந்தப்பட்ட குற்றவாளி ஒருவரிடம் வாக்கு மூலம் வாங்கி விடுவது. ஆனால் இங்கே அப்துல் நாசர் மதானிக்கு எதிராக வாக்குமூலம் வழங்கிய தாகக் கூறப்படும் நசீர் என்பவர் தான் மதானியை எங்கேயும், எப்போதும் சந்திக்கவில்லை என்றே கூறி இருக்கின்றார்.

அதே போல் குண்டு வெடிப்புகளுக்கு மையமாக அமைந்த கொடுகு பகுதிக்கு தான் எப்போதும் சென்ற தில்லை என்பதையும் நாசர் மதானி தெளிவுபடுத்தி இருக்கின்றார். நாசர் மதானியின் மனைவியையும் இதில் வம்பிற் கிழுத்துள்ளார்கள்.

கோயம்புத்தூர் குண்டு வெடிப்புகளிலும் தான் இப்படித் தான் குற்றம் சுமத்தப் பட்டேன். பின்னர் நிரபராதி என முற்றாக

விடுவிக்கப் பட்டேன் என்பதை யும் அதே போல் இந்த வழக்கும் பொய்யானது. நான் நிரபராதி என்பதை நிரூபிப்பேன் என்றும் நாசர் மதானி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

உளவுத்துறைகளின் சதிதான் இந்த வழக்கு.

கோவை குண்டு வெடிப் பில் நான் விடுவிக்கப்பட்டது உளவுத்துறைக்குப் பிடிக்க வில்லை. அதனால்தான் என் னை கன்னடாவில் நடந்த குண்டு வெடிப்புகளோடு சம்மந்தப் படுத்துகின்றார்கள் என்றும் கூறியுள்ளார் நாசர் மதானி.

மூன்றுபேரின் உதவி இல்லாமல் நான் எங்கேயும் செல்லமுடியாது. இந்நிலையில் நான் கொடுடு பகுதிக்குச் சென்றேன் என்பது ஜமுக் காளத்தில் வடிகட்டியப் பொய் என்றும் கூறினார்.

நாசர் மதானியின் கூற்று களோடு இன்னொன்றையும் இணைத்திட வேண்டும். அது அமித்ஷா விவகாரத்ததிற்குப் பின் முஸ்லிம்களில் ஒருவரை மூன்று அல்லது நான்கு நாள்களில் தீவிரவாதியாகக் காட்டிட வேண்டும் என்ற சதித் திட்டந் தான் இங்கே செயல்படுத்தப் பட்டுக் கொண்டிருக்கின்றது, அல்லாமல் வேறில்லை!

இதனால்தான் 15 நாள் களுக்குமுன் கன்னடாவில் பெறப்பட்ட கைது வாரண்டைப் பற்றிய எந்தத் தகவலையும் கேரள போலீசுக்குச் சொல்லவில்லை. கன்னடக் காவலல் துறை.

அதே போல் நாசர் மதானி யைக் கைதுசெய்யப் போகின் றோம் என ஆகஸ்ட், மாதம் 11ஆம் நாள் (2010) கேரளா வந்த கன்னட காவல்துறையினர் எதையும் செய்யாமலும் கேரள காவல் துறையைத் தொடர்பு கொள்ளா மலும் ஊடகங்களில் செய்தியாக்கி கொண்டிருந்தார் கள். இதனை ஐந்து நாள்களாகச் செய்து கொண்டிருந்தனர். இவர்கள் ஒரு நாடகத்தை நடத்திக் கொண்டி ருக்கின்றார்கள் என்பதை வீரேந் திரகுமார் என்ற நாடாளுமன்ற உறுப்பினர் வெளிப்படையாகவே சொல்லி இருக்கின்றார். இறுதி யாக இவர்கள் ஆகஸ்ட் 17இல் மதானியைக் கைதுசெய்த போது தி டைம்ஸ் ஆஃப் இந்தியா என்ற பத்திரிகை இப்படி தலைப்பிட்டு எழுதியது "After week long drama Madani is arrested taken to Bangalore". அதாவது "ஒரு வாரம் நீண்ட நாடகத்திற்குப் பின் மதானி கைது செய்யப்பட்டார். பெங் களூர் கொண்டு செல்லப் பட்டார்."

இந்தப் பின்னணியில் செய்தி களை அறியத் தவறினால் நாம் நீதியைப் பெற்றிடும் வாய்ப்புக் களை இழந்திடுவோம்.

இத்தோடு இந்நாட்டு குடி மக்கள் அனைவரும் ஒன்றை அடிப்படையில் புரிந்திட வேண் டும். இந்தியாவில் 'தேசியம்' என்ற பெயரில் ஒரு பெரும் சூழ்ச்சிகளும் சதித் திட்டங்களும் நிறைவேறிக் கொண்டிருக் கின்றன. இதில் உளவுத் துறை யிலுள்ள கறுப்பாடுகள் செயல் களத்திலுள்ள ஊடகங்கள் அதற்கு துணைநிற்கின்றன.

இந்த அடிப்படைகளை மனதிற் கொண்டு நமது போரும், பயணமும் அமைந்திட வேண் டும்.

**எம்.ஜி.எம்.**



## தலைநகர் டில்லியில் கர்கரே நூல்!

22.9.2010 அன்று தலைநகர் டில்லியில் கான்ஸ்டிடியூசன் கிளப்பில் "கர்கரேயை கொலை செய்தது யார்?" என்ற நூல் பல மொழிகளில் வெளியிடப்பட்டது.

ஆங்கிலம் (நான்காம் பதிப்பு), தமிழ் (மூன்றாம் பதிப்பு), கன்னடம், மராட்டி, குஜராத்தி, மலையாளம், உருது ஆகிய மொழிகளில் வெளியிடப்பட்டன.

இதில் வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது, ராஷ்டிரிய சஹாரா ஆசிரியர் அஜீஸ் புஸ்னி, நூலாசிரியர் எஸ்.எம். முஷ்ரிப், முன்னாள் எம்.பி. சையத் சஹாபுத்தின், சுரேஷ் கந்தியார் (பி.யூ.சி.எல்.) தேஜ்சிங் (அம்பேத்கர் பேரவை), மில்லி கெஜட் ஆங்கில இதழின் ஆசிரியரும் கர்கரே நூலின் ஆங்கில வெளியீட்டாளருமான டாக்டர் ஜஃபருல் இஸ்லாம் கான் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# ஆசிரியர்களால் வாழ்க்கை இழக்கும்
# தலீத் மாணவர்கள்

எந்த நிலையிலும் தலீத் மக்களை அறிவுத்துறையில் முன்னேறிட விடக் கூடாது என்பது இந்திய சமுதாய அமைப்பின் தீர்க்கமான முடிவு.

இந்த முடிவைச் செயல் படுத்திட அவர்கள் எத்துணை அளவு வேண்டுமானாலும் கீழே இறங்குவார்கள் கேவலமாகச் செயல்படுவார்கள்.

அண்மையில் தலீத் மாணவர்களுக்கு நடந்த மாபெரும் அநீதி ஒன்றை இந்தியன் எக்ஸ்பிரஸ் பத்திரிகை வெளிப்படுத்தி யுள்ளது.

ஆமாம் தலீத் மாணவர்களின் கல்வி கற்றிட இயலாத நிலையிலிருந்து அவர்களை மீட்டிட அரசு உதவித் தொகையை வழங்கி வருகின்றது.

இந்த உதவித் தொகை யை ஆசிரியர்கள் கையெழுத்துப் போட்டு வாங்கிக் கொள்கின்றார்கள். மாணவர்களை ஏமாற்றி விடுகின்றார்கள்.

இந்தப்பாதகம் திருவண்ணாமலை மாவட்டத்தில் கால காலமாக நடந்து வருகின்றது.

தலீத் மாணவர்களின் கல்வி உதவித் தொகையை ஆசிரியர்கள் கொள்ளை அடித்திடும் போது இந்த மாணவர்களின் பெற்றோர்கள் கொத்தடிமை வேலைகளுக்குத் தங்களை அடிமையாக்கி தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முயற்சி செய்கின்றனர்.

இப்படிக் கொத்தடிமைகளாகத் தங்களை அடிமைப் படுத்திடவும் வகையில்லாதவர்கள், வட்டிக்குக்கடன் என்ற பெயரில் தண்டல் வட்டிக்காரர்களிடம் வகையாக சிக்கிக் கொள்கின்றார்கள்.

இதுவும் எல்லா தலீத்களுக்கும் முடிவதில்லை. இதனால் அவர்கள் தங்கள் பிள்ளைகளின் படிப்பை நிறுத்தி விட்டு அவர்களை வேலைக்கு அனுப்பி வயிறு கழுவும் நிலை.

Right to Education கல்விப் பெறும் உரிமை இளம் வயதினருக்கு ஓர் அடிப்படை ஆக்கப்பட்ட நிலையில் இத்தகையதொரு அநியாயம் நடப்பது வெட்கக் கேடானது.

இதில் இன்னும் கொடுமையான விஷயம் என்னவெனில் ஆதிராவிட நலத்துறை இவற்றைக் கண்டும் காணாததைப் போலிருப்பது தான்.

மாணவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடமும் புகார் செய்துள்ளார்கள். எந்த பயனுமில்லை. அதே போல் தலீத் மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் கருப்பையாஅவர்கள், தேசிய பட்டியல் ஜாதி மக்களின் ஆணையத்திற்கும் ஓர் புகாரை அனுப்பி இருக்கின்றார். எதிலும் எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

இந்தக் கொடுமைகளுக்கெல்லாம் மகுடம் சூட்டியதைப் போல் ஓர் நிகழ்வு. அதே திருவண்ணாமலையில் பெருமாள் (17) என்ற மாணவனின் தந்தை சிவா 2002 ஆம் ஆண்டே இறந்து விட்டார். 2008ஆம் ஆண்டு அவருடைய கையெழுத்து என்று ஒரு கை யெழுத்தைப் போட்டு அந்த மாணவனுக்குரிய பணத்தைக் கையாடல் செய்துள்ளார்கள்.

இப்படி அவனுடைய பணம் கையாடல் செய்யப் பட்டுக் கொண்டிருக்கும் போது அவன் படிப்பை நிறுத்திவிட்டு மாடு மேய்த்துக்கொண்டிருக்கின்றான்.

என்னே அநியாயம்!

தைரியம்

இவ்வளவு அநியாயங்களையும் எப்படி? எந்த நெஞ்சுரத்தோடு இவர்களால் செய்ய முடிகின்றது?

சிக்கிக் கொள்வோம், சிக்கிக் கொண்டால் நமது வேலையே பறிபோகும் என்ற எண்ணங்கள் அச்சங்கள் எப்படி இவர்களுக்கில்லாமல் போய் விட்டது?

காரணம், தனக்கு மேலிருக்கும் மேல் ஜாதியினர் ஏதேனும் ஒருநிலையில் தங்களைக் காப்பாற்றுவார்கள். நாம் அநியாயம் செய்வது தலீத் மக்களுக்குத்தானே, அவர்களால் என்ன செய்ய முடியும் என்ற எண்ணங்களே! இவர்கள் தகுந்த தண்டனைகளுக்குள்ளாகும் போதே தலீத் மக்கள் நல்வாழ்வுத் திட்டங்கள் மக்களைச் சென்றடையும்.




மைக்ரோசாப்ட் வேர்டில் அடுத்து உள்ள மிக முக்கியமான மெனு Page Lay Out மெனுவாகும்.



அந்த மெனுவில் உள்ள Margin,Orientation, Size, Column,Page Border, Indent, Spacing, Bring to front, Send to back, Allign, Group, Text wrapping போன்றவை மிக முக்கியமான கருவிகளாகும்.

மார்ஜின் என்பது உங்களுடைய டாகுமெண்டில் வலதுபுறம் எவ்வளவு இடம் விட வேண்டும் இடது புறம் எவ்வளவு இடம் விட வேண்டும் என்பதை நிர்ணயிக்க உதவும்.

உதாரணத்திற்கு நீங்கள் உங்களுடைய டாகுமெண்டின் இடது புறம் ஒன்றரை அங்குலம் மார்ஜினும் வலது புறம் ஒரு அங்குலம் மார்ஜினும் விட விரும்பினால் Margin என்பதை தேர்வு செய்யுங்கள். அதில் வரக்கூடிய மெனுவில் சில தயாராக உள்ள மார்ஜின்களை காட்டிடும்.



அந்தந்த மார்ஜின் Readymade களுக்கு நேராக நீங்கள் எதிர்பார்க்கும் அளவு உள்ளதா என்பதை சரிபார்த்து கொள்ளுங்கள். அப்படி இல்லையெனில் Custom Margins என்பதை தேர்வு செய்யுங்கள்.

பின்வரக்கூடிய மெனுவில் உங்களுக்கு தேவையான அளவுகளை தேர்வு செய்யுங்கள். அல்லது டைப் செய்யுங்கள்.



அதாவது Top Margin உங்கள் டாகுமெண்டில் மேலிருந்து எவ்வளவு இடம் விட வேண்டும் Left Margin கீழிருந்து எவ்வளவு இடம் விடவேண்டும் Right Margin வலமிருந்து Left Margin இடமிருந்து எவ்வளவு இடம் விடவேண்டும் என்பதை தேர்வு செய்து கொள்ளலாம்.

அடுத்ததாக அதே கட்டத்தில் மேலே தெரியக்கூடிய பேப்பர் என்பதை தேர்வு செய்து நீங்கள் டைப் செய்யப்போகும் அல்லது பிரிண்ட் எடுக்கப் போகும் தாளின் அளவினை தேர்வு செய்யலாம்.





இதை மார்ஜின் என்ற மெனுவிற்கு அடுத்தாக உள்ள Size என்ற மெனுவின் மூலமும் செய்யலாம். Size என்ற மெனுவை தேர்வு செய்து நீங்கள் டைப் செய்யப்போகும் தாளின் அளவினை தேர்வு செய்தால் போதும்.

அதே போல் உங்கள் டாகுமென்டில் நீங்கள் நீளவாக்காக டைப் செய்யப் போகிறீர்களா அல்லது அகலவாக்காக டைப்செய்யப் போகிறீர்களா என்பதை தேர்வு செய்ய Orientation என்பதை தேர்வு செய்து அதில் தெரிகிற Landscape Portrait என்பதில் ஏதாவது ஒன்றை தேர்வு செய்வதன் மூலம் செய்யலாம்.




Column என்பது உங்கள் டாகுமென்டை எத்தனை கூறுகளாக பிரிக்க வேண்டும் என்பதை நிர்ணயிக்க உதவும். உதாரணத்திற்கு இந்த கம்ப்யூட்டர் கட்டுரை இரண்டு கலங்களாக பிரிக்கப்பட்டுள்ளன. நீங்கள் சில பத்திரிக்கைகளையும் பார்த்திருக்கலாம். அவற்றில் மூன்று கலங்கள் நான்கு கலங்கள் என வெவ்வேறு பத்திரிக்கைகளில் வெவ்வேறு விதமாக வரப் பார்த்திருக்கலாம். நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் Column தேர்வு செய்து பின்னர் எத்தனை கலங்கள் தேவை என்பதை தேர்வு செய்யுங்கள். அவ்வளவு தான்.






More Column என்பதில் கலங்களுக்கு இடையே உள்ள அளவுகள் போன்றவற்றை தீர்மானிக்கலாம்.

அடுத்ததாக உள்ள Break என்ற மெனுவின் மூலம் நீங்கள் விரும்பிய இடத்தில் பக்கத்தை முடித்துக் கொண்டு புதிய பக்கத்தை ஆரம்பிக்கலாம்.

ஒருவேளை உங்கள் டாகுமெண்டில் Columnகளை உபயோகப்படுத்தி இருந்தால் Column Break செய்யலாம்.

நீங்கள் டைப் செய்யும் டாகுமெண்டிற்கு ஒவ்வொரு வரிக்கும் வரி எண் (Line Number) வேண்டுமென்றால் Line Number என்ற Optionல் சென்று Continuous என்று வைத்துக் கொள்ள வேண்டும். Restart Each page என்ற Option மூலம் ஒவ்வொரு பக்கம் முடிந்ததும் தொடர்ச்சியாக எண் வரும்படி செய்திடலாம்.



Hyphenation என்பதில் Automatic என்று தேர்வு செய்தால் உங்களுடைய டாகுமெண்டில் நீங்கள் டைப் செய்யும் போது ஒவ்வொரு வரியின் கடைசியிலும் பெரிய வார்த்தைகள் வரும் போது அதை இரண்டாக பிரித்து நாம் நடைமுறையில் அவ்வாறு பிரிக்கும் போது எவ்வாறு ஒரு சிறிய கோட்டை கடைசியில் போடுவோமோ அதைப்போன்று போட்டுக் கொள்ளும்.

Watermark என்ற மெனுவில் சென்று உங்கள் டாகுமெண்டில் நீங்கள் டைப் செய்யக்கூடிய வார்த்தைகளுக்கு பின்னால் நீங்கள் விரும்பக்கூடிய ஏதாவது ஒரு வார்த்தையை நீர்எழுத்துப் போல் போட்டுக் கொள்ளலாம்.

Custom watermarkல் சென்று Textwatermark என்பதை தேர்வு செய்து நீங்கள் விரும்பிய வார்த்தையை டைப் செய்து அந்த வார்த்தையை நீரெழுத்தாகப் பயன்படுத்தலாம்.

Page colour என்பது உங்கள் டாகுமென்டின் பின்னணி என்னவாக வைத்துக் கொள்ளப் போகிறீர்கள் என்பதை தேர்வு செய்ய உதவும். உதாரணத்திற்கு நீங்கள் உங்கள் டாகுமெண்டின் பின்னணி நிறம் ஊதாவாக வைக்க விரும்பினால் Page colour என்பதை தேர்வு செய்து ஊதா நிறத்தை தேர்வு செய்தால் போதுமானது.




அதே Page colour என்பதில் Fill Effects என்பதை தேர்வு செய்தால் பல்வேறு விதமான



கலர்களை Mix (கலந்து) செய்து நிரப்பிக் கொள்ளலாம்.

Fill Effectல் Gradient, Texture, Pattern, Picture என்ற நான்கு உப தலைப்புகள் உள்ளன.



Gradient ல் சென்றால் இரண்டு நிறங்களை கலந்து உங்கள் டாகுமெண்டில் நிரப்பிக் கொள்ளலாம். இதுவே டெக்ஷர் என்பதை தேர்வு செய்தால் உங்களுக்கு தேவையான பின்வரும் படத்தில் உள்ளது போன்ற டெக்ஷர்களை நிரப்பிக் கொள்ளலாம். அதே போல் பாட்டர்ன் என்பது விரும்பிய நிறத்தில் கீழே உள்ளது போல் பாட்டர்ன்களை உரு வாக்கவும் Picture என்பது படங்களை கொண்டு நிரப்பவும் உதவும்.



படங்களை கொண்டு நிரப்ப தேவையான படத்தினை தேர்வு செய்ய வேண்டும். அதற்கு செலக்ட் பிக்சர் என்பதை தேர்வு செய்து கம்ப்யூட்டரின் உள்ளே சென்று தேவையான படத்தினை தேர்வு செய்ய வேண்டும்.



குறிப்பு : இவ்வாறு நிரப்பப் படும் நிறமோ, பாட்டர்னோ, டெக்ஷரோ அல்லது படமோ உங்கள் டாகுமெண்டை பிரிண்ட் செய்யும் போது பிரிண்டில் வராது.




அடுத்ததாக உள்ளது Page Borders என்ற மெனு. இது உங்களுடைய பக்கத்தை சுற்றி எந்த விதமாக அழகுபடுத்துவது என்பதற்கு உதவும். உங்களுக்கு தேவையான Style, Colour தேர்வு செய்யுங்கள். Page Borderன் அகலம் எவ்வளவு இருக்க வேண்டும் என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் Preview என்பதற்கு கீழே உள்ள கோடுகளில் தேவையான கோடுகளை தேர்வு செய்யுங்கள். இவை முறையே இடது வலது மேல் கீழ் கோடுகளை உங்களுடைய பக்கத்தை சுற்றிப் போடுவதற்கு உதவும். Border கோடாக இல்லாமல் அழகான வரைபடங்களாக வேண்டுமெனில் Art என்பதை தேர்வு செய்து வேண்டிய படத்தை தேர்வு செய்யுங்கள். அவ்வளவு தான் உங்கள் டாகுமெண்டை சுற்றி அழகான பார்டர் வந்துவிடும்.

பார்டர் டாகுமெண்டின் மேற்புறத்தில் எவ்வளவு தூரத்தில் இருந்து வரவேண்டும் கீழ் புறத்தில் எவ்வளவு தூரத்தில் இருந்து வரவேண்டும் இன்னும் வலது இடது புறங்களிலும் எவ்வளவு தூரத்தில் இருந்து வரவேண்டும் என்பதை Option என்ற பட்டனை தேர்வு செய்வதன் மூலம் செய்யலாம்.

Shading என்ற Tab ஐ தேர்வு செய்து உங்களுடைய பார்டருக்குள்ளே தேவையான நிறத்தை நிரப்பிக்கொள்ளலாம். இந்த பார்டரும் நிறமும் பார்வைக்கு மட்டுமல்ல. இவை பிரிண்டிங்கில் வரும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

அடுத்தததாக Page Layout மெனுவில் உள்ள Intend என்பது உங்களுடைய பத்தி (Paragraph) வல இட புறங்களில் எவ்வளவு இடம் தள்ளி ஆரம்பிக்க வேண் டும் என்பதை தேர்வு செய்ய உதவும்.

Spacing before after என்பது உங்களுடைய பத்தி ஆரம்பிக்கு முன் அல்லது முடிந்தவுடன் எவ்வளவு இடைவெளி விட வேண்டும் என்பதை நிர்ணயிக்க உதவும்.

Text wraping என்பதை பற்றி ஏற்கனவே சொல்லியுள்ளோம். ஒரு படத்தை அல்லது ஏதாவது ஒரு வரைபடத்தை உங்கள் டாகுமெண்டில் நீங்கள் டைப் செய்துள்ள இடத்தில் வைக்கும் போது அந்த டைப் செய்துள்ள வாசகங்களை அந்த படத்தை சுற்றி எவ்வாறு வர வேண்டும். அதாவது அந்தப் படத்தை சுற்றி வர வேண்டுமா, டைப் செய்துள்ள வாசகங்களுக்கு மேலே வரவேண்டுமா அல்லது கீழே வரவேண்டுமா




போன்றவற்றை தீர்மானிக்க உதவும். இது ஒரு மிக முக்கியமான டூல். உதாரணத்திற்கு இந்த கட்டுரை யில் உள்ள பல படங்கள் text wrap என்பதை உபயோகப்படுத்தி வைக்கப் பட்டுள்ளன. அதிலும் குறிப்பாக Square என்ற option ஐ உபயோகப்படுத்தி வைக்கப் பட்டுள்ளன. இந்த Optionஐ தேர்வு செய்யும் போது அதுவே அழகாக சதுர வடிவில் நாம் டைப் செய்தவற்றை அந்த படத்தை விட்டு தள்ளி அமைத்து கொடுக்கும்.

ஒன்றுக்கும் மேற்பட்ட படங்கள் ஒன்றின் மேல் ஒன்றாக இருக்கின்றன. அதில் எது மேலே இருக்க வேண்டும் எது கீழே இருக்க வேண்டும் என்பதை தீர்மானிக்க Send to Back Bring to front போன்ற Optionகள் உதவும்.

பல படங்களோ பல பொருட்களோ உங்கள் டாகுமெண்டில் உள்ளன. அவற்றை ஒரே நேர்கோட்டிலே அல்லது நடுவிலோ இவ்வாறு விரும்பும் வடிவில் align செய்ய align tool உதவுகிறது. இதற்கு ஒரே விதமான நேர் கோட்டில் அமைக்க விரும்பும் படங்களை Shift கீயை அழுத்தி கொண்டே மௌஸைக் கொண்டு தேர்வு செய்யுங்கள். பின்னர் align என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் வருகின்ற மெனுவில் வலப்புறமாக அனைத்தையும் வரிசை படுத்தப் போகின்றீர்களா அல்லது இடப் புறமா அல்லது நடுவிலா என்பதை தேர்வு செய்யுங்கள். அது தானாக align ஆகிவிடும்.




Group என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பொருட்களை ஒன்றாக இணைத்து ஒரே பொருளாக கருதச் செய்வது. இதனால் என்ன பயன் என்றால் இரண்டு அல்லது மூன்று படங்கள் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையவை. எப்பொழுதெல்லாம் ஒன்றை நகர்த்துவோமோ அப்பொழுது அடுத்த படத்தை அதற்கு தக்கவாறு நகர்த்துவோம் அல்லது எப்பொழுதெல்லாம் ஒரு படத்தை பெரிதாக்குவோமோ அப்பொழுதெல்லாம் அடுத்த படத்தையும் பெரிதாக்குவோம் என்று வைத்துக் கொள்வோம். அதற்கு இந்த குரூப் என்ற கருவி உதவும். இவ்வாறு செய்ய தேவையான படங்களை Shift கீயை அழுத்தை மௌஸைக் கொண்டு தேர்வு செய்து கொள்ளுங்கள். பின்னர் குரூப் மெனுவிற்குள் சென்று குரூப் என்பதை தேர்வு செய்யுங்கள். பின்னர் நீங்கள் ஏதாவது ஒரு படத்தை நகர்த்தினால் இத்தோடு குரூப் செய்யப்பட்டுள்ள அடுத்த படங்களும் நகரும். ஒன்றை பெரிதாக்கினாலோ சிறிதாக்கினாலோ அடுத்த படமும் பெரிதாகும் சிறிதாகும்.

Rotate உங்களுடைய படத்தை 90 டிகிரி கோணத்திலோ அல்லது 180 டிகிரி கோணத்திலோ திருப்ப உதவும். கண்ணாடியில் பார்ப்பது போன்ற பிம்பத்தை பிளிப் ஹாரிசான்டல் என்ற option உபயோகித்து செய்யலாம்.




*19.9.2010 அன்று காரைக்காலில் "கர்கரேயைக் கொலை செய்தது யார்?" நூல் அறிமுக விழா நடைபெற்றது. முன்னாள் எம்.எல்.ஏ. நிஜாமுத்தீன் தலைமை தாங்கினார். ஓ.எஸ். மணிசேகரன் (தலித் நீல புலி) , பேராசிரியர் சேகர், கிருஷ்ணமூர்த்தி (தி.க.), வைகறை வெளிச்சம் ஆசிரியர் மு. குலாம் முஹம்மது சிறப்புரையாற்றினர். காரை ஹாஜா நன்றியுரையாற்றினார். முஸ்லிம்களும் சகோதர சமுதாயத்தைச் சார்ந்தவர்களும் திரளாகப் பங்கேற்றனர்.*

# புதைக்கப்பட்ட மக்கள்!
# மறைக்கப்பட்ட வரலாறுகள்!

# பெய்ரூத்திலிருந்து ஜெரூசலம் வரை!

### டாக்டர் அங் சுவீ

### தமிழ் வடிவம் : மு.குலாம் முஹம்மத்




## ஷாப்ரா, ஷத்திலா படுகொலைகள்

"அஜீசா விரைவில் பிணமாகிவிடுவாள்" என்ற வரிகள், என்னை வாட்டியெடுத்தியது.

என்ன இது? இந்தத் தாதிப் பெண் அஜீசாவைக் காட்டிக் கொடுத்து விட்டாளா?

அவள் நார்வேயைச் சார்ந்தவள். அவள் சதா சர்வகாலமும் அஜீசாவைச் சுற்றி வந்து கொண்டே இருந்தாள்.

எல்லா நிலையிலேயும், அவள், அஜீசாவை அபாரமாக நேசித்தவள். அவள் எப்படி அஜீசாவைக் காட்டிக் கொடுப்பாள்?

ஆனால் இவர்கள் என்ன செய்தார்களோ தெரியவில்லை.

அவள் உயிருக்கோ தனது கற்புக்கோ ஆபத்து வந்து விடக் கூடாது எனக் காட்டிக் கொடுத்திருந்தால். . .?

என்னவெல்லாமோ என் மனதை ஆட்டிப்படைத்தன. என்னால் எந்த முடிவுக்கும் வர முடியவில்லை.

மனம் வேறொரு திக்கில் ஓடிற்று.

அது, செம்பிறை சங்கத்தின் ஊர்தியில்தான் அவள் சென்றாள். நிச்சயமாக அவர்கள் அஜீசாவின் அருமையைத் தெரிந்தவர்கள்தாம். அவர்களும் காட்டிக் கொடுப்பார்கள் என்று நம்பமுடியவில்லை.

ஒரு வேளை இந்தத் தாதிப்பெண் அதை சொல்லி இருக்கலாம். அவர்கள் செம்பிறைச் சங்கத்திற்கு நெருக்கடிகளைத் தந்து, அவளை மீட்கலாம். பின்னர் கொலை செய்யலாம். அல்லது அவள் இருப்பதாக கூறப்படும், செம்பிறை சங்கத்தின் நிவாரண முகாம்களின் மேல் குண்டுகளை வீசி எல்லோரையும் அழிக்கலாம்.

இந்த இஸ்ரேலவர்கள் மன சாட்சியே இல்லாதவர்களாகத் தானே நடந்து கொள்கின்றார்கள்.

கருவிலிருக்கும் குழந்தையைக் கொலை செய்வதில் இன்பங் காண்பவர்கள். குழந்தையைக் கொலை செய்யவேண்டும் என்ற வெறியில் செம்பிறை சங்கத்தினரையும் அவர்களின் நிவாரண முகாம்களையும் குண்டுகளை வீசி அழித்தால் செம்பிறை சங்கத்தால் முடிந்ததெல்லாம் ஐக்கிய நாடுகள் சபையிடம் முறையிடுவதுதான். அந்த ஐக்கிய நாடுகளின் சபைகள் இவர்களின் கைகளில்தானே இருக்கின்றது.

இப்படியெல்லாம் சிந்தித்த என் மனம் விரக்தியில் வீழ்ந்தது.

அஜீசா ஒரு கட்டத்தில் காஸா மருத்துவமனையைக் காப்பாற்றிட வேண்டும் என்றால்

இந்த யூதர்களோடு நாம் ஆயுத மேந்தி போராடிட வேண்டும். இதோ நான் போர்களம் போகின் றேன் எனப்புறப்பட்டாள். அப் போது அவளை நான் தான் தடுத்தேன். இப்போது அது மிகப்பெரிய தவறாகப்படுகின்றது. அவளை அன்று அப்படியே விட்டிருந்தால் இந்த அநியாயக் காரர்களில் சிலரையாவது அழித்திருப்பாள். அந்தப் போரில் அவளும் வீரமரணம் விரும்பி னாள் என்றே சொல்ல வேண்டும். ஆனால் அன்று நான் தடுத்து விட்டேன் எனக் கைசேதப் பட்டேன்.

இன்னொரு மனம் நாம் அவளைத் தடுத்ததில் தவறேது மில்லை. எத்தனை திறமை அவளுக்கு மருத்துவதுறையில். அவள் எத்தனை உயிர்களைக் காப்பாற்றினாள். எத்தனை புன்பட்ட நெஞ்சங்களுக்கு ஆறுத லாக இருந்தாள். அதனால் அவளைத் தடுத்தது சரிதான் என்றது.

இப்படி என் மனம் விரக்தி, குற்றவுணர்வு, தேறுதல் என அலைக்கழித்து கொண்டிருந்தது.

அஜீசாவைக் காட்டிக் கொடுப்பவர்களோ அவளைப் பிணமாகக் பார்க்கவிரும்பும் இஸ்ரேலியரையோ இறைவன் மன்னிக்க மாட்டான். தண்டிப் பான் (என்றது மற்றொரு மனது )

அந்த அகதிகள் முகாமி லிருந்து பாலஸ்தீன விடுதலைப் படையைச் சார்ந்தவர்கள் அதனால் தீவிரவாதிகள் என்ற போர்வையில் ஆண்களையெல் லாம் வெகுநாள்களுக்கு முன்னரே அகற்றிவிட்டார்கள்.

இல்லையேல் அவர்கள் இந்த இஸ்ரேலியருக்கெதிராகப் போராடி தங்கள் மக்களைக் காப்பாற்றி இருப்பார்கள் என்றது ஒருகட்டத்தில் என் மனம்.

ஒரு மருத்துவர் ஏன் தன்னுடைய எண்ணங்களை யெல்லாம் இப்படி அலைபாய விட வேண்டும் என சிலர் எண்ணலாம். என்னதான் இருந் தாலும் ஒரு மருத்துவர் மருத்துவர் தான்.

எங்களை காஸா மருத்துவமனையிலிருந்து இழுத்து வந்தவர்களில் சிலர் எங்களிடம் நாங்கள் இஸ்ரேல் நாட்டைச் சார்ந்த (யூதர்கள்) வர்களல்ல லெபனானைச் சார்ந்தவர்கள் எனச் சொல்லிட தலைப்பட்டார்கள். நாங்கள் அவர்களை இஸ்ரேலியர் இல்லை என நம்பினால் நாங்கள், ஆட்காட்டும் வேலையைக் காட்டிக் கொடுக்கும் வேலையைத் தாராளமாகச் செய்வோம் என எதிர்பார்த்தார்கள்.

நாங்கள் அவர்களை யூதர் களல்ல என நம்பிட தயாராக இல்லை. காரணம் அங்கே நிரம்ப செய்திதாள்கள் குப்பைமேடாகக் குவிந்து கிடந்தன அனைத்தும் ‘ஹுப்ரு’ மொழியில்தானிருந்தன.

இவர்கள் அருந்திய மது பாட்டில்கள், உணவுகள் டப்பாக் கள் இவையும் அங்கே கிடந்தன. அவற்றில் இஸ்ரேல் நாட்டின் இலச்சனைகளும் அடையாளங் களுமிருந்தன. இதனால் இவர்கள் இஸ்ரேல் நாட்டைச் சார்ந்தவர் களாக இல்லை என்றாலும் இஸ்ரேலின் ஆணைப்படிதான் நிச்சயமாக செயல்படுகின்றார்கள் என்றே நாங்கள் நம்பினோம்.

இப்படியெல்லாம் நான் சூழலை துளாவிக் கொண்டிருந் தேன் என்றாலும் நாங்கள் நெடு நேரமாக நிற்க வைக்கப்பட்டி ருந்தோம்.

அவர்கள் சில நேரங்களில் எங்களிடம் மிகவும் மிருதுவாகத் நடந்துகொண்டார்கள். இன்னும் சில நேரங்களில் எங்கள் உள்ளங் களை புண்படுத்தினார்கள்.

காஸா மருத்துவ மனைக்கு யார் யார் உதவி செய்கின்றார்கள். யார், யார் மருத்துவமனையின் உள் நடத்துகின்றார்கள் அஜீசா வின் பூர்வீகம் என்ன? என்பவன வற்றைப் பற்றிய கேள்விகளைக் கேட்டுக் கொண்டே இருந்தார் கள்.

நாங்கள் இந்தக் கேள்வி களுக்கான பதில்களை கவனமாக தவிர்த்தோம். அவர்கள் சீறி பாய்ந்தார்கள்.

எங்களுக்கு வாய்ப்புக் கிடைக்கும் போதெல்லாம், நாங்கள் காஸா மருத்துவமனை யில் உயிருக்கு போராடிக் கொண்டிருப்பவர்களைப் பற்றி யே கேட்டுக்கொண்டிருந்தோம்.

அந்த அநியாயக்காரர்கள், அதைப்பற்றி கவலையேபட வில்லை.

அவர்களின் கேள்வி களுக்கு நாங்கள் பதில் சொல்லாததும் காஸா மருத்துவ மனையைப் பற்றியே நாங்கள் பேசிக் கொண்டிருந்ததும் அவர்களை எரிச்சலூட்டி இருக்க வேண்டும். ஆதலால் எங்களைக் கொலை செய்துவிடுவதாக மிரட்டினார்கள்.

எங்களையெல்லாம் ஓர், சுவரை நோக்கிநகரச் சொன்னார்

கள். சுவற்றில் கையை வைத்த படியே எங்களை நிற்க சொன்னார்கள். நாங்கள் கையை உயர்த்தியபடி நின்றோம். சுவரின் மறுபுறம் புல்டோசர்கள் கர்ஜித்துக் கொண்டிருந்தன. பாலஸ்தீன முஸ்லிம்களின் புகலிடமாக இருந்த அகதிகள் முகாம்கள் மண்ணோடு மண்ணாக ஆகிக்கொண்டிருந் தன. எல்லோரையும் எல்லா வற்றையும் மண்ணோடு மண் ணாக ஆக்கிவிடுவதில் அவர்கள் வீடுகளின் இடிபாடுகள், உயி ரோடு இருப்பவர்கள் இறந்தவர் கள் என்ற எந்தப் பாகுபாட்டை யும் காட்டிடவில்லை. எல்லா வற்றையும் எல்லோரையும் ஒன்றாய் எந்தப் பாகுபாடுமின்றி அழித்துக் கொண்டிருந்தன புல்டோசர்கள்.

வேண்டுமென்றே எங்கள் கண்களில் அவற்றைப்படச் செய்தார்கள். அதனால் நாங்கள் பீதிவயப்படுவோம். அவர்களு டன் ஒத்துழைப்போம் என்று எதிர்பார்த்தார்கள்.

நாங்கள் அச்சப்பட வில்லை. இந்த மிருகங்களோடு ஒத்துழைப்பதைவிட மடிந்து போவதே மாண்புடையது என நம்பினோம்.

இதில் அதிசயம் என்ன வெனில் நாங்கள் எங்களுக்குள் பேசிடவோ, முடிவுகளை எடுக்க வோ எந்த அவகாசமும் அங் கிருக்கவில்லை. ஆனால் தெய்வா தீனமாக எல்லோலருடைய எண்ணங்களும் ஒன்று போலவே இருந்தன.

எங்களை அவர்கள் கொலை செய்ய முடியாது காரணம் நாங்கள் உலகின் பல்வேறு பகுதிகளி லிருந்தும் வந்தவர்கள். அவர்கள் எங்களைக் கொலை செய்தால் உலக நாடுகளின் வெறுப்பை ஒட்டுமொத்தமாக சம்பாதிக்க வேண்டும். இந்த அச்சம் அவர்களுக் குண்டு.

ஆனால் இதையே இன்னொரு கோணத்தில் பார்த்தால் அவர்கள் எதைப்பற்றியும் கவலைப் பட மாட்டார்கள் என் பதையும் நாங்கள் அறிவோம்.

எங்களை அவர்கள், கொலை செய்ய துணிந்தால் அதற்கும் கவலைப்படுவதில்லை. அந்த மருத்துவமனையில் வாடும் நோயாளிகளுக்காக நாங்கள் வாதாட தொடங்கினோம்.

அவர்கள் எங்களை அசிங்க மாக நடத்தத் தொடங்கினார்கள். எங்களை அவமானபடுத்துவது அவர்களின் நோக்கம்.

அந்த அநியாயக்காரர்களில் சில பெண்களுமிருந்தார்கள். அந்தப் பெண்களில் ஒருத்தி நல்ல உயரம், வசீகரிக்கும் கண்கள், அவள் எங்களைப் பார்த்து நாங்கள் எந்தெந்த மதத்தைச் சார்ந்தவர்கள் எனக் கேட்கத் தொடங்கினாள்.

நான் அவளிடம் நானொரு கிருஸ்தவ பெண் எனச் சொன்னபோது அவள் என்னிடம்,

‘நீ ஒரு கிருஸ்தவப் பெண் ணாக இருந்தும் பாலஸ்தீன மக்க ளுக்கு உதவுகின்றாயா? நீ அழுகிப் போனவள்’



“Yor are a Christian and you dare to help Palestineain! Your are filthy” (Page 64)

பின்னர் எங்களை ஒன்று திரட்டி துப்பாக்கியால் சுடுவதைப் போல் நடித்து அச்சமூட்டினார்கள். (Mock Execution). நான் இப்போது நான் அவர்களிடம் தைரியமாக வாதிட்டேன். எங்களைக் கொலை செய்யுங்கள் அல்லது ‘காஸா’ மருத்துவமனைக்கு அனுப்புங்கள் என்றேன்.

இந்தக் கேள்வியால் ஓர் தீர்க்கமான முடிவுகிடைக்கும் என்றே கேட்டேன்.

ஆனால் அந்த இரக்கமற்றவர்கள் தங்கள் நிலையை மாற்றிக் கொள்வதாக இல்லை. அவர்கள், எங்கள் உடைமைகளை ஒப்படைத்திடும் படி கோரினார்கள்.

அவர்கள் எங்களை இழுத்து வந்த நிலையில் எங்கள் உடைமைகள் என்று எதுவுமில்லை. அப்போது அவகாசமிருந்த சிலர், தங்கள்

உடைமைகளுள் சிலவற்றை எடுத்து வந்திருந்தார்கள். அவர்கள் ஒப்படைத்தார்கள். என்னிடம், ஒரு மருத்துவர் பணிசெய்து கொண்டிருக்கும் போது அணியும் உடை மட்டுமே இருந்தது. அதனால் நான் உடைமைகள் என வந்தபோது எதுவுமில்லாததால் இல்லை என்றேன். ஆனால் அந்தப் பாதகர்கள், நீ அணிந்திருக்கும் மருத்துவ உடையை மாற்று என்றார்கள்.

நான் மறுத்தேன்.

அந்த வசீகர நயனங்களுக்குச் சொந்தக்காரி என் மருத்துவ உடையை வலுக்கட்டாயமாக கழற்றினாள். நான் தடுக்க முயன்றேன் பயனற்றுப் போயிற்று.

என் உடம்பை ஓர் உலுக்கு உலுக்கி என் உடையைக் கழற்றிவிட்டாள்.

பின்னர் அங்கே உயர்ந்து வளர்ந்து நின்ற ஓர் உருவம், இவர்களையெல்லாம் இஸ்ரேல் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்றது.

எங்களையெல்லாம் அங்கே அழைத்துச் சென்றார்கள். அமெரிக்க தூதரகத்தை அடுத்துத் தான் இஸ்ரேலிய தலைமையகமிருந்தது.

அமெரிக்க தூதரகத்தை ஏறெடுத்துப் பார்த்தேன். மாடியில் அமர்ந்தபடி இந்தப் படுகொலைகளை தொலைநோக்கிகள் வழியாக இந்த ஷப்ராஷத்திலா படுகொலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள் அமெரிக்கர்கள்.

இஸ்ரேலின் தலைமையகம் சென்றோம். அங்கேயும், தொலைநோக்கிகள் வழி பலர் ஷாப்ரா ஷத்திலா படுகொலைகளைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

என்ன மனிதர்கள் இவர்கள். இந்நிலையில் நிரம்ப காயம் பட்டவர்கள் ஷாப்ரா ஷத்திலா நோக்கி வந்து கொண்டிருப்பார்கள். ஒரு மருத்துவர் என்ற வகையில் நாம் இப்போது மருத்துவமனை சென்றால் சில பல உயிர்களைக் காப்பாற்றிட முடியும் என நினைத்தேன்.

எப்படியும் இவர்களிடம் வாதாடி காஸா மருத்துவமனை சென்றுவிட வேண்டும் என நினைத்தேன்.

எங்களை சில இஸ்ரேலிய அதிகாரிகளிடம் ஒப்படைத்தாள். அந்த வசீகர கண்ணுக்குச் சொந்தக்காரி.

நான் அந்த அதிகாரியிடம் நாங்கள் உடனேயே காஸா மருத்துவமனை செல்லவேண்டும் என்றேன்.

அதற்கவர் - காஸாவை நாங்கள் மயானமாக்கிவிட்டோம். நீங்கள் உங்கள் நாடுகளுக்கு வேண்டுமென்றால் போகலாம் என்றனர். நான் மலைத்து நின்றேன்.

**- தொடரும்**


**வெளிவந்த இரண்டே வாரங்களில் முதல் பதிப்பின் பிரதிகள் விற்று தீர்ந்தது**

**தற்போது பரபரப்பான விற்பனையில் தமிழில் . . .**



**கர்கரேயை கொலை செய்தது யார்?**



**மூன்றாம் பதிப்பு வாங்கிவிட்டீர்களா?**

**விலை ரூ. 200/-**

தொடர்புக்கு : **வேர்கள் வெளியீட்டகம்,**

52/1, மண்ணடித் தெரு, 4வது மாடி, அறை எண் -7, மண்ணடி, சென்னை - 600 001.

தொலைபேசி : 044-45566909



Owned and Published by M. Gulam Mohamed from 235 Peters Road, Royapettah, Chennai - 600 014. Editor M. Gulam Mohamed, Printed by M. Gulam Mohamed, Wonder Prints, 14, Weavers Street, Triplicane, Chennai - 600 005.

அளவில்லா அருளாளன் நிகரில்லா அன்புடையோன அல்லாஹ்வின் திருப்பெயரால்

# HALAL INDIA PVT. LTD.
# ஹலால் இந்தியா பிரைவேட் லிமிடெட்

நாங்கள் Halal India Pvt. Ltd. எனும் இந்திய அரசு அங்கீகாரம் பெற்ற ஓர் நிறுவனத்தை இந்தியாவில் தொடங்கியுள்ளோம். அது இந்தியாவில் தயாரிக்கப்படும் அனைத்துவகையான உணவுப்பொருட்கள், இறைச்சி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மருந்து வகைகள், போன்ற தயாரிப்புகளுக்கு சட்டபூர்வமான ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

உலகின் பல நாடுகளில் ஹலால் சின்னம் பொறிக்கப்பட்ட பொருட்களை மட்டுமே முஸ்லிம்கள் உபயோகக்கின்றனர். ஹலால் சின்னம் பொறிக்கப்படாத பொருட்களை முஸ்லிம்கள் முற்றிலுமாகப் புறக்கணித்துவிடுகின்றனர் என்பது நடைமுறையாகும்.

ஆனால் முஸ்லிம்கள் அதிகமாக வாழும் நாடுகளில் இரண்டாம் இடம் வகிக்கும் இந்தியாவில் இதற்கான விழிப்புணர்வு முற்றிலும் இல்லை. எனவே இந்திய முஸ்லிம்கள் தாம் உபயோகிப்பது ஹலால்தான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள இயலாத சூழ்நிலையில் இருப்பதைத் தவிர்க்கும் விதமாகவே ஹலால் இந்தியா பிரைவேட் லிமிடட் எனும் நிறுவனம் தொடங்கப்பட்டுள்ளது.

இது இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் தலைசிறந்த முஸ்லிம் அறிஞர்கள், ஆய்வாளர்கள் மற்றும் பரிசோதனை மையங்களைக் கொண்ட நிறுவனமாகும். இந்தியாவின் பிரபல நிறுவனங்கள் மற்றும் பன்னாட்டு நிறுவனங்களைத் தொடர்பு கொண்டு அதில் தகுதியானவற்றிற்கு ஹலால் சான்றிதழ் வழங்கும் நடவடிக்கையை வெற்றிகரமாகத் தொடங்கியுள்ளோம். பல நாடுகளில் Halal India Pvt. Ltd. வழங்கும் ஹலால் சின்னம் பொறிக்கப்பட்ட பொருள்களை மட்டுமே இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்ய வேண்டும் என்ற உறுதி மொழியையும் பெற்றுள்ளோம்.

இந்த சேவையில் நீங்களும் பங்கேற்கும் விதமாக நீங்கள் ஓர் பயனீட்டாளர் (Consumer) என்ற உரிமையில் கடைகள், Shopping Centre களில் பிஸ்கட், சாக்லேட், மென்பானங்கள் Cool Drinks போன்ற உணவுப்பொருட்கள், இறைச்சி வகைகள், அழகுசாதனப் பொருட்கள், மருந்து வகைகள் ஆகியவற்றை வாங்கும்போது இதில் ஹலால் சின்னம் பொறிக்கப்படவில்லையே, நாங்கள் இதை எப்படி உபயோகிக்க முடியும் என்பதுபோன்ற விழிப்புணர்வுக் கேள்விகளைக் கேட்பதன் வழியே அவை விரைவில் ஹலால் சான்றிதழ் பெறுவதற்கு நீங்களும் துணைசெய்யலாம்.

எமது சேவைகள் குறித்த விபரங்களைத் தெரிந்து கொள்ளவும் தங்களது மேலான ஆலோசனைகளை வழங்கவும் தொடர்பு கொள்க. www.halalindia.co.in

**தொடர்புக்கு: விற்பனை எண் - 9884243402, ஷரீப் -9176491278**

Vaigarai Velicham - Tamil Monthly RNI TC No. TNTAM / 17673 / 17.08.07 RNI : TNTAM/2008/25045
Postal Registration No. TN/CH(C)/148/08-10 & DIS. NO. 1477/07 Posted at Egmore RMS Patrika Channel


# தைபா ஹஜ் சர்வீஸ்

## 2010ம் ஆண்டு புனித ஹஜ் பயண அழைப்பு

### இன்ஷா அல்லாஹ்

மக்கா - மதீனா - மீண்டும் மக்கா - ஹஜ் அமல்கள் முடிந்து
மக்காவிலிருந்தே தாயகம் திரும்பும் பயண ஏற்பாடுகள்
எமது பயண அமைப்பில் அஜீஸிய்யா என்பதே இல்லை.
சென்னை - ஜித்தா - சென்னை நேரடி விமானப் பயணம்
எமது தலைமை வழிகாட்டி மௌலானா இல்யாஸ் ரியாஜி
(தலைமை இமாம் ஈத்கா மஸ்ஜித் மந்தைவெளி, சென்னை)

**பயணத் தேதி : 13.10.2010**

**தாயகம் திரும்பும் தேதி : 23.11.2010**

**பயண நாட்கள் 40**

தங்குமிடம்
மக்கா : ஹில்டன் டவர்ஸ் - மதீனா : தல்லா தைபா
துல்கஅதா பிறை 26 முதல் தாயகம் திரும்பும் வரை மக்காவில்
ஹரம் அருகில் அர்ரவ்ளா ஹோட்டலில் தங்கும் ஏற்பாடு

# TAIBA HAJ SERVICE

طيبة

6/8, Second Floor, Rutland Gate IInd Street,
Thousand Lights, Chennai - 600 006.
Tel.: 044-28332770 / 28332771 / 9941902786 / 9941930786 Fax : 28332769
Cell:94448 54653 / 9994258002 Email : taibahajservice@gmail.com

IATA